கல்கி



KALKI ஜூலை 17.1955

4



நாளுக்கு நாள் அதிக மிருது
வான எழிலோங்கும்
சருமம் . . .
கேடில்* கலந்த
ரெக்ஸோனு
மறைந்திருக்கும்
உங்கள் அழகை
வெளிப்படுத்தட்டும்
ரெக்ஸோனுவின் கேடில்
கலந்த நுரையை உங்கள் சருமத்
தில் மெதுவாகத் தேய்த்து
பிறகு கழுவுங்கள். உங்கள்
சருமம் நாளுக்கு நாள் அதிக
மழுமழுப்பாயும், மிருதுவா
னதையும் காண்பீர்கள்
அதனுல் புதுப் பொலிவு
டன் விளங்குவீர்கள்.
* சருமத்திற்கு ஊட்ட
மளித்து மிருதுவாக்கும்
எண்ணெய்களின் பிரத்
தியேகக் கலவையின்
ரெஜிஸ்டர் செய்யப்
பட்ட பெயர்.
பெரிய சைஸிலும்
கிடைக்கிறது
Rexona
ரெக்ஸோனு
கேடில் கலந்த சோப் இது ஒன்றே
R.P. 131-50 TM

மலர் 14
இதழ் 51

கல்கி
பொருளடக்கம்

மன்மத ௵
ஆடி 1

1955 ஜூலை 17

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.



விரைவில்
வருகிறது!
....ஆர். ஆர். பிக்சர்ஸ்....
குலேபகாவலி
வசனம்.பாடல்கள்
தஞ்சை ராமையாதாஸ்
டைரக்ஷன்
ராமண்ணா
தமிழ்
விநியோகஸ்தர்கள்—சென்னை நகரம் . கே. எஸ். பிக்சர்ஸ், வைட்ஸ் ரோடு, சென்னை-6. வட & தென்னாற்காடு, செங்கல்பட்டு, சித்தூர் (புதுச்சேரி உள்பட): தேவ பிக்சர்ஸ், குடியாத்தம் திருச்சி, தஞ்சாவூர் (புதுக்கோட்டை உள்பட): ராணி பிக்சர்ஸ், 168, மதுரை ரோடு, திருச்சி ராப்பள்ளி. மதுரை, ராமநாதபுரம் & திருநெல்வேலி: வியாசர் பிலிம்ஸ் லிமிடெட், மதுரை சேலம்: எஸ்பியெஸ் பிக்சர்ஸ், நாமக்கல். மைசூர் ராஜ்யம் (தென் கன்னடம், குடகு உள்பட): விஜயா டாக்கி டிஸ்ட்ரிபியூட்டர்ஸ், பெங்களூர்-2. கோயமுத்தூர் ஜில்லா: ஆறுமுகம் பிக்சர்ஸ் பொள்ளாச்சி. நீலகிரி ஜில்லா: ஆனந்தா பிலிம்ஸ், கோயமுத்தூர் மலபார்: சென்ட்ரல் பிக்சர்ஸ், கோட்டயம். எப்.எம்.எஸ்.: இந்தியன் பிலிம் கம்பைன்ஸ் லிட்., பம்பாய்
சென்னையில்: ஸ்ரீ கிருஷ்ணா, கெயிட்டி, ராஜகுமாரி, உமா



மலர் 14 | இதழ் 51

தமிழ்த்திரு நாடு தன்னைப் - பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார்

மன்மத ௵ ஆடி 1

நல்ல அறிகுறி

"பயப்படாதீர்கள்: அதிகப்படுத்திச் சொல்லுகிறீர்கள்: இதை எப்படி விட்டு விட முடியும்? இந்த ஆயுதத் தயாரிப்பு இல்லாமல் நாம் சும்மா இருந்தால் குலநாசமே ஏற்பட்டு விடும்!" என்றெல்லாம் அணுகுண்டு அமெரிக்க வாதிகளும், அவர்களோடு சேர்ந்து சில ஆங்கிலப் பக்க வாத்தியக்காரர்களுமாகத் திரும்பத் திரும்பப் பல்லவி பாடி வந்தனர்!

நம்முடைய நாட்டிலுங்கூடச் சிலர், ராஜாஜி சொல்லும் பீதிகளை உலகத்தில் நாகரிக நாடுகளும் அறிவாளிகளும் ஒப்புக் கொள்ளவில்லை என்று சொல்லித் தங்கள் தங்கள் சொந்தக் காரியங்களில் நல்ல சம்சாரிகளாகக் கவனம் செலுத்தி வந்தார்கள். இப்போது உலகத்திலெல்லாம் அறிவிலும் ஆராய்ச்சியிலும் கொடிமுடி ஏறி நிற்கும் பௌதிக நிபுணர்கள் ஒன்று சேர்ந்து, உலக மக்களுக்கு என்று ஒரு அறிக்கை விடுத்திருக்கிறார்கள். காலஞ் சென்ற பிரபல விஞ்ஞானி ஐன்ஸ்டைனும் அந்த அறிக்கையில் கையெழுத்திட்டார்.

ஜூலை 8-ந் தேதி பத்திரிகை நிருபர்களிடம் பேசுகையில் பிரபல பிரிட்டிஷ் விஞ்ஞானி பெட்ராண்ட் ரஸ்ஸல் குறிப்பிட்டார்:

"ஐன்ஸ்டைனும் நானும் சேர்ந்து முதன் முதல் இந்த அறிக்கையைத் தயாரித்தோம். மரணம் அடைவதற்கு ஒரு வாரத்துக்கு முன்பு ஐன்ஸ்டைன் இந்த அறிக்கையில் கையெழுத்திட்டார்."

விஞ்ஞானி ரஸ்ஸலும் அகில உலகப் பிரசித்தி பெற்ற ஐன்ஸ்டைனும் மற்றும் ஏழு பிரபல விஞ்ஞானிகளும் சேர்ந்து விடுத்துள்ள இந்த அறிக்கை, அணு ஆயுத ஒழிப்புக்கான முதலாவது ஆரம்ப நடவடிக்கை என்றும், இது குறித்து ஒரு சர்வதேச விஞ்ஞானிகள் மகாநாடு நடத்த வேண்டும் என்றும் பத்திரிகை நிருபர்களிடம் ரஸ்ஸல் தெரிவித்திருக்கிறார். இந்த அறிக்கை பத்திரிகைகளில் எல்லாம் விவரமாக வெளியாகி யிருக்கிறது.

"இந்த அணுப் பரீட்சையையும் பிரயோகத்தையும் விட்டு விடுங்கள்; யுத்தம் என்கிற பெரிய பிசாசையும் விட்டு விடுங்கள்!" என்று இந்த விஞ்ஞானிகள் எச்சரிக்கை செய்திருக்கிறார்கள்.

"ஞான மார்க்கமே மேல்!", "பக்தி மார்க்கமே மேல்!", "வாழ்க்கையில் சீலமே எல்லாவற்றையும்விட மேல்!" என்றெல்லாம் வெறும் தர்க்கமே பேசி, உய்யும் வழியை மறந்து வந்த மனிதர்களைப் போல, இந்த விஷயத்திலும் விவாதம் செய்து கொண்டே யிருந்து, அந்த விவாதத்தில் காரியத்தை மறந்துவிட்டு நாசம் செய்து விடக் கூடாது என்று கேட்டுக் கொள்ளுகிறோம்.

அணுவைப் பிளந்து, ரௌத்திர சக்தியை வெளியிட்டு உலகத்தை நாசம் செய்கிற பெருங்கேடான இந்த விருச முயற்சிகளை மூர்க்க மனிதர்கள் உடனே நிறுத்தி விடவேண்டும்.

நம்முடைய தலைவர் நேரு இங்கிலாந்திற்குப் போய்ச் சேர்ந்த தினத்தில் இந்த நல்ல அறிக்கையிலே பெரியோர்கள் கையெழுத்திட்டு வெளியிட்டதானது, உலக க்ஷேமத்திற்கும் இந்தியப் புகழுக்கும் ஒரு நல்ல அறிகுறியாகும்.

தமிழில் அர்ச்சனை

தமிழில் அர்ச்சனை செய்வது சம்பந்தமாக மீண்டும் சர்ச்சை நடப்பது குறித்து வருந்துகிறோம். மொழி சம்பந்தமான ஆராய்ச்சி தீவிரமாகி, கடைசியில் கடவுளையே மறந்து விடுகிற விபரீத நிலைக்கு இடம் ஏற்பட்டு விடுமோ என்று அஞ்சுகிறோம்!

தமிழில் அர்ச்சனை செய்வது என்றால் ஸம்ஸ்க்ருதச் சொற்களைத் தமிழில் மாற்ற வேண்டும் என்பதல்ல பொருள். தமிழில் அர்ச்சனை வேண்டும் என்று சொல்பவர்கள் யாரும் அப்படிக் கூறியதாக நாம் எண்ணவில்லை.

ஸம்ஸ்க்ருதத்தில் உள்ள பகவன் நாமங்கள் எல்லாம் பலமுறை ஓதி ஓதி அந்த ஒலி உருவங்களே மக்கள் உள்ளத்தில் உணர்ச்சி ஊட்டும் சக்தியைப் பெற்றவை. இதை யாரும் மறுப்பதற்கில்லை. அதே போல், தமிழிலும் தேவாரம், திருவாய் மொழி போன்ற பாடல்களில் உள்ள துதி மொழிகள் எல்லாம் எத்தனையோ தலை முறைகளாக ஓதி ஓதி உரம் பெற்றவை. அந்தச் சொல் அடுக்குகளைக் கேட்ட மாத்திரத்திலேயே, பக்தியோடு கூடி நிற்கும் மக்களின் உள்ளத்தில், கனிவும் பரவசமும் உண்டாவது இயற்கை.

ஆடக மதுரை அரசே போற்றி!
கூடல் இலங்கு குரு மணி போற்றி!
மூவா நான்மறை முதல்வா போற்றி!
உடையாய் போற்றி! உணர்வே போற்றி!
ஐயா போற்றி! அணுவே போற்றி!
நெறியே போற்றி! நினைவே போற்றி!
வானோர்க்கு அரிய மருந்தே போற்றி!
அருமையில் எளிய அழகே போற்றி!
தென்னாடுடைய சிவனே போற்றி!
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!

இந்தத் தோத்திர மொழிகள் மொழி பெயர்ப்புக்கள் அல்ல. மாணிக்க வாசகரின் திருவாக்குக்கள். இவற்றைப் போலவே தமிழ் பக்தி நூல்களிலிருந்து அர்ச்சனைக்கு உரிய இன்னும் எத்தனையோ மொழிகளை எடுத்துக் கோவைப்படுத்திப் பல பெரியோர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். 'தமிழா, வடமொழியா' என்ற இந்தச் சர்ச்சை தொடங்குவதற்கு முன்பே இவற்றை வெளியிட்டிருக்கிறார்கள். ராமகிருஷ்ண மடங்களிலிருந்து வெளியாகியுள்ள சில நூல்களில் தமிழ் அர்ச்சனைக்கு அருமையான முறையிலே பழந் தமிழ்ச் சொல் அடுக்குகளைத் தேர்ந்தெடுத்துப் பிரசுரித்திருக்கிறார்கள்.

ஸம்ஸ்க்ருதத்தில் உள்ள அர்ச்சனை மொழிகளும் இந்த வகையில் சேர்த்துக் கோக்கப்பட்ட மொழித்தொடர்களேதான். அஷ்டோத்திரங்களும் சகஸ்ரநாமங்களும், பிற்காலத்துப் பதினென் புராணங்களிலிருந்து பொறுக்கி எடுத்துச் சேர்க்கப்பட்ட அடுக்கு மொழிகள் தான். அவை மந்திரங்கள் அல்ல. தோத்திர மொழிகளே.

கோடைக்கானலில் பத்திரிகை நிருபர்களிடையே பேசும்போது நமது ராஜ்ய விவசாய மந்திரி பக்தவத்சலம் அவர்கள் இந்தக் குழப்பத்தில் சிக்கிப் போயிருக்கிறார். என்றாலும், "தமிழில் அர்ச்சனை செய்ய வேண்டும் என்று கோருபவர்கள், தேவாரம், திருப்பாவை போன்றவைகளுக்குக் கடவுள் வணக்கத்தில் முக்கியம் அளித்துத் தமிழ்ப் பாக்களைப் பாட வேண்டும்!" என்று கூறியிருக்கிறார். அருமையான யோசனை. அதே சமயம், அர்ச்சனைக்கும் அந்த மொழிகளையே எடுத்து ஓதுவது மிகவும் பொருத்தமே என்பதைக் குறிப்பிட விரும்புகிறோம்.

தமிழில் "போற்றித் திருவகவல்" என்பதாக ஒருவகைப் பாடல்கள் இருக்கின்றன. இந்தப் பாடல்களின் அமைப்பையும் நோக்கத்தையும் ஆராய்ந்து பார்த்தால், அர்ச்சனை முறையில் இவை ஓதப்படுவதைக் குறித்து யாருக்கும் சந்தேகம் இராது. அகவல், (அகவுதல்) என்ற சொல்லுக்கே பொருள் அதுதான்.

தமிழையும், வடமொழியையும் ஆராய்ந்து கற்று இந்த இரண்டு மொழிகளிடத்தும் உண்மையான பற்று இருந்தால், விபரீதமான ஆரோக்கியமற்ற எண்ணங்கள் ஒழியும். மொழிகளுக்கு இடையே உயர்வு தாழ்வு கற்பிக்கும் மனப்பான்மை நீங்கும்.

தமிழிலே இறைவனைத் துதித்து, தமிழிலே அடியார்களும், தொண்டர்களும் துதிப்பதற்காக என்றே அநேக கட்டளை முறைகளையும் சொல் அடுக்குகளையும் ஆக்கித் தந்த நமது நாயன்மார்களும், ஆழ்வார்களும் தமிழோடு ஸம்ஸ்க்ருத மொழியிலே பக்தியும் பாண்டித்தியமும் நிரம்பியவர்கள். மந்திர சக்தி வாய்ந்த தமிழ் வழிபாட்டு முறையை வகுத்த திருமூலர் போன்ற சித்தர்கள் எல்லாம், கயிலாய பரம்பரையிலே ஞானம் கண்ட பெரியோர்கள். 'கட்டளை' என்ற தமிழ்ச் சொல்லுக்குள்ள பொருளையும், அந்தக் கட்டளைகளில் வகுக்கப்பட்ட தமிழ் மந்திர முறைகளையும் அறிவோடு சிந்தித்துப் பார்த்து, இந்த வற்றல் மொழிச் சர்ச்சையை விட்டொழிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம். எந்த மொழியில் யார் வழிபட்டாலும் அந்த மொழியிலே அவர்களோடு தெய்வத் தொடர்பு உண்டாகிறது என்பதே உண்மை. மந்திர ஒலி என்ற சாதனம் பாஷையின் வரம்புகளைக் கடந்த ஒரு நுட்பம். அந்த நுட்பத்தை உணராமல், மொழிகளுக்கு இழுக்குச் சொல்லி, விபரீதச் சேற்றிலே தெய்வ நினைவை அமுக்கி விட வேண்டாம் என்று ஆஸ்திக நன்மக்களை வேண்டுகிறோம்.

கல்லூரியில் கலைச் சொற்கள்

கல்லூரியில் தாய்மொழி மூலமே கல்வி போதனை நடக்கவேண்டும் என்றும், விஞ்ஞான விஷயங்களைத் தமிழிலேயே கற்பிக்க வேண்டும் என்றும் சமீபத்தில் கூடிய கல்வி மகாநாட்டில் பேசினார்கள் அல்லவா! இப்பொழுது அது சம்பந்தமாக வழி வகைகள் ஆலோசனை செய்யப்பட்டு வருவதாக அறிகிறோம். இந்த சந்தர்ப்பத்தில் நமது ஜூலை 10ம் தேதி இதழில் வெளியான டி. கே. சி. யின் கடிதத்தைக் கல்வி மந்திரிக்கும், சம்பந்தப்பட்ட மற்ற அறிஞர்களுக்கும் நினைவூட்ட விரும்புகிறோம்.

'கலைச் சொல் கமிட்டி'யில் இருப்பவர்கள் எல்லாம் சையன்ஸை மறந்துவிட்டு பாஷையிலேயே தங்கள் கவனத்தை யெல்லாம் வீணுக்கு

கிருர்கள் என்பதை டி. கே. ஸி. தமது கடிதத்தில் அழகாகச் சொல்லி யிருக்கிருர்கள்.

"அவர்களுக்கு ஒரே நோக்கம் வட மொழியை விருத்தி பண்ணிவிட வேண்டும். அல்லது தமிழை விருத்திபண்ணிவிடவேண்டும். ஸையன்ஸ் எப்படியேனும் போகட்டும்."

இந்த வாக்கியத்துக்குள்ளே இருக்கிற உண்மையை நாம் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும்.

மேல் நாட்டவர்கள் கண்டு பிடித்த நூதன விஷயங்கள் இங்கு வந்தபோது, அவற்றிற்கான பெயர்களும் கடல் கடந்து வந்தன.

"நாமும் அந்தப் பெயரையே இட்டு அழைத்தால் கேடு ஒன்றும் விளைந்துவிடாது. நாளடைவில் வேறு பெயர் இட்டு நம்மவர்கள் அழைக்க ஆரம்பித்தால் அதைச் சேர்த்துக் கொள்ளுகிறது. ஆனுலும் மேல் நாட்டு ஸையன்ஸோடு கலந்து கொள்வதற்கு மேல் நாட்டார் நாமகரணம் செய்தபடியே பெயர் வைத்துக் கொண்டால் பிரயோஜனமாய் இருக்கும்" என்பது டி.கே.ஸி.யின் கொள்கை. ராஜாஜியும் ஸ்டாதம் அவர்களுக்கு எழுதிய கடிதத்தில் இக் கொள்கையையே பதினெட்டு ஆண்டுகளுக்கு முன்பு வெளியிட்டார்கள்.

டி. கே. ஸி. அவர்கள் ஹிந்து மத தரும பரிபாலன சபையின் கமிஷனராக இருந்த போது, தமிழில் விஞ்ஞான விஷயங்களைச் சொல்லிக் கொடுப்பது சம்பந்தமாக ஆராய்ச்சி செய்வதற்கு ஒரு 'யூனிவர்ஸிடி கமிஷன்' நியமிக்கப்பட்டது. அந்தக் கமிஷனுக்கு முன் டி. கே. ஸி. அப்பொழுது வாக்கு மூலம் கொடுத்தார்கள். அந்த வாக்குமூலத்தில் இந்தக் கருத்தையே வற்புறுத்தி யிருக்கிருர்கள்.

தமிழிலும் கல்வியிலும் இணையற்ற ஈடுபாடு கொண்டிருந்த டி. கே. ஸி. அவர்களின் கருத்தை, நமது கல்வி மந்திரியின் கவனத்துக்குக் கொண்டு வருகிருேம். புதிதாகச் சொற்களை ஆக்கி அவற்றை உபயோகித்துப் பாடப் புஸ்தகங்கள் எழுதப்படும் வரை, தாய் மொழி மூலம் போதனை நடத்துவதைத் தள்ளிப்போட வேண்டும் என்று காத்திராமல், இந்த யோசனையை அநுசரித்துக் கல்லூரிகளில் போதனையை ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகளை உடனடியாகச் செய்ய வேண்டும்.


தமிழ் நாட்டில் இப்பொழுது ஏற்பட்டுள்ள விழிப்பைக் கல்லூரித் தலைவர்களும் அதிகாரிகளும் கண்ணைத் திறந்து பார்க்க வேண்டும்.

ஆங்கிலத்தின் மூலம் கற்ற விஷயத்தை, பிறருக்கு வெளியிட்டுச் சொல்வதற்குக் கூட ஆங்கில பாஷைதான் வேண்டும் என்ருல் அந்த நிலை ஒரு கேலிக் கூத்து. எந்த விஷயத்தையும் யாவருக்கும் புரிகிற முறையிலே எடுத்து விளக்குவதிலேதான் அறிவின் தெளிவு இருக்கிறது. அத்தகைய தெளிவைத் தமிழ் உலகம் கல்வி நிபுணர்களிடம் எதிர்பார்க்கிறது. பிரதி பதங்களைத் தேடுவதிலேயே நேரத்தை வீணுக்காமல், அந்தந்த ஸங்கேதச் சொற்களை அப்படி அப்படியே வைத்துக் கொண்டு விளக்கங்களை மட்டும் தாய் மொழியில் நடத்த ஆரம்பிப்பது ஒன்றே இதற்கு வழியாகும்.

வெற்றியுடன் திரும்புகிறார்!




நாணய சபை!



பாகிஸ்தான் அரசியல் நிர்ணயசபை சமீபத்தில் கூடியது.

வீண் பிடிவாதம்!



இந்திய சர்க்கார் கல்வி மந்திரி மௌலானா அபுல்கலாம் ஆஸாத் எவ்வளவோ முயற்சி செய்தும் இந்தியக் காரியாலய நூல்நிலையப் புத்தகங்களைத் தர பிரிட்டன் பிடிவாதமாக மறுக்கிறது!


என்னிடமிருந்து தெரிந்துகொள்- ஆடைகள் அழகாக அமைய
எப்பொழுதும்
கடாவ்
வாயில்
உள் நாட்டு சரக்குகளையே
வாங்குங்கள் — நல்ல ரக
மாக வாங்குங்கள்.
அணிந்துகொள்

என்ன சேதி?

போப்பாண்டவர்—நேருஜி சம்பாஷணை

பாரத நாட்டைச் சேர்ந்த கோவா தங்கள் ஆட்சியிலேயே இருக்க வேண்டும் என்பதற்குப் போர்ச்சுகல் சர்க்கார் பல காரணங்கள் கூறி வந்தனர். அக் காரணங்களில், கோவாவில் கத்தோலிகர்கள் ஏராளமாக இருப்பதாலும், கோவா இந்தியாவுடன் சேர்ந்துவிடும் பட்சத்தில் அவர்களுடைய சம்பிரதாயத்துக்கு ஆபத்து ஏற்படும் என்றும் போர்ச்சுகல் சர்க்கார் கூறியது முக்கியமானது என்று விஷயமறியாதவர்கள் கருதியிருக்கலாம். ஆனால் இதற்கு இந்தியாவில் உள்ள எண்பது லட்சம் கத்தோலிகர்கள் ஏற்கெனவே பதில் அளித்து விட்டார்கள். சுதந்திர இந்தியாவின் ஆட்சியில் எண்பது லட்சம் கத்தோலிகர்கள் தங்கள் மத, அரசியல் உரிமைகளுக்கு யாதொரு ஆபத்தும் ஏற்படாமல் வாழ்ந்து வருகிறார்கள்; அப்படியிருக்கக் கோவாவில் உள்ள சுமார் இரண்டு லட்சம் கத்தோலிகர்களுக்கு மாத்திரம், கோவா இந்தியாவுடன் ஒன்றுபட்டு விடுவதால் ஆபத்து ஏற்படும் என்று போர்ச்சுகல் அதிகாரிகள் கூறியது ஏமாற்றுப் பிரசாரமே. சென்ற வாரம் நிகழ்ந்த சம்பவத்திலிருந்து இது ஊர்ஜிதம் ஆகியிருக்கிறது.

சென்ற வாரம் ரோம் நகருக்குச் சென்றிருந்த ஜவாஹர்லால் நேரு அவர்களிடம், கத்தோலிகர்களின் ஜகத் குருவான போப்பாண்டவர் கோவா விவகாரம் அரசியல் பிரச்னையே யன்றி மத சம்பந்தமான பிரச்னையல்ல என்று வியக்தமாகக் கூறியிருக்கிறார். எனவே, போர்ச்சுகல் அதிகாரிகளின் மதப் பூச்சாண்டியை இனி உலகம் நம்பாது.

பி. ஸி. ஜி விபத்து

கோயம்புத்தூர் வஸந்தாவின் கண்களை அழித்து அந்தக் குழந்தையின் வாழ்க்கையைப் பாழாக்கினது, பி. ஸி. ஜி அல்ல, வைசூரியம்மை குத்தினதினால் வந்த கேடு, என்று பி. ஸி. ஜி வேலையில் ஈடுபட்டு வரும் டாக்டர் ஜகந்நாதன் அவர்கள் முதலில் பத்திரிகைகளில் ராஜாஜிக்குப் பதில் எழுதினார். பிறகு சர்க்கார் ஏற்படுத்தி யனுப்பிய வைத்திய சிகாமணிகள் "அப்படிச் சொல்லக் கூடாது. பி. ஸி. ஜியுமல்ல, வைசூரியம்மை குத்தியதுமல்ல, ஊரில் பரவி வந்த வேறு ஒரு வியாதி" என்று அதற்கு ஒரு பெயர் தந்து சர்க்காருக்கு "ரிபோர்ட்டு" அனுப்பினார்கள். அதை சர்க்கார் முழு சம்மதத்துடன் அங்கிகாரம் செய்தார்கள். ஏன், வைத்தியர்களை நியமிக்கும்போதே முன்னதாகவே நிர்மாணித்துச் சொல்லி விட்டார்கள், வஸந்தாவின் துரதிர்ஷ்டத்துக்குக் காரணம் இரண்டில் ஏதுமல்ல வென்று! அதன்படியே சர்க்கார் வைத்தியர்கள் தீர்ப்பும் கொடுத்தார்கள். இந்த நிபுணர்கள் சொன்ன வியாதி (என்ஸிபாலைடிஸ்) கண்ணழிவு

அட்டைப்பட விளக்கம்

நல் வரவு!

அசுவமேதம் முடிந்து வெற்றியுடன் திரும்பி யிருக்கிறார் நமது பாரதப் பிரதம மந்திரி ஜவாஹர்லால் நேரு.

உலகில் இதுவரை எங்குமே இப்படி ஒரு அசுவமேதம் நடந்ததில்லை.

யாகத்தின் எல்லை உலகின் அளவுக்குப் பரந்திருக்கிறது. இந்தப் பரந்த பூமியிலே திக்விஜயம் செய்து யுத்தம் என்ற யாகக் குதிரையைப் பிடித்து வெற்றியுடன் திரும்பியுள்ள நமது பிரதமருக்குப் பாரத மக்களின் சார்பில் வாழ்த்துக் கூறி வரவேற்கிறோம். அவருடைய கனவுகள் நனவாகி உலகில் அமைதி நிலவப் பிரார்த்திக்கிறோம்.

ருஷ்ய நாட்டின் பூரண அன்பையும் மதிப்பையும் பெற்றுத் திரும்பிய நமது சுதந்திர பாரதத் தலைவர் ஜவாஹர்லால் நேரு அவர்களின் திருவுருவத்தை ருஷ்ய தேசத்துப் பின்னணியோடு இவ்வார அட்டையில் மூவர்ணங்களிலே வெகு அழகாகச் சித்திரித்திருக்கிறார் ஓவியர் மணியம்.

உண்டாக்கும் என்பதாக எந்த நோய் நூலிலும் காணோமே என்று ஒரு மேல் நாட்டு வைத்திய நிபுணர் பத்திரிகையில் எழுதிக் கேள்வி கேட்டார். அதற்கு இது வரையில் பதில் கிடையாது. பதில் கொடுக்கவும் முடியாது. வைசூரியம்மை குத்துவதனால் சில சமயம் உண்டாகும் நோய் 'என்ஸிபாலோமைலிடிஸ்' என்கிற வேறு ஒரு நோய். அது கண்ணழிவு உண்டாக்கும். 'எபிடெமிக் என்ஸிபாலிடிஸ்' என்கிற நோய் முற்றிலும் வேறு. அதற்கும் கண் பார்வை இழப்பதற்கும் சம்பந்தமில்லை. இது வைத்திய சாஸ்திரம் படித்தவர்களுக்குத் தெரியும். சர்க்கார் நியமித்த வைத்திய நிபுணர்கள் நாணப் படத்தக்க பிழையில் சிக்கி விட்டார்கள். பரிகாசத்துக்கு இடம் தரும் அபிப்பிராயம் தந்தார்கள். இதற்குச் சமாதானம் சொல்ல முடியாது. முதன் முதலில் சர்க்காருக்குப் பரிந்து பத்திரிகைகளில் கடிதம் எழுதிய டாக்டர் ஜகந்நாதனைப் பாவம் சர்க்கார் கைவிட்டார்கள். அவர் சொன்னது சர்க்காருடைய வைசூரியம்மை குத்தல் காரியத்துக்கு ஹானியாகும் என்று பயந்து, அவர் சொன்னது சரியல்ல வென்று உடனே மறுத்து விட்டார்கள். மொத்தத்தில் வஸந்தாவின் கண்ணழிந்த பரிதாப நிலைக்குக் காரணம், இரண்டு ஊசிக் குத்துக்களும் ஒன்றன்பின் ஒன்றாக சேர்ந்த மடத்தனமே என்பது வியக்தம்.

பேசாமல் அந்தக் குழந்தைக்காகத் தகுந்த நஷ்ட ஈடு தருவது தருமமும் மானமும் ஆகும். கண் ஆஸ்பத்திரியில் கொண்டு போய் வைத்து வீண் காலஹரணம் செய்வது மேல் பூச்சு. கண்களின் மூலநரம்பு வெந்து அழிந்து போனதற்குக் கண் ஆஸ்பத்திரியில் என்ன செய்வார்கள்! குழந்தையின் கண்களில் காரமான மருந்துகள் போட்டு இம்சை செய்வது தவிர, வேறு பயனிருப்பதாகக் காணப்படவில்லை.

மேலும் பி. ஸி. ஜி சம்பவங்கள்

திருச்சி பிரபல டாக்டர் சாம்பசிவன் அவர்களின் பேரன் பதினைந்து வயதுச் சிறுவனுக்குச் சென்ற வருஷம் பி. ஸி. ஜி ஊசி குத்தப்பட்டது. அதுவரையில் அவனுக்கு உடல் நலம் மிகவும் சீராகவே இருந்தது. திடகாத்திரனாக இருந்தான் பையன். பந்து விளையாட்டுக்களிலெல்லாம் சேர்ந்து விளையாடிக் கொண்டிருந்தான். ஊசி குத்தினது முதல் தேக நிலை கெட்டுப் போய் இருக்கிறது. ரத்தம் வெளுத்து உடலில் பல பாகங்களில் கட்டிகளும் கொப்புளங்களும் உண்டாகி எளிதில் ஆறுவதில்லை. உபத்திரவத்தைப் பற்றிப் பாட்டனார் கவலைப்படுகிறார். இப்படியே பி.ஸி.ஜி குத்திய பல குழந்தைகள் நோய்ப்பட்டுத் தம்மிடம் வந்து கொண்டிருப்பதாகப் பத்திரிகைகளுக்கு எழுதியிருக்கிறார்.

* * * *

செங்கற்பட்டில் என். கிருஷ்ணசாமி பிள்ளை அவர்களுடைய மகன் (18 வயது) பால சுப்பிரமணியனுக்குச் சில மாதங்களுக்கு முன்பு பள்ளிக்கூடத்தில் பி. ஸி. ஜி ஊசி குத்தப்பட்டது. நாலாவது பாரம் படித்துக் கொண்டிருந்தான். இப்பொழுது வாந்தி, தலைவலி, பார்வைக் குறைவு, மயக்கம், அடிக்கடி புத்தி மாறாட்டம் முதலிய தொல்லைகள் ஏற்பட்டு இளைத்துப் போயிருக்கிறான். தற்போது செங்கற்பட்டு பெரிய ஆஸ்பத்திரியில் இருந்து வருகிறான்.


* * * *

மைக்கேல் அந்தோணி, பெங்களூரில் உத்தியோகத்தில் இருந்தபோது பி. ஸி. ஜி ஊசி குத்தப்பட்டார். இப்பொழுது க்ஷய வியாதியே கண்டு, பூனாவில் ராணுவ ஆஸ்பத்திரியில் இருக்கிறார். ஊசி குத்தும் வரையில் திடகாத்திரமாக இருந்ததாகவும் குடும்பத்தில் க்ஷயவியாதி யாருக்கும் இருந்ததில்லை என்றும், வேலையும் போய் உயிரும் போகும் நிலையில் இருப்பதாகவும் மிக வருத்தப்பட்டுக் கடிதம் எழுதியிருக்கிறார்.

* * * *

கோயம்புத்தூர் பீடித் தொழிலாளி எம். எஸ். பக்கீர் அவர்களின் இரண்டரை வயதுக் குழந்தைக்குச் சென்ற டிஸம்பர் மாதத்தில் பி. ஸி. ஜி ஊசி குத்தப்பட்டது. தற்போது குழந்தை இளைத்துப் போய்ப் பார்வைக் குறைவும் ஏற்பட்டு விட்டது.

பள்ளிக்கூடங்களில் படிக்கும் குழந்தைகளின் பெற்றோர்கள் ஆட்சேபணை செய்து எழுதாமல் இருந்தால், சம்மதித்ததாகவே வைத்துக்கொள்ளப்படும் என்பது இப்பொழுது ஊர்ஜிதமாகத் தெரிகிறது. ஆகையினால், ஊசி குத்திக் கொள்ள இஷ்டம் இல்லாதவர்கள் கண்டிப்பாக ஆட்சேபித்து எழுத வேண்டும். அல்லது ஊசி குத்தும் நாட்களில் குழந்தைகளைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பாமல் இருக்க வேண்டும் என்று ஏற்படுகிறது.



பிரபல திருமணம்

'கல்கி' பத்திரிகையின் பம்பாய் பிரதிநிதியும், கீரனூர் மிராசுதார் ஸ்ரீ வி. ராமய்யர் அவர்களின் குமாரருமான திரு ஆர். கண்ணன் அவர்களுக்கும், கும்பகோணம் ஸ்ரீ ஜி. ராமநாதய்யர் அவர்களின் புதல்வி சௌ நாகலக்ஷ்மிக்கும் கும்பகோணத்தில் ஜூலை மாதம் ஏழாந் தேதி வெகு விமரிசையாகத் திருமணம் நடந்தேறியது. திருமணத்துக்குக் 'கல்கி' மானேஜிங் டைரக்டர் சதாசிவம் தம்பதிகளும், 'கல்கி' ஆசிரியர் சோமு அவர்களும், கல்கி காரியாலய உத்தியோகஸ்தர்களும், செம்மங்குடி சீனிவாசய்யர் அவர்களும், பிடில் ராஜமாணிக்கம் பிள்ளை அவர்களும், மற்றும் பல நண்பர்களும் விஜயம் செய்து மணமக்களை ஆசீர்வதித்தனர். மாலையில் நடந்த வரவேற்பில் மாயவரம் கிருஷ்ணய்யர் அவர்கள் இன்னிசை விருந்தளித்தார். மணமக்களுக்கும் பத்திரிகாசிரியர்களிடமிருந்தும், பம்பாய், கல்கத்தா விளம்பர ஸ்தாபன அதிபர்களிடமிருந்தும், பிரமுகர்களிடமிருந்தும், நண்பர்களிடமிருந்தும் வாழ்த்துச் செய்திகள் வந்தன.

வாழ்க, நாகலக்ஷ்மி - கண்ணன்!







சக்கரவர்த்தித் திருமகன்

ராஜாஜி

77. படை புறப்பட்டது

"யாராலும் செய்ய முடியாத ஒரு காரியத்தை, ஏன், யாராலும் நினைக்கக்கூட முடியாத ஒரு காரியத்தை ஹனுமான் செய்து முடித்தான். இவனுக்கு நான் என்ன பிரதியுபகாரம் செய்து திருப்தி யடைய முடியும்?" என்று ராமசந்திரன் ஹனுமானைக் கட்டி யணைத்துக் கொண்டு ஆனந்தக் கண்ணீர் விட்டான். பிறகு மேல் நடக்க வேண்டிய காரியத்தைப் பற்றி யோசித்தான்.

"சுக்ரீவ! ஹனுமான் அற்புதமான காரியம் செய்தான். ராக்ஷசர்களால் காக்கப்பட்ட லங்காநகரத்தில் புகுந்து சீதையைக் கண்டு அவளுக்குத் தைரியம் சொல்லி அவளுடைய உயிரைக் காப்பாற்றினான். அவளைப் பற்றி க்ஷேம சமாசாரம் கொண்டு வந்து என்னையும் காப்பாற்றினான். ஆனால் இப்போது சமுத்திரத்தை எப்படித் தாண்டப் போகிறோம்? உன்னுடைய சேனை எவ்வாறு அக்கரை போய்ச் சேருவது? ராவணனுடைய நகரத்தையும் ராக்ஷச சேனையையும் தாக்க வேண்டுமானால் முதலில் நாம் இந்தக் கடலைத் தாண்ட வேண்டுமல்லவா? இதற்கு வழி தோன்றவில்லை. ஹனுமான் செய்த பெருங் காரியமும் அதனால் உண்டான மகிழ்ச்சியும் இந்தக் கவலையில் கரைந்து போவதாக இருக்கிறது" என்று சொல்லி தியானத்தில் மூழ்கினான்.

ராமனுடைய கவலையைக் கண்டு வானர ராஜன், "இது வென்ன, ராமனே! நீரும் இப்படி மனத் தாழ்ச்சி யடையலாமா? உமக்கு என்ன பயம்? இதோ என் வீரர்கள் இருக்கிறார்கள். இவர்கள் உமக்காக உயிரைக் கொடுக்கக் காத்திருக்கிறார்கள். சந்தோஷமாகவே உயிரைக் கொடுப்பார்கள் என்பது எனக்குத் தெரியும். கவலைப்படலாகாது. கவலை





அதைரியத்தை உண்டாக்கும். மனத்தைக் கவலையில் செலுத்தாதீர். உம்மையும் தம்பியையும் லங்கைக்குக் கொண்டு போய்ச் சேர்ப்பது எங்கள் காரியம். அதைப் பற்றிச் சந்தேகப் பட வேண்டாம். நீர் பகைவனைக் கொன்று சீதையை மீட்டுக் கொண்டு வராமற் போவதில்லை. இதை உறுதியாக நம்புவீர். லங்கையை எப்போது ஹனுமான் கண்டானோ அப்போது அந்தக் கோட்டை அழிந்தது என்று வைத்துக்கொள்வீர். சோகத்தில் பயனில்லை.

சோகம் சூரனுக்குப் பெரும்பகை. அது தைரியத்தை அழிக்கும். அதை உடனே விலக்குவீர். எல்லாம் தெரிந்த உமக்கு நான் ஏன் சொல்ல வேண்டும்? உமக்குத் துணை நாம் இருக்க நீர் ஏன் கவலைப்பட வேண்டும்? நானும் என்னுடைய வானரங்களும் உமக்குத் துணையாக இருக்க, வில் பிடித்து நீர் நின்றால் உம்மைத் தடுப்பவர் யார்? இனி சோகத்தை நீக்கி க்ஷத்திரியனுக்குரிய ரோஷத்தை மேற்கொள்வீர். கடலை எவ்வாறு தாண்டுவது என்பதை உம்முடைய நுண்ணறிவைப் பயன்படுத்தி ஆராய்வீர். என்னுடைய வானர வீரர்களுடைய சக்தியை அறிந்து கொண்டு அவர்களைப் பயன்படுத்திக் கொள்வீர்! நமக்கு வெற்றி நிச்சயம். என் உள்ளத்தில் எழும் உணர்ச்சியே அதற்குச் சாக்ஷியாகும் ஒரு நிமித்தம்'' என்றான்.

இவ்வாறு தேற்றி வானர ராஜன் ராமனை உற்சாகப்படுத்தினான். ராமனும் ஹனுமானும் பிறகு லங்கையைப் பற்றிப் பேசி நகரம் கோட்டை அரண் முதலியவைகளின் பலத்தை சக்கரவர்த்தித் திருமகன் கேட்டு அறிந்து கொண்டான்.

லங்கையின் ஐசுவரியம் சுபிட்சம் ராக்ஷசர்களின் சந்தோஷம் ராவணனிடம் அவர்கள் வைத்திருக்கும் நம்பிக்கை, அன்பு இவற்றை யெல்லாம் ஹனுமான் ஒன்றும் மறைக்காமல் சொன்னான். ராவணனுடைய சேனா பலம், கோட்டையின் பலம், அதன் அரண்களின் அமைப்பு, மிகக் கவனமாகக் காவல் காக்கும் சேனாபலம், கல்லெறி யந்திரங்கள், மதில் சுவர்கள், வாயில்கள், அகழிகள், அகழிகளின் மேல் வேண்டியபோது இறக்குவதும் மேலே தூக்கி விடுவதுமான மரப் பாலங்கள், இவை யெல்லாம் எவ்வளவு ஜாக்கிரதையாகவும் பலமாகவும் அமைக்கப்பட்டிருக்கின்றன என்பதை ஹனுமான் ராமனுக்கு எடுத்துச் சொன்னான். கடற்கரையைப் பற்றியும் சொன்னான். கப்பல்கள் அங்கே அண்ட முடியாது. "திரிகூட மலையும் லங்கா நகரமும் கோட்டையும் எந்த சத்துருவும் பக்கத்தில் நெருங்க முடியாத முறையில் ராவணனால் காக்கப்பட்டு வருகின்றன. ராவணனுடைய பலமும், செல்வமும், சேனா பலமும் சொல்லுக்கு அடங்காதவை. ஆயினும் நம்முடைய வானர சேனைக்கு இதை யெல்லாம் அழிக்கும் சக்தி உண்டு என்று உறுதியாக இருப்பீராக. அங்கதன், த்விவிதன், மைந்தன், ஜாம்பவான், பனஸன், நளன், நீலன், இந்த நிகரற்ற வீரர்கள் இருக்கிறார்கள். பெரும் படையும் இருக்கிறது. தரையைத் தீண்டாமல் மேலே கிளம்பிச் சென்று லங்கையை அழிப்போம். அதன் மலையரணையும் காட்டரணையும் நாம் பொருட்படுத்த வேண்டியதில்லை. உடைத்து நாசம் செய்வோம். நல்ல முகூர்த்தம் பார்த்துப் புறப்பட உத்தரவு கொடுங்கள்'' என்று ஹனுமான் சொன்னான்.

• • •

உத்தரப் பங்குனி நட்சத்திரத்தன்று வெற்றி தரும் முகூர்த்தமான மத்தியான காலத்தில் வானரப்படை தெற்குக் கடலை நோக்கிப் புறப்பட்டது. புறப்படும்போது நல்ல சகுனங்கள் கண்டார்கள். ராமனும் சுக்ரீவனும் லக்ஷ்மணனும் பேசிக் கொண்டு சென்றார்கள். "நாம் புறப்பட்டோம் என்பதை சீதை அறிந்தால் தைரியமடைந்து உயிரை வைத்துக் கொண்டிருப்பாள்'' என்றான் ராமன்.

மார்க்க மறிந்த படை வீரர்கள் சிலர்



முன்னால் சென்று போகும் வழியில் பகைவர்கள் மறைந்திருக்கிறார்களா என்று பார்த்துக் கொண்டு சென்றார்கள். பெருஞ் சேனைக்கு உணவும் தாகத்துக்குத் தண்ணீரும் கிடைக்கும் பிரதேசமாகப் பார்த்துக் கொண்டு சென்றார்கள். வானரப் படை வெகு வேகமாக மலைகளையும் காடுகளையும் தாண்டிச் சென்றது. ராமனையும், லக்ஷ்மணனையும் வானரர்கள் தூக்கிச் சென்றார்கள்.

சேனையில் உற்சாகம் பெருகி வளர்ந்தது. குதித்துக் கொண்டும், கர்ஜித்துக் கொண்டும் விளையாடிக் கொண்டும் வானரர்கள் சென்றார்கள். ராவணனை 'நான் கொல்வேன்' 'நான் கொல்வேன்' என்று போட்டி போட்டுப் பேசிக் கொண்டு சென்றதை ராமன் கேட்டு உற்சாகம் அடைந்தான். நீலனும் குமுதனும் சேனைக்கு முன்புறமாக மார்க்கத்தைச் சோதித்துக் கொண்டு சென்றார்கள். பின்னாலும் சிறந்த வீரர்கள் சேனையைக் காத்து வந்தார்கள். ராஜா சுக்ரீவனும் ராம லக்ஷ்மணர்களும் சேனை மத்திய பாகத்தில் சென்றார்கள்.

வழியில் வந்த நகரங்களுக்காவது கிராமங்களுக்காவது எவ்வித சேதமும் செய்யாமல் செல்ல வேண்டுமென்று ராமனுடைய கண்டிப்பான உத்தரவு.

படையின் கோஷம் சமுத்திரத்தின் சப்தம்போல எட்டுத் திசைகளிலும் நிறைந்தது. தூசி ஆகாயம் அளாவிக் கிளம்பிற்று.



பம்பாய் ஓரியண்டல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியின் உதவி அஸெண்ட்டெண்ட் ஸ்ரீ பி. ஆர். ஹரிஹரன் அவர்களுடைய புதல்வி ஸ்ரீமதி பாகீரதிக்கும் ஸ்ரீ என். சுந்தரம் பி. எஸ்ஸி.க்கும் மே மீ 23உ பம்பாயில் சிறப்பாகத் திருமணம் நடந்தேறியது. வாழ்க, மணமக்கள்!

மகேந்திர மலையண்டை வந்ததும் ராமன் மலைமேல் ஏறிக் கடலைப் பார்த்தான்.

"இனி இந்த சமுத்திரத்தை எப்படி நம்முடைய சேனை கடப்பது என்பதைப்பற்றித் தீர்மானிக்க வேண்டும். அதுவரையில் இவ்விடம் வனத்தில் சேனை தங்கலாம்" என்றான் ராமன். அவ்வாறே சுக்ரீவன் படைவீரர்களுக்கு ஆணையிட்டான்.

சமுத்திரக்கரை வனத்தில் வானர சேனை தங்கிற்று. பகைவர்களுடைய சூழ்ச்சியால் யாதொரு தீங்கும் ஏற்படாமல் வீரர்கள் நாலா பக்கமும் ஜாக்கிரதையாகப் பார்த்து வந்தார்கள். எல்லாருக்கும் சௌகரியமாகத் தங்குமிடம் அமைந்ததா என்று சுக்ரீவனும் ராமலக்ஷ்மணர்களும் பார்த்துத் திருப்தியடைந்த பின் ராமன் லக்ஷ்மணனுடன் தனியாக உட்கார்ந்து பேசினான்.

"பிரியமான ஒரு பொருளை இழந்துவிட்டால் நாளடைவில் அதன் நினைவும் அதை விட்டுப் பிரிந்த துயரமும் குறைந்து போகும் என்று சொல்லுகிறார்களே? ஆனால் லக்ஷ்மணா! சீதையின் பிரிவைப் பற்றி நான் இதைக் காணவில்லை" என்றான்.


"ராவணன் சீதையைப் பிடித்துத் தூக்கிப் போகும்போது, 'ஹா நாதா! ஹா ராமா! ஹா லக்ஷ்மணா!' என்று சீதை கத்தினாளே! நாம் உதவாமல் போனோமே. அப்போது அவள் பட்ட துயரத்தை எண்ண எண்ண என் துக்கம் கடல்போல் பெருகுகிறதே. நான் என்ன செய்வேன்? விஷத்தைக் குடித்துவிட்டு ஒவ்வொரு அவயவமும் எரிகிறதுபோல் என் அவயவங்கள் எரிகின்றன. தேகம் முழுதும் தீக் கொளுத்தினாற் போல் எரிகிறதே! கொடிய ராக்ஷஸிகளிடையில் அகப்பட்டுத் தவித்துக் கொண்டிருக்கிறாளே! ஜனகன் மகள், தசரத சக்கரவர்த்தி வீட்டில் புகுந்த மருமகள், தரையில் அரக்கிகளால் சூழப்பட்டுச் சிறையில் கிடக்கிறாளே!" என்று ராமன் துக்கப்பட்டுப் பிரலாபித்தான்.

"ராம! துக்கப்படாதே! ராவணனை வதம் செய்து சீதையை வெற்றியுடன் அயோத்திக்கு அழைத்துச் செல்லும் நாள் கிட்டி வந்தது! தேவ கன்னியைப் போல் அயோத்தியில் பிரவேசிப்பாள்! துக்கத்தை ஒழித்துத் தைரியத்தை மேற்கொள்வீர்!" என்றான் தம்பி.

EVERYBODY wants GOOD VALUE



in a watch...



The SECUNDUS
NEW CALIBRE RECTANGULAR

Everbright Steel	... ...	Rs. 90
Rolled Gold ...	... ...	Rs. 100
9-ct. Solid Gold	.. ...	Rs. 165
18-ct. Solid Gold	... ...	Rs. 225



The SECUNDUS
NEW CALIBRE CURVED

Everbright Steel	... ...	Rs. 95
Rolled Gold ...	... ...	Rs. 105
9-ct. Solid Gold	... ...	Rs. 175
18-ct. Solid Gold	... ...	Rs. 250

...ஒரு "வெஸ்ட் எண்ட்" கெடிகாரம் மிகச் சிறந்த மதிப்பையும், நம்பகமான உழைப்பையும் அளிக்கிறது. பரம்பரையாக மிக்கதேர்ச்சி அனுபவம் வாய்ந்தவர்களால் ஒவ்வொரு "வெஸ்ட் எண்ட்" கெடிகாரமும் தயாரிக்கப்படுவதால் அவைகள் நீடித்து நம்பகமாக உழைப்பதுடன், சரியான மணியும் காட்டுகிறது. அழகான கேஸ்களில் சிறிதும் பிசகாது மணி காட்டும்படி தயாரிக்கப் பட்டுள்ளவை "வெஸ்ட் எண்ட்" கெடிகாரங்களே என இந்தியா முழுவதும் உபயோகித்து திருப்தி அடைந்துள்ள பல்லாயிரக் கணக்கானவர்கள் நிச்சயமாக கூறுவார்கள்.

விவரமான இலவச
பிரசுரத்திற்கு எழுதவும்

The
WEST END WATCH Co.
BOMBAY CALCUTTA

நீர் துளித்தது

எஸ். பி. ஹர்ஷன்

"ஓராணு கடுகு, ஓராணு எண்ணெய், ஓராணு மிளகு ..."

"இந்தாப்பா இந்த 'லிஸ்ட்'படி சாமான் கட்டிக் கொடு."

"அய்யோ சாமீ! சீக்கிரம் கட்டிக் கொடேன். வூட்டிலே பச்சைப் புள்ளையை விட்டுட்டு வந்திருக்கேன். அது பேயா அழுதுக்கிட்டு இருக்கும்......"

இத்தனை பேருடைய கூக்குரலுக்கும் ஈடு கொடுத்துக் கொண்டு 'மட மட' வென்று அவரவர்களுக்கு வேண்டிய சாமான்களைக் கட்டிக் கொடுத்து, அதற்குரிய பணத்தையும் பெற்றுக் கொண்டு, பம்பரம் போலச் சுற்றிச் சுற்றி வேலை செய்தான் சிங்காரம். பம்பரமாவது விசை இருக்கும் வரைதான் சுழலும். இந்தச் சிங்காரம் மட்டும் ஓய்வின்றிச் சுற்றிக் கொண்டே இருக்கிறானே! அலுப்பு, அசதி, சோர்வு எதுவுமே கிடையாதா அவனுக்கு?

கடை இப்போது காலி. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு கோட்டுகளை ஒழுங்காக அடுக்கி வைக்கத் துவங்கினான் அவன்.

"சிங்காரம்! பத்து ரூபாய் கொடு!!"

சிங்காரம் தலை நிமிர்ந்தான்.

தங்கராசு!!!

"ஊம், ஊஹூம். அப்பாவைக் கேக்காம சல்லிக் காசுகூட எடுக்க முடியாது. இன்னும் கொஞ்ச நேரம் நில்லு ... சாப்பிடப் போன அப்பா வந்திடுவாரு. எவ்வளவு வேணுமோ வாங்கிக்க..."

"டேய்! நான் ஒன்னோட சின்ன எஜமான். நினைப்புலே வைச்சுக்க ..."

சிங்காரம் பதில் பேசவில்லை. அனாவசியமாகப் பேசும் வழக்கம் அவனுக்கு இல்லை.

தங்கராசு உறுமினான். "பெரிய 'கவர்னர்'னு மனசுக்குள்ளே எண்ணம். 'ரோட்டு'லே கெடக்க வேண்டிய நாயை வீட்டுக்குள்ளே சேர்த்துக்கிட்டா..."

அவன் முடிக்கவில்லை. சமய சஞ்சீவியாக சண்முக நாடார் அங்கே வந்தார். "என்னடா இங்கே கலாட்டா...?"

அவரைக் கண்டதுமேயே நழுவத் துவங்கிவிட்ட தங்கராசு இப்போது ஓட்டம் பிடிக்கத் தயாராக இருந்தான்.

நாடார் கல்லாப் பெட்டிக்குப் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டார். "ஏண்டா, மடையா? சிங்காரத்தோட உனக்கு என்னடா பேச்சு? கடைப் பக்கமே நீ வரக்கூடாதுன்னு எத்தனை தரம் சொல்லி இருக்கேன். மூளை இல்லே..."

அவர் சொன்னதைக் காதில் வாங்கிக் கொள்வதற்குத் தங்கராசு அங்கே இருந்தால்தானே!

* * *

அப்போது சண்முக நாடாருக்குப் பிள்ளை இல்லை; இவ்வளவு பணம் படைத்தவராகவும் இல்லை அவர். ஊரின் கோடியில் ஒரு பெட்டிக் கடை வைத்திருந்தார். அதில் வந்த வரும்படி கணவனுக்கும் மனைவிக்கும் போதுமானதாக இருந்தது.

ஒரு முறை, சரக்குப் பிடிப்பதற்காக டவுனுக்குப் போனபோது அவர் சிங்காரத்தைக் கண்டார். "சாமீ, மூட்டை தூக்கக் கூலி வேணுமுங்களா?" என்று கேட்டுக் கொண்டு அணுகிய அவனைப் பார்த்ததுமேயே அவருக்குப் பிடித்துப் போயிற்று. வறுமையின் தோற்றத்தைப் பிரதிபலிக்கும் அந்த நிலைமையிலும் அவன் முகத்தில் புத்திசாலித்தனமும், அலாதிகளையும் ரேகையிடுவதை அவர் உணர்ந்தார். கந்தலே ஆனாலும் தோய்த்து உடுத்தி இருந்த அவன் உடை அவரை மிகவும் கவர்ந்தது.

"ஏதாவது கடை கண்ணியிலே வேலை பார்க்கக் கூடாது...மூட்டை தூக்கிப் பிழைப்பது என்னடா பிழைப்பு?"

சிங்காரம் வெகுளித்தனத்தோடு கண்களைச் சிமிட்டினான் :—"எனக்கு யார் 'சார்' வேலை தருவாங்க? அதிலும் நான் 'அப்பா' 'அம்மா' இல்லாத ஏழை... ஏதோ கிடைத்த மட்டில் லாபம் என்று இருக்கிறேன்."

அன்றைக்கு அவனைத் தன்னோடு அழைத்து வந்தார் அவர். அவன் வந்த வேளை தானோ என்னவோ பெட்டிக் கடையில் மெள்ள மளிகைச் சாமான்கள் விற்பனைக்கு வந்தன. கொஞ்சம் கொஞ்சமாகக் கடை 'ஸ்டோர்' ஆக மாறிற்று. தாராளமாகச் செலவு செய்யும் அளவுக்கு லாபம் கிடைத்தது.

இந்தச் சமயத்தில்தான் அவருக்குத் தங்கராசு பிறந்தான்; செல்லமாக வளர்ந்தான்; ஆனால், நாடார் செய்த தீவினையே போல் எட்டு வயதுக்குள், காலிப் பயலுக்கு உரிய அத்தனை லட்சணங்களையும் வரித்துக் கொண்டான்.

அவனை நல்வழிப்படுத்த எத்தனையோ முயன்றார் நாடார். அடித்தார், திட்டினார், இதமாகவும் பயமுறுத்தியும் புத்தி சொன்னார். கடைசியில், பொறுமை இழந்த நிலையில் எக்கேடாவது கெட்டுப் போகட்டும் என்று கையைத் துடைத்து விட்டார்.

அவனுக்குப் பதினைந்து வயதாயிற்று; வளர்ந்த புத்தி நிமிரவே இல்லை. அவனுக்கு நாலைந்து வருஷங்களே மூத்தவனான சிங்காரமோ கலப்பில்லாத சுத்தத் தங்கம் போல விளங்கினான்.

• • •

சிங்காரத்துக்கு அந்த வீட்டில் நிரம்பச் சலுகைகள் இருந்தன. நாடாரும் அவர் மனைவி ரத்னம்மாளும் எந்தச் சாப்பாட்டைச் சாப்பிட்டார்களோ அதே சாப்பாட்டைத்தான் அவனுக்கும் பரிமாறினார்கள். தங்கராசுவைக் கால் காசுக்கு நம்பாத நாடார் சிங்காரத்தை நம்பிக் கடையையே விட்டு வைப்பார். மொத்தத்தில் அவர் எஜமான், இவன் சிப்பந்தி என்ற மனப்பான்மையே அங்கே இல்லை.

ஆனால் சிங்காரத்துக்கு மட்டும் உள்ளூற ஒரு குறை இருந்து வந்தது. வயது ஏற ஏற மனம் அத்தனை நாட்களும் இல்லாத ஒன்றுக்கு ஆசைப்படும் சமயங்களில் எல்லாம் அவன் இந்தக் குறையை மேலும் உணர்ந்தான்.

நாடார், அவனுக்கு எல்லா வசதிகளையும் கொடுத்தாரே தவிர அவன் வந்த நாளாகச் சம்பளம் என்று காலணா கொடுத்தது கிடையாது. "நாம் ஓடாக உழைக்கிறோம். செருப்பாகத் தேய்கிறோம். இந்தாடா பத்து ரூபாய் என்று மனசோடு தந்தால் என்ன குறைந்துவிடுமாம். பணம் சேரச்சேரப் பரந்த மனப்பான்மை குறைந்துகொண்டே போகுமோ என்னவோ?" என்று குமுறினான் அவன். ஆனாலும் பொறுமைசாலி அவன். தன் மனக் கசப்பை அவன் வெளிப்படையாகக் காட்டிக் கொள்ள வில்லை. தன் வேலைகளிலும் அரைகுறையாகச் செய்யாமல் எப்போதும் போல முழுமனதோடு செய்து வந்தான்.

பற்றாத குறைக்குத் தங்கராசு அவன் இதய தாபத்தைக் கிளறிக் கொண்டே

இருந்தான். அவனை 'இல்லாதவன்' என்று சுட்டிக் காட்டியும், 'அனாதை' என்று திட்டவும் செய்தான். இந்த மாதிரி சந்தர்ப்பங்களில் எல்லாம் அவன் மனம் வேதனையினால் சங்கடப்படும். "எனக்கென்று நாலு காசு இருந்தால் அவனைத் தாக்கி எதிர்த்து பேசுவேனே" என்று அங்கலாய்ப்பான் அவன்.

* * *

பெட்டி கொள்ளக்கூடிய அளவுக்கு மேல் துணியைத் திணித்து இறுக மூடினால் 'அன்று' பிய்ந்து கொண்டு விடும் அல்லவா? மனிதனின் மனமும் இப்படித்தான். அது ஏற்றுக் கொள்ளக் கூடிய அளவுக்கு மேல் சுகமோ துக்கமோ ஏற்பட்டால் அது தானாகவே பிய்த்துக் கொள்ளப் பார்க்கிறது......


திரும்பத் திரும்ப மனத்தைக் குழப்பிக் கொண்ட சிங்காரம் ஒரு நாள், நாடாரிடமிருந்து பிய்த்துக் கொள்வதற்குத் திட்டம் போட்டான்.

அன்றைக்கு ரயிலடி வரை சிங்காரத்தை அனுப்பினார் நாடார். ரயிலுக்குச் சுற்றுப்புறம் இருந்த இரண்டொரு கிராமங்களிலிருந்து கடைக்குச் சேரவேண்டிய பாக்கியை யெல்லாம் வசூல் செய்து கொண்டு வரும்படி கட்டளை யிட்டார்.

அன்றைக்கென்று சுமார் இருநூறு ரூபாய்களுக்கு மேல் வசூல் ஆயிற்று. பணத்தோடு நேராக ஸ்டேஷனுக்குச் சென்றான். அவன் சென்னைக்கு ஒரு டிக்கெட் வாங்குவதற்கும் ரயில் வந்து நிற்பதற்கும் சரியாக இருந்தது. காலியாக இருந்த ஒரு பெட்டியில் நுழைந்து மூலை இடம் ஒன்றைத் தேடிப் பிடித்துக் கொண்டான் அவன்.

ரயில் புறப்பட்ட போது அவன் நெஞ்சு காணாததைக் கண்டது போல மகிழ்ச்சியால் துள்ளிற்று. "மிச்சமிருக்கும் பணத்தைக் கொண்டு ஒரு பெட்டிக் கடை வைக்கலாம். 'இரண்டே அணா' லாபம் கிடைத்தாலும்கூட நம்முடைய பணம் என்ற ஆறுதலோடு சுதந்திரமாக இருக்கலாம்..." என்று பகற்கனவு கண்டான் சிங்காரம்.

அவனுடைய ஊருக்கு அடுத்த ஸ்டேஷன் ஒரு ஜங்ஷன். எனவே, வண்டி



திருநெல்வேலி, சங்கர நகரில் 'இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட்' என்ற சிமெண்ட் கம்பெனியார் தங்கள் தொழிற் கூடத்தில் வேலை செய்வோரின் குழந்தைகள் கல்வி வசதிக்காக நிர்மாணிக்க விருக்கும் பள்ளிக்கூடத்துக்குச் சென்னை முதன் மந்திரி திரு காமராஜர் ஜூலை 4ம் தேதி கால்கோள் விழா நடத்தினர்.

ளம்பிய பத்து நிமிஷங்களுக்கெல்லாம் அந்த ஸ்டேஷனில் போய் நின்றது. குறைந்தது அரை மணியாவது அங்கே நிற்கும். எதுவும் தோன்றாத நிலையில் ரயிலினின்றும் இறங்கிப் பிளாட்பாரத்தில் நின்று கொண்டான் அவன்.

"சார், காலையிலே இருந்து பச்சைத் தண்ணி வாயிலே விடவில்லை சார். ஒரு ஓரணா இருந்தாக் கொடுத்திங்கன்னா 'டீ' யாவது குடிப்பேன்..."

சிங்காரம் அவனைப் பார்த்தான். கூலி!

"ஏம்பா, இவ்வளவு பெரிய ஜங்ஷன்லே காலையிலே யிருந்து ஓரணா கிடைக்க வில்லையா? நம்ப முடிய வில்லையே!"

"எங்கே சார், இருக்கிற இருப்பிலே பாதி பேர்தானே மூட்டையைச் சுமக்கறாங்க. கிடைக்கிற இரண்டொரு கிராக்கிகளும் சண்டை போடச், சாமர்த்தியம் இருக்கிறவங்களுக்குத்தான் கிடைக்குது. என்னைப்போல ஏமாந்தவங்க பொழைப்பு இப்படித்தான்......"

சிங்காரத்துக்கு ஒரே மலைப்பு. பாம்பு போல நின்று கொண்டிருந்த ரயில், பிரம்மாண்டமான ஸ்டேஷன் எல்லாமே 'கிடு கிடு' என்று சுற்றிச் சுழல்வது போல இருந்தது—ரங்கராட்டினம் சுற்றி இறங்கினதும் சுற்றுமே அதைப் போல!—

அவனும் ஒரு கூலிதான். அவனுடைய வாழ்க்கையில் நாடார் குறுக்கிட்டிரா விட்டால் அவனும் இப்படிக் கையேந்தத் தான் நேரிட்டிருக்குமோ என்னவோ? அட, கடவுளே! துரோகத்திலும் துரோகம் நம்பிக்கைத் துரோகம் அல்லவா செய்து விட்டான்? குப்பையில் கிடக்க வேண்டிய தன்னை ஒருவனாக ஆக்கினவருக்குச் செய்யும் பிரதி உபகாரமா இது?

பித்துப் பிடித்தவன் போலக் கூலியின் கையிலே காலணாவை வீசி எறிந்துவிட்டுத் தன் சாமான்களை எல்லாம் எடுத்துக் கொண்டான். ஊரை நோக்கிச் செல்லப் புறப்பட்டுக் கொண்டிருந்த இன்னொரு ரயிலில் பாய்ந்து ஏறி விட்டான்.

• • •

சிங்காரம், ஊரை அடைந்த போது நன்றாக இருட்டி விட்டது. சந்திரன் அப்போது தான் வெளிப்படுவதா வேண்டாமா என்று யோசிப்பவன் போல மெள்ளத் தலையைக் காட்டிக் கொண்டிருந்தான்.

புத்துயிர் பெற்றவனாக அவன் வீட்டுக்குள் நுழைந்தான். ஆனோடியைத் தாண்டும் முன்பே உள்ளே இருந்து பேச்சுக் குரல் கேட்டது. இடையிடையே தன் பெயர் அடிபடுவதை உணர்ந்த அவன் சட்டென்று நின்றான்.

"என்னங்க இது? கவலையில்லாமல் உட்கார்ந்திருக்கீங்க. சிங்காரத்தை இன்னும் காண வில்லையே! என்றைக்கும் அவன் நேரம் பண்ண மாட்டானே!"

"உன் மகன் தங்கராசுவா இவன்? பணத்தைக் கையிலே கண்டதும் குட்டையைக் கண்ட மாடுமாதிரி மிரள்வதற்கு? போன இடத்திலே கொஞ்சம் தாமசம் ஏற்பட்டிருக்கும். வந்து விடுவான் பாரு. இப்ப......"

"ஆனாலும், உங்க மனசு இரும்பு. அவனை ஒரு மனுஷன்னு நெனைச்சால் தானே! அவனும்தான் அசடு. விவரம் தெரியவில்லை ..."

நாடார் இடைமறித்தார். "என்ன வந்துவிட்டது இப்போ சிங்காரத்துக்கு? எதிலே 'குறைச்சல்'னு கேக்கறேன்...?"


"ஆமாம், அவனும் எட்டு வயதிலே இங்கே வந்தான். இப்போ இருபது வயது ஆகப் போகிறது. இத்தனை நாள் மாடாக உழைத்ததற்கு அவன் கண்ணில் நப்பாசைக்காவது 'காலணா'க் காசு காட்டி இருப்பீங்களா...?"

நாடார் குறுக்கிட்டார். குரலைக் கொஞ்சம் தாழ்த்திக் கொண்டு மெள்ளச் சொன்னார் அவர். "ரத்தினம்! உனக்குத் தெரிந்தது அவ்வளவுதான். உன்னுடைய வாய் ஓட்டை வாய் ஆச்சே, சொல்ல வேண்டாம் என்று பார்த்தேன். நீயாகக் கேட்டு விட்டாய். சிங்காரத்துக்கென்று நான் சம்பளம் போடாமல் இல்லை. அவனிடம் கொடுக்கவில்லையே தவிரத் தனியாகப் போட்டு வைத்திருக்கிறேன்...

"காலம் முன்னைப்போல இல்லை. தங்கராசுவும் தத்தாரியாகப் போய்விட்டான். சிங்காரம் 'ஏழை' என்று அவன் பேரிலே இவனுக்கு எப்போதுமே இளப்பம். நான் கண்ணை மூடினேன் என்றால் சிங்காரம் பாடு என்ன ஆகும்? கடையைச் சிங்காரம் பேரிலேயே எழுதி வைச்சாலும்கூடத் தங்கராசு காலிப் பயல்களை இழுத்துக் கொண்டு கடை எதிரிலே போய் நின்று கலாட்டா பண்ணுவான்.

"சிங்காரத்துக்குச் சம்பளம் என்கிற பெயராலே இன்றையத் தேதியிலே நாலாயிரம் சேர்ந்து இருக்கு. அவன் பணத்தைக் கொண்டு திறந்து வைத்த மாதிரி இன்னும் ஒரு ஆயிரம் ரூபாயையும் சேர்த்துச் சிங்காரத்துக்கு ஒரு கடையை ஏற்படுத்திக் கொடுத்து விட்டால் அவனைப் பற்றிய கவலை தீர்ந்தது...சிங்காரம் நமக்காக உழைத்திருக்கும் உழைப்புக்கு நாம் இவ்வளவாவது செய்ய வேண்டாமா?" என்றார்.

இதைக் கேட்டதும் சிங்காரத்தின் மனம் உருகி, அவன் கண்களில் நீர் துளித்தது.



விஷப் பரீட்சை

ஜூலை மூன்றாம் தேதி 'கல்கி' இதழில் கனம் ராஜாஜி அவர்கள் பி. ஸி. ஜி. ஊசியைப் பற்றி எழுதியிருப்பது மிகவும் வரவேற்கத் தக்கதாகும். பொதுவாக அந்த ஊசியைப் பரந்த முறையில் மக்களிடம் புகுத்துவது, எப்படியாவது முயற்சிக்க வேண்டுமென்ற ஒரே ஆவலினால்தான் என்று தெளிவாகிறது. ராஜாஜி அவர்கள் அந்தக் கட்டுரையில் க்ஷய ரோக ஊசியைச் செலுத்துவதால் உண்டான பலாபலன்களைத் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நோய் பிடித்து விடுமோ என்ற இனியினால் உயிருள்ள நோய்க் கிருமிகளைப் பல வித ஆபத்துக்களுக் கிடையில் உட்செலுத்துவது அபாயம். 1930-ம் வருடத்தில் இந்த மருந்தைத் தயாரிக்கும் பொழுது ஏற்பட்ட ஒரு தவறுதலால் 'லூபெக்' என்ற இடத்தில் ஊசி குத்தப்பட்ட 244 குழந்தைகளில் 77 பேர் சில மாதங்களிலேயே மாண்டது உலகம் அறிந்த விஷயம். இது விஷயத்தில் விஷப் பரீட்சை செய்வது விரும்பத் தக்கதல்ல.

மதுரை
3—7—55 கே. எஸ். கணபதி

★

உஸ்தாத் மீரானின் திருப்புதல்வி

'கல்கி'யில் தொடர் கதையாக வந்துகொண்டிருக்கும் ரவிசந்திரிகாவில் உஸ்தாத் மீரான் என்ற பெயரில் ஒரு முஸ்லிமை இணைத்து அவர் வரலாற்றில் இஸ்லாமிய ஒழுக்க நெறி கலாசாரப் பண்பையும் எடுத்தாண்டிருப்பது நவீனத்துக்கே நல்லதொரு கவர்ச்சி அளிக்கிறது.

அத்தோடு இஸ்லாமிய சத்திய போதனையை மாந்தர் குழுவினர்களுக்கு எடுத்துரைத்து மக்களை நல்வழிப்படுத்தும் முறையில் உஸ்தாத் மீரானின் அழகுக் கன்னியை இஸ்லாமிய சட்ட வரையறைக் குட்பட்டுத் தங்கள் 'கல்கி'யில் ஆபாசமின்றி அழகிய முறையில் பிரசுரித்திருப்பது கண்டு உளமகிழ்ந்து உங்களைப் பாராட்டுகிறேன்.

சீருடையபுரம்
3—7—55 எம். கே. ஏ. என். அஹ்மதுமீரா

★

பரந்த நோக்கம்

'கல்கி'யில் வெளிவரும் 'ரவிசந்திரிகா' என் இதயத்தை ஈர்க்கும் ஓர் உணர்ச்சிப் படைப்பு. எங்ஙனம் புகழ்வேன். அத்தியாயத்துக்கு அத்தியாயம் அருமையான கற்பனைச் செழுமை, உணர்ச்சிகள் கட்டுப்படுத்த முடியாமல் உள்ளத்தை நெகிழச் செய்கிறது.

இந்த வார இதழில் வெளியான 'அல்லாஹ் பேரில் ஆணை' என்ற அத்தியாயத்தைப் பார்க்கும் ஒவ்வொரு முஸ்லிமின் இதயமும் ஆசிரியர் அவர்களை வாழ்த்தும். கண்ணியம் வாய்ந்த பரந்த பண்புடைய அவரின் எழுத்துக் கோவையைப் பாராட்டும். முஸ்லிம்களின் வாழ்க்கையிலே நடக்கும் நிகழ்ச்சிகளை அவர்களின் பழக்கமுள்ள வார்த்தையிலே தெளிவுற எழுதி வருவது ஆசிரியரின் பரந்த நோக்கம் தானே! 'நிக்காஹ்' என்பதைக் கல்யாணம் என்று எழுதி விடுவதில் கஷ்டமில்லை. இதைப் போல் இன்னும் எத்தனையோ வார்த்தைகள்—முஸ்லிம் சகோதரர்களின் உள்ளத்தை நிம்மதி கொள்ளச் செய்வதில் ஆச்சரியம் இல்லை.

என்னூர்
7—7—55 எஸ். எச். ஜமால்

★

இரு கண்கள்

''ரவிசந்திரிகா''வைத் தொடர்ந்து படித்து வரும் பல்லாயிரக் கணக்கான வாசகர்களில் நானும் ஒருவன்.

ரவிசந்திரிகாவில் ஒவ்வொரு அத்தியாயங்களும் ஒவ்வொரு வகையில் போற்றத் தகுந்தவையே. 'அல்லாஹ் பேரில் ஆணை!' என்ற அத்தியாயத்தின் வசன நடை என் இதயத்தை மிகவும் கவர்ந்து விட்டது. அதில் உஸ்தாத் மீரானைப் பற்றிய சம்பவங்களின் வசன நடையின் சரளமும், நளினமும், தேன் குழம்பைப் போன்று சுவைக்கின்றது.

முஸ்லிம்களை பெருமைப்படத்தக்க விதத்தில் முஸ்லிம்களின் பழக்கத்திலுள்ள அரபி சொற்களை — சுவை குன்றாமல் கையாண்டிருப்பது அந்த அத்தியாயத்துக்கு ஒரு சோபையை அளிக்கிறது. மேலும், சோமு அவர்கள் முஸ்லிம்கள் பண்பாட்டில் நெருங்கிய தொடர்புள்ளவர் என்பதை விசேஷமாக எடுத்துக் காட்டுகிறது. சோமு அவர்கள் போன்ற பல இலக்கிய கர்த்தாக்கள் தமிழ் நாட்டில் சேவை செய்ய முன் வந்து விட்டால் இரு சமுதாயங்களும் நாட்டின் இரு கண்களாகத் திகழும்!

இலங்கை
3—7—55 கே. எஸ். முகம்மது தாவூது

★

அறிவூட்டிய கட்டுரைகள்

''பூமியை வெட்டிக் குடைகிறார்கள்! பெட்ரோலியம் எடுத்துக் குவிக்கிறார்கள்!'' என்ற தலைப்பில் திரு பகீரதன் அவர்கள் சில வாரங்களாகத் தொடர்ச்சிக் கட்டுரை எழுதி வந்தார். அதைப் படித்ததால் அநேக விஷயங்களை அறிந்தேன். இது போன்ற கட்டுரைகள் வாரந்தோறும் எழுதி எங்களைத் திரு பகீரதன் அவர்கள் மகிழ்விப்பார் என்று நம்புகிறேன்.

யாழ்ப்பாணம்
8—7—55 த. வேலாயுதன்

இலங்கை காங்கிரஸ் தலைவரின் யோசனை

ரஜனி

கொழும்பு, ஜூலை மீ 3உ

இலங்கை ஜனநாயக காங்கிரஸ் தலைவர் ஜனாப் ஏ. அஸீஸ் இலங்கை இந்தியர் பிரச்னைக்கு ஒரு சுமுகமான முடிவு காண ஒரு அருமையான யோசனை கூறியிருக்கிறார். அவிசாவிளையில் ஒரு பிரம்மாண்டமான பொதுக் கூட்டத்தில் இவ் வாரம் பேசியபொழுது அவர் சொன்னார் :—"பிரஜாவுரிமைப் பிரச்னை எங்களுடைய பிரச்னையே தவிர இந்திய அரசாங்கத்தின் பிரச்னையல்ல. இதைத் தீர்க்க இலங்கை அரசாங்கம் இந்திய அரசாங்கத்திடம் ஓடுவானேன்! இலங்கை ஜனநாயக காங்கிரஸ் தலைவர்களுடன் இலங்கை அரசாங்கம் ஒரு வட்டமேஜை மகாநாடு கூட்டிப் பேச வேண்டும். பிரச்னைக்கு நல்ல முடிவு காண இது தான் சரியான வழி!"

ஒவ்வொரு தடவையும் இலங்கை இந்தியர் பிரச்னையைத் தீர்க்க முயற்சி நடக்கும்பொழுது அதில் சம்பந்தப்பட்ட பத்து லட்சம் இலங்கை இந்தியர்களின் பிரதிநிதிகளான காங்கிரஸை இலங்கை அரசாங்கம் கலந்து கொள்ளுவதில்லை. பருப்பு இல்லாமல் கல்யாணம் நடத்துவதைப் போன்ற இம் முயற்சி ஒவ்வொரு தடவையும் படுதோல்வி யடைவதில் ஆச்சரியமில்லை. இனியாவது இந்தத் தவறைச் செய்யாமல் காங்கிரஸ் தலைவர்களுடன் கலந்து பேச இலங்கை அரசாங்கம் முன் வருமா! துரதிர்ஷ்டவசமாக இதற்கான அறிகுறி ஒன்றையும் காணோம். இதற்கு மாறாக டில்லி ஒப்பந்த அபிப்பிராய வேற்றுமைகளைப் பற்றி இவ் வாரம் இலங்கைப் பிரதமர் இந்தியப் பிரதம மந்திரிக்கு ஒரு கடிதம் அனுப்பி யிருக்கிறார். நேருஜி டில்லிக்குத் திரும்பியவுடன் அவரிடம் இந்தக் கடிதத்தை இலங்கை ஹைகமிஷனர் ஸர் விஜயரத்ன நேரில் சமர்ப்பிப்பார்.

* * *

இவ்வாரம் இலங்கை சுப்ரீம் கோர்ட்டில் இன்னொரு ருசிகரமான பிரஜாவுரிமை வழக்கு விசாரணைக்கு வந்தது. ரக்வானைப் பகுதியைச் சேர்ந்த இஸ்ரேல் என்ற ஒரு தோட்டத் தொழிலாளி இலங்கைப் பிரஜாவுரிமைக்கு மனுக்கொடுத்திருந்தார். இலங்கையில் பிறந்து, இலங்கையில் மணந்தவர். அவருக்கும் அவருடைய மனைவிக்கும் இலங்கையில் எட்டுக்குழந்தைகள் பிறந்திருக்கின்றன. அந்தக் குழந்தைகளின் ஜனன சர்டிபிகேட்டுகளை யெல்லாம் அவர் தாக்கல் செய்திருக்கிறார். ஆயினும் அவருடைய மனைவி 1-1-1939 முதல் 31-3-1941 வரை இலங்கையில் வசித்ததை ருசுப்படுத்தவில்லை யென்று காரணம் சொல்லி இந்தக் குடும்பத்தின் பிரஜா உரிமை மனுவைக் கமிஷனர் நிராகரித்து விட்டார்.

15-6-1940 ல் இந்தத் தம்பதிகளுக்கு இலங்கையில் ஒரு குழந்தை பிறந்திருப்பதினால் அதற்கு முந்திய பன்னிரண்டு மாதங்களுக்கிடையில் இந்தத் தம்பதிகள் இலங்கையில் தான் வசித்திருக்க வேண்டுமென்றும் இதற்கு மாறாகப் பிரஜாபதிவுக் கமிஷனர் அபிப்பிராயப் பட்டிருப்பது தவறென்றும் சுப்ரீம் கோர்ட் நீதிபதி தமது தீர்ப்பில் தெரிவித்தார். பிரஜா பதிவுக் கமிஷனரின் பழைய தீர்ப்பை ரத்துச் செய்து இஸ்ரேலையும் அவருடைய குடும்பத்தையும் இலங்கைப் பிரஜைகளாகப் பதிவு செய்துகொள்ளுமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

இலங்கையில் பிரசவித்த ஒரு பெண்ணை இலங்கையில் வசித்ததை ருசுப்படுத்தவில்லை யென்று பிரஜா பதிவுக் கமிஷனர் கருதி உரிமை மறுத்தது சிலருக்கு விநோதமாகத் தோன்றலாம். பிரஜாவுரிமை மனுக்களை நிராகரிக்கக் கமிஷனர்கள் இன்னும் என்னென்ன மாதிரியான விநோதக் காரணங்களை யெல்லாம் சொல்லுகிறார்கள் என்பதை நிதானமாக ஆராய்ந்து பார்த்தால் இலங்கை அரசாங்கம் நடத்தும் பிரஜாவுரிமை மனு விசாரணை உண்மையில் உரிமையளிப்பதற்குப் பதில் உரிமை மறுக்கவே நடக்கிறதோ வென்பதும் வெளியாகும். பிரஜாவுரிமை மனுக்களை எவ்வளவு அநியாயமாக அதிகாரிகள் நிராகரித்து வருகிறார்களென்பது சென்ற இரண்டு மூன்று மாதங்களாக சுப்ரீம் கோர்ட்டுக்கு வரும் அப்பீல் விசாரணைகளின் முடிவுகளிலிருந்து அம்பலமாகி வருகிறது.

* * *

LCT விப்பாய் இந்துக் கல்லூரியில் பெண்களுக்காக ஒரு தனிக் கல்லூரியைக் கட்ட நிதி திரட்டுவதற்காகக் கலியாட்டக் காட்சி யொன்று நடக்கிறது. இதை யாழ்ப்பாணத்தின் மாஜி மேயர் ஸ்ரீ ஸி. பொன்னம்பலம் இவ் வாரம் திறந்து வைத்தார்.



கும்பகோணம் வி. என். சுப்பிரமணிய அய்யர் அவர்கள் புதல்வி சௌ. தங்கம்மாளுக்கும் மத்திய பிரதேசத்தில் பச்மர்ஹி என்ற ஊரில் சர்க்கார் அதிகாரியாக இருக்கும் ஸ்ரீ டி. பாலகோபால் எம். ஏ. க்கும், கும்பகோணம் 'மணி பவன'த்தில் 2-6-55 அன்று திருமணம் சிறப்பாக நடைபெற்றது. வாழ்க மணமக்கள்!

இப்போது இந்தியாவில் உங்களுக்கு கிடைக்கிறது

பாமாலிவ்

டால்கம் டீ-லக்ஸ்



நீங்கள் எதிர்பார்த்துக் காத்திருந்த டால்கம் பவுடர்! உண்மையிலேயே நேர்த்தியான டால்கின் சகலகுணங்களுடன், ஒரு புதியரம்மிய வாசனையும்சேர்ந்தது! வெறியூட்டும் 17 ஸென்டுகளின் அற்புதக்கலவைசேர்ந்த பாமாலிவ் டால்கம் டீ-லக்ஸின் நறுமணம் உங்களை மகிழ்வித்து புளகாங்கிதம் அடையச் செய்யும் ... மணிக் கணக்காக உங்களுக்குக் குளுமை யும் புத்துணர்ச்சியும் அளிக்கும்!



அள்ளையில் சுத்தமும் சௌகர்யமும்



குழந்தைக்கு இதம் அளிக்க அதைத் தாராளமாகப் பூசுங்கள்



எரிச்சலைத்தடுக்க மேலெங்கும் அதை உபயோகியுங்கள்




சோர்ந்த பாதங்களுக்கு இதமும் புத்துணர்ச் சியும் அளிக்க



பாமாலிவ்

டால்கம் டீ—லக்ஸ்


கவர்ச்சியை
நாடுவோர் உடனே
வரிப்பது
TWO BY TWO
FULL VOILE
ராஜ்ரேகா
ராஜ்லக்ஷ்மி
ராஜ்ஷோபா
ராஜ்சுந்தரி
சூபர்பைன்
மெர்ஸிரைஸ் செய்யப்பட்டது
மாபத்லால் பைன் மில்ஸ்-நவ்ஸாரி
பயனீர் பீஸ்குட்ஸ் கம்பெனி
கெனராஜ் கல்லி, மூல்ஜி ஜேதா மார்க்கெட்,
பம்பாய்-2.

சொல்லும் செயலும்

கிருஷ்ணன் பாலா

"ஏ வஸந்தா! இன்னிக்கு இரண்டிலே ஒண்ணு முடிவு பண்ணிடத்தான் போறேன். இனிமேல் தாங்காது...தாங்கவே தாங்காது. என்ன மகா அக்கிரமாகப் போச்சுது! சீச்சீ!"

"எதை முடிவு பண்ணப் போறேன்! ராஜகோபால அய்யங்கார் விஷயத்தையா!"

"ஆமாம், கண்டிப்பாக."

"வாழ்ந்தது! நமக்குக் கல்யாணமாகி எட்டு வருஷமாச்சு. நானும் பார்க்கிறேன், எதிலேயும் நீங்கள் வாய்ப் பேச்சோடு சரி. உத்தரனுக்குத் தம்பிதான்."

"உத்தரனும் வீரனுன் வஸந்தா! பார் இன்னிக்கு!"

அவள் ஒயிலாகத் தலையை அசைத்து 'நொடித்து' உள்ளே போனாள். வேறொரு சமயமாக இருந்தால் ஜயராமன் கட்டாயம் அவளைப் பின் தொடர்ந்திருப்பான். ஆனால் அவன் உள்ளம் சிந்தனைகளால் அலைக்கப்பட்டுக் கிடந்ததால் அவனால் நகர முடியவில்லை.

ராஜகோபால அய்யங்கார் கம்பெனியில் ஸீனியர் டைப்பிஸ்டு. ஜயராமன் அதன் நிர்வாக மானேஜர். மாமனார் உபயம். இந்த அய்யங்காருக்குக் கம்பெனியில் முப்பது வருஷ சர்வீஸ் உண்டு. துருவ நட்சத்திரம் மாறாமல் தன் இடத்தில் தினமும் தோன்றுவது போல ராஜகோபாலய்யங்காரும் தன் ஆஸனத்தில் தினமும் பிரசன்னமாயிருப்பார். தலைமயிரை ஆற்றி விட்டுக் கொண்டு, உறை போல முக்கால் கைக்கு ஷர்ட்டோடு, மூக்கு விளிம்பில் கண்ணாடியோடு, ஒரு காலைத் தூக்கி நாற்காலியில் வைத்துக் கொண்டு அவர் உட்கார்ந்திருப்பதைப் பார்க்க வேண்டும். ஏதோ ஒரு லட்சியத்துக்காக எல்லாவற்றையும் அர்ப்பணித்து விட்ட ஒளி (கொஞ்சம் சோகமும் கூடத்தான்!) அவர் முகத்தில் தெளிவாகத் தெரியும். இதுவரை அவர் லீவு எடுத்து யாருக்கும் தெரியாது. வேலை செய்கிறாரோ இல்லையோ, ஆபீஸுக்கு வந்து விடுவார். அது தான் அவர் லட்சியம். வயது ஐம்பத்து இரண்டைத் தாண்டி விட்டது. அவர் ஒரு வேலையும் செய்யாமல், ஆடாமல் அசையாமல் இடத்தில் உட்கார்ந்து கொண்டு ஏதாவது புஸ்தகம் படிக்கிறார் என்ற விஷயத்தை ஜயராமன் கண்டு பிடித்தான். ஒரு மாத காலத்துக்கு முன்பு 'டைப்' அடிப்பதற்காக அவரிடம் கொடுத்த காகிதம் அப்படியே கிடக்கிறது என்று அறிந்து கொண்டதும் அவரைக் கூப்பிட்டு அனுப்பினான்.

"குட்மார்னிங் சார். கூப்பிட்டீர்களாமே!"

"இந்தக் கடிதம் ஏன் இன்னும் டைப் ஆகவில்லை!"

"இதோ ஆகிவிடும் சார்! எத்தனை நாழி ஆகிவிடப் போகிறது! ஆமாம், நான் அப்பவே கேட்கணும்னு பார்த்தேன். அகத்திலே பெண் குழந்தைக்கு இருமல் என்று சொல்லிக் கொண்டிருந்தீர்களே, தேவலையா!"

"ஊம்!"

"உங்கள் முகம் பாவம், வாடியிருக்கிறதே! ஏதாவது கவலையோ, வியாகுலமோ, எது இருந்தாலும், ஆஞ்சநேயருக்கு ஒரு அபிஷேகம் பண்ணுங்கோ! அவர் மேனி குளிர்ந்தால் நம்ம மனசும் குளிரும், சார்!"

"செய்தால் போகிறது."

"நீங்கள் இப்பொழுது உட்கார்ந்திருக்கிற இதே இடத்திலே உங்கள் மாமனார் அந்த நாளிலே உட்கார்ந்திருப்பார். அப்போது உங்களுக்கெல்லாம் 'கில்லி' விளையாடுகிற வயசு தான் இருக்கும். எத்தனை வருஷமாக இந்தக் கம்பெனி எனக்குச் சாதம் போட்டிருக்குன்னு நினைத்துப் பார்த்தால் மனசு நெகிழ்ந்து போகிறது சார். நான் போய் அதை அடித்துக் கொண்டு வந்து விடுகிறேன். கொடுங்கோ."

அவர் பேசப் பேச ஜயராமனுக்கு 'என்னவோ போல' ஆகி விட்டது. 'வேலை செய்யாமல் வெறுமனே நாற்காலியில் எப்படித்தான் உட்கார்ந்திருக்கிறீரோ! ஒரு மாதமாக டைப் அடிக்காமல் ஒரு காகிதம் காத்துக் கொண்டிருந்தால் உருப்பட்டாற் போலத்தான்!' இந்த ரீதியில் அவன் சொல்ல நினைத்திருந்தான். ஆனால் அவரை நேரில் பார்த்த பொழுது நீச்சல் தெரியாத ஆசாமியை நீர்ச் சுழல் உள்ளே இழுப்பது போல, வார்த்தைகள் வெளிவராமல் அமுங்கி விட்டன. சொல்ல நினைத்ததைச் சொல்ல முடியாமல் எத்தனை தடவைகள் இப்படி அவன் தவிப்பது!

அப்போது ஜயராமன் சிறு பயல். ஆரம்ப வகுப்புக்களில் படித்துக் கொண்டிருந்த சமயம். ஹெட்மாஸ்டர் கிருஷ்ணராயரைக் கண்டாலே அவனுக்குப் பற்றிக் கொண்டு வரும். அந்த ராயர் பையன்களைக் கண்டபடி வேலைலாம் வேலை ஏவுவார்.

"ஏண்டா! நீங்களெல்லாம் அந்த 'மூக்குப் பொடி' சொல்கிற வேலையை யெல்லாம் செய்யணும்!......மண்டையிலடித்தமாதிரி அப்படி டான்'னு — ஆனால் நாளைக்காப் பதில் சொல்ல வேண்டாமா!...போங்கடா, முதுகெலும்பு இல்லாத பயல்களா..." என்பான் ஜெயராமன்.

"நீ மட்டும் என்ன செய்து விடுவாயாம்!"

"என்னை மட்டும் 'அது' ஏதாவது சொல்லட்டும், அப்போ தெரியும்...அதெல்லாம் ஆளைப் பார்த்துத்தாண்டா வேலை ஏவும்! தெரியுமா!..."

சோதனை போல அந்தப் பாழும் ஹெட்மாஸ்டர் அவனை அன்று சாயங்காலம் கூப்பிட்டார். ஏனோ ஜயராமனின் கால்கள் பின்னிக் கொண்டன. யாராவது கோள் சொல்லியிருப்பார்களோ! தன்னை ஹெட்மாஸ்டர் டிஸ்மிஸ் செய்கிற மாதிரியும், அவமானம் தாங்காமல் தான் ஆற்றில் விழுகிறமாதிரியும் அவன் நடக்கும் போதே கனவு கண்டான்.

"என்ன ஸார்! குட்மார்னிங் ...... ஈவினிங் ஸார்!......"

"நீதானே ஜயராமன்! முதல் பாரம் தானே படிக்கிறாய்! ஒன்றுமில்லே ...... வீட்டிலே விறகு வாங்கணும்...நீ நல்ல விறகா

ஒரு எடை வாங்கிக் கொண்டு போ...கல்...ல விறகா இருக்கணும்...இந்தா பணம்..."

"சரி, ஸார்..."

மறு நாள் அவர் அவனைப் பார்த்து, "ரொம்ப நல்ல விறகு வாங்கிண்டு வந்திருந்தே நீ. கொள்ளே மலிவு ...உனக்கு ரொம்ப தாங்ஸ். மாமிக்கு ரொம்ப சந்தோஷம்" என்றார்.

ஜயராமனுக்குப் புஷ்பக விமானத்தில் பறப்பது போலிருந்தது. முகமெல்லாம் நாணிய மகிழ்ச்சியில் விரிய, உடல் வளைந்து நின்றான். கொஞ்ச நாழிகைக்குப் பிறகுதான் அவனுக்குத் தன் நினைவு முழுவதும் வந்தது. சே! இந்த 'மூக்குப் பொடி' எப்படி ஏமாற்றி விட்டது! அவன் என்னவெல்லாம் சொல்லி யிருக்க வேண்டும்! அவர் ஏய்ப்பதைச் செய்ததில் பெருமையும், சந்தோஷமும் வேறு! அவனுக்கு அழுகை அழுகையாக வந்தது.

* * *

அப்போது அவன் காலேஜில் வாசித்துக் கொண்டிருந்த காலம். மாணவர்கள் சங்கத்துக்குத் தேர்தல் வேண்டுமென்று மாணவர்கள் கோரினார்கள். அதிகாரிகளுக்கு மனமில்லை. ஜயராமன் மாணவர் கோஷ்டியில் முக்கியஸ்தன். காண்டீனிலும், ஹாஸ்டல் அறைகளிலும், தெருவில் நடக்கும் போதும் தன் சகாக்களிடம் கல்லூரி அதிகாரிகளைப் பற்றி அவன் வெளுத்து வாங்கினான். காலேஜ், அதன் அதிகாரிகள், சில 'கருங்காலி' மாணவர்கள், எல்லோரையும் நரகத்திலேயே வைக்க வேண்டுமென்று சாபம்.

மறுநாள் அவனைப் பிரின்ஸிபால் கூப்பிட்டனுப்பினார். அவரைப் பார்த்ததும் ஜயராமனுக்கு ருத்திர கோபம் வந்தது.

"ஜயராமன்!..."

"ஸார்..."

"நான் சொல்வதை நீ கொஞ்சம் கேட்க வேணும்!"

தனக்கே உரிய முறையில் அவர் தமது கட்சியை எடுத்துச் சொன்னார். இந்த மாதிரி 'கன்னாபின்னா'வென்று பேசும் மாணவர்களுக்கு என்ன கதி ஆகும் என்றும் சொன்னார். ஜயராமன் 'வாலை ஆட்டாமல்' இருந்தால் அவனையே மாணவச் சங்கக் காரியதரிசியாகத் தாம் நியமிப்பதாகவும் கோடி காட்டினார். வாலை ஆட்டினால் நறுக்கி விடுவதாகவும் பயமுறுத்தினார்.



"என்ன சொல்கிறாய்......!"

"எஸ், ஸார்......"

"ஒழுங்காக இரு...போய் வா......"

"மன்னிக்கவும், இனிமேல் இந்த மாதிரி... ஹி......ஹி......"

வழக்கம் போல ஒரு மணி நேரம் கழிந்து உலகத்தில் உள்ள அவமான மெல்லாம் அவனைச் சூழ்ந்து கொண்டது. "குள்ளநரி எப்படி ஏய்த்து விட்டது!" என்று பொருமினான். என்ன கோழைத்தனமடா இது, நினைத்ததைச் சொல்ல முடியாமல்! அன்று பூராவும் அவனுக்குச் சாப்பாடு வேண்டியிருக்க வில்லை.

அந்தச் சமயத்தில்தான் அவனுக்கு வேறொரு விசித்திரமான குணாதிசயம் வந்து படிந்தது. ஒரு பிரசித்தி பெற்ற ஆசிரியர் வெளியே படபடப்பாகவும், முரட்டுத்தனமாகவும் நடந்து கொண்டு, "மனது அப்படியே தங்கமாக" இருக்கும் பாத்திரத்தைத் தமது கதைகளில் எழுதிக் கொண்டே வந்தார். ஜயராமனுக்கு இந்த குணத்தைக் 'காப்பி'யடிக்க வேண்டும் என்று ஆவல் எழுந்தது. அன்றிலிருந்து அவன் குணம் படிப்படியாக மாறியது. வேண்டுமென்றே பிச்சைக்காரர்கள், வேலைக்காரப் பையன்கள் மேலெல்லாம் எரிந்து விழுந்தான். தனிமையில் (அதாவது யாராவது தனக்குத் தெரிந்தவர் நிச்சயமாகத் தன்னைக் கவனிக்கிறார் என்று உறுதியான பிறகு) ஏழைகளிடம் கனிந்து கனிந்துருகிப் பேசி, ரூபாய் நோட்டுக்களை எடுத்துக் கொடுத்து, "போங்கடா!" என்று மேலுக்கு அதட்டுவான். இதைக் கவனிப்பவர் பிறரிடத்தில் "ஜயராமன் மேலுக்கு முரட்டுத்தனமாய்ப் பேசுகிறானே தவிர, மனசு தங்கம்தாண்டா" என்று சொல்லுவாரல்லவா! மத்தியானமெல்லாம் பிறர் அறிய ஊர் சுற்றி விட்டு, உடம்பைக் கஷ்டப்படுத்திக் கொண்டு, இரவு வேளைகளில் புத்தகத்தைக் கட்டிக் கொண்டு அழுவான். "மேலுக்கு ஊர் சுற்றுகிறானே தவிர, படித்து விடுகிறான் பயல்" என்று பார்க்கிற பேர் சொல்ல வேண்டு மல்லவா! வேண்டுமென்றே எல்லாரிடமும், பிறரை ஏய்க்கிற வழிகள், அயோக்கியத்தனமான முறைகள் எல்லாவற்றையும் விசாலமாக விளக்குவான், எவனாவது நண்பன் தனிமையில் இருக்கும்போது, நற்குணம், பண்பு, இவற்றைப் பற்றி 'வைவாக'ப் பேசுவான். வேண்டுமென்றே கோபம் வராதபோது கூட 'தாட்பூட்' என்று கூச்சல் போட்டு ரகளை செய்வான். "முன் கோபக்காரன்" என்று பெயர் வாங்க வேண்டாமா! தனிமையில் யாராவது பேசிக்கொண்டிருந்தால், எங்கேயோ பார்த்துக் கொண்டு, யாருக்காகவோ இரக்கப்படுவதைப் போல முகத்தை வைத்துக்கொண்டு, ஒரு மாதிரியான குரலில், தன் குடும்பக் கஷ்டங்களைப் பெரிது படுத்திச் சொல்லுவான். தன் தம்பி, தங்கைகளைக் 'காப்பாற்றும்' பொறுப்பு தனக்கு இருப்பதை விவரிப்பான். உலகத்துக் கஷ்டங்களை அடுக்கிக் கூறுவான். பிரபஞ்சத்தைப் பற்றியும், எல்லையில்லாத வெட்ட வெளியிலே விண் மீன்களும், கிரகங்களும், சூரிய

னும், இடையறாது சுழலும் அற்புதத்தைப் பற்றியும் பேசுவான். "எத்தனையோ தத்துவ ஞானிகள் ஆராய்ந்தும் கூட உலகின் துயர்களை விடுவிக்க வழி காண முடியவில்லை......... எல்லாமே ஏதோ விந்தை...... ஏதோ ஒரு இனம் காண முடியாத சுழற்சி... புரிந்து கொள்ள முடியாத மாயை......" என்பான். சொல்லிவிட்டு, செயற்கைக் குரலில், சோக ரஸப் பாட்டு ஒன்றை ஆகாயத்தைப் பார்த்தபடி பாடுவான். "ஜயராமன் பார்ப்பதற்கு அரட்டையாகப் பொறுப்பில்லாமல் இருக்கிறானே தவிர, உள்ளுக்குள்ளே பெரிய ஆள்......" என்று மற்றவர்கள் எப்படிச் சொல்வது......! ஆனால் இதில் அவன் எதிர்பார்த்த பலன் கிட்டியதாகச் சொல்ல முடியாது......" கெடக்கிறான் காளிப் பயல்......ஒரு மாதிரியான பிரகிருதி அது......" என்றுதான் எல்லோரும் சொன்னார்கள். அவன் அம்மா ஒரு தரம் அடுத்த வீட்டு மாமியிடம் "எங்க ஜயராமன் பார்வைக்கு முரடே தவிர, மனஸிலே கல்மிஷமே கிடையாது" என்று சொன்ன வார்த்தைகள் அவன் காதில் அமிர்த தாரையாக விழுந்தன.

ஜெயராமன் இதை யெல்லாம் நினைத்துப் பார்த்தபோது அவனுக்குக் கொஞ்சம் வெட்கமாக இருந்தது. "இப்படித்தான் எல்லாருக்கும் இருக்கும்...நான் மட்டும் புதிசா என்ன!" என்று எண்ணி, காரிய மனத்தைத் தட்டி எழுப்பிக் கொண்டான். "இன்றைக்கு அந்த அய்யங்காரை இரண்டில் ஒன்று தீர்த்துவிட வேண்டியதுதான்" என்று மீண்டுமோர் முறை சொல்லிக் கொண்டான். அவரால் கம்பெனிக்குத் தம்படி கூட லாபம் கிடையாது. வெறும் சோம்பேறி அவர். தனக்காகப் பேசிக் காரியத்தைச் சாதித்துக் கொள்கிறார். இன்றைக்கு எப்படியாவது அவரிடம் பேசி, "நீங்கள் ரிடையர் ஆகி விடுங்கள், சுவாமி!" என்று கேட்டுக் கொள்ள வேண்டியதுதான். தண்ணீர் ஊற்ற ஊற்ற சிமென்ட் கெட்டிப் படுவது போல, ஒவ்வொரு நிமிஷமும் இந்தத் தீர்மானத்துக்கு அவன் மனம் உறுதி பெற்றுக் கொண்டே வந்தது......

அவன் ஆபீஸில் தன் இடத்தில் போய் உட்கார்ந்து கொண்டான். ராஜகோபாலய்யங்காரை எட்டிப் பார்த்தான். அவர் பாட்டுக்கு எப்போதும் போல ஒரு காலைத் தூக்கி நாற்காலியில் வைத்துக் கொண்டு, டைப் அடிக்கும் மெஷின் மீது புத்தகத்தைச் சாத்தி வைத்துக் கொண்டு படித்துக் கொண்டிருந்தார். அவரை உற்றுப் பார்க்கும்போது அவரிடம் அவனுக்கு ஏற்படும் வெறுப்பு இன்று ஏனோ ஏற்படவில்லை. அவன் யோசனை யெல்லாம், 'எப்படி அவரிடம் விஷயத்தைச் சொல்லலாம்' என்பது தான். சாயந்திரமாக ஆபீஸ் விடுகிற சமயத்தில் அவரைக் கூப்பிட வேண்டியது. காப்பி சாப்பிடக் கூட்டிக் கொண்டு போக வேண்டியது; சாப்பிடும்போது அவருக்கு ரொம்ப வயதாகி விட்டபடியால், இனிமேலும் அவரைச் சிரமப்படுத்துவது தர்மமல்ல......இந்த ரீதியில் பேச வேண்டியது...கடைசியில் அவர் தானே புரிந்து கொள்வார்...உத்தரன் கண்டிப்பாக இன்று ஜயித்து விடுவான்......

ஒரு மாதிரியாக மணி நாலு ஆயிற்று. ஜயராமன் அய்யங்காரைக் கூப்பிட்டனுப்பினான்.

"வாருங்கோ, காப்பி சாப்பிட்டு வரலாம்."

"இதோ! டிராயரைப் பூட்டி விட்டு வந்து விடுகிறேன்......"

ஹோட்டலில் இருவரும் எதிரும் புதிருமாக உட்கார்ந்திருந்தார்கள். பாதம் அல்வாவுக்குப் பிறகு மசால் தோசைக்கு ஆர்டர் கொடுத்திருந்த சமயத்தில் ஜயராமன் மெதுவாகப் பேச ஆரம்பித்தான்.

"உங்களுக்குத் தினமும் இந்த வயசில் வந்து வேலை செய்யச் சிரமமாக இல்லையா!"

அய்யங்கார் ஒரு கணம்—ஒரே—வினாடி—எஜமானரை ஊடுருவிப் பார்த்தார்.

"சிரமமென்ன ஸார்! எனக்குச் சாதம் போடுகிற கம்பெனிக்குச் சக்தி இருக்கிற மட்டும் உழைக்க வேண்டாமா!"

"ஆனாலும்......"

"பாருங்கோ...உங்களை என் பிள்ளை மாதிரி நினைச்சுண்டு சொல்றேன்......தப்பு இருந்தால் மன்னிக்கணும்......நான் அந்தக் காலத்திலே இங்கே நுழைஞ்சதும்......"

மசால் தோசை பேச்சுக்குத் தடை விட்டது. அது ஆன பிறகு அய்யங்கார் தொடர்ந்து சொன்னார். தமது அத்தனை வருஷ சர்வீஸ் காலத்தையும் சரித்திரம் மாதிரி சொன்னார். "பாஷ்யம் அய்யங்காருக்கு கோர்ட்டிலேயே உயிர் பிரிஞ்சதாம், பாக்யவான். அதே மாதிரி எனக்கும் இங்கே நேர்ந்தால் சந்தோஷப்படுவேன் சார்......' இதை விட்டுப் பிரிய வேண்டி வரும்'னு நினைச்சால் வருத்தமாக இருக்கு சார்......ரிடையரான மனுஷனைப் பற்றி சார்லஸ் லாம்ப் கட்டுரை நீங்கள் படித்திருப்பேளே......!"

ஜெயராமன் 'இதை விட்டுப் போக' என்று ஆரம்பித்தான்.



"ஆமாம் ஸார்......பையன் சிர்ப்பந்தம் ஜாஸ்தியாய்ப் போயிடுத்து ...வேலையை விட்டுடச் சொல்றான் ...... அவன் பெரிய வேலையிலேஇருக்கச்சே நானும் சம்பாதிக்கிறது முறை யில்லையாம்......உங்ககிட்டே எப்படிச் சொல்றதுன்'னு தெரியாம தவிச்சேன், ஸார் இவ்வளவு நாளாக" என்றார் அவர்.

"நிஜமாகவா!" என்று கேட்டான்.

அய்யங்கார் மற்றுமோர் முறை எஜமானரை உற்றுப் பார்த்தார்.

"ஆமாம் ஸார், உங்க மாமனார்தான் என்னை ஆளாக்கினார். நீங்களும் பழைய ஆள் என்கிறதுக்காக எத்தனை பிரியமாக இருக்கேள்...... 'வேலையை விட்டுடறேன்'னு எப்படிச் சொல்றது...! நான் வேலை செய்தால் என் பையனுக்கு என்ன ஸார் கௌரவக் குறைச்சல்!"

"அதெல்லாம் தப்பு எண்ணம் ஸார்..."

"தப்பு எண்ணம்னு நீங்க சொல்லுவீர்கள் என்று எனக்குத் தெரியும்."

"நீங்க இத்தனை வருஷமா கம்பெனிக்கு எத்தனை உதவி......"

ஜயராமனுக்கு அந்த வார்த்தைகளை வேறு யாரோ சொல்லத் தான் காதால் கேட்பது போல் இருந்தது.

"உதவியாவது! கடமை ஸார்......என் கடமை......!" அய்யங்கார் லேசாகக் கண்களைத் துடைத்துக் கொண்டார்.

"நீங்க கண்டிப்பா இருக்கத்தான் வேணும். போகறேன்னு சொல்லாதேயுங்கோ......" யந்திரம் போலே ஜயராமன் சொன்னான். திரும்பவும் இது வேறு யாருடைய குரலோ போல அவன் காதுகளில் ஒலித்தது.

"ஸார், நான் ரொம்ப பாக்கியம் செய்திருக்கணும் உங்களிட்டே வேலையிலே இருக்க...... உங்களைப் போல உள்ளும் புறமும் ஒன்றாக இருப்பவர்களை நான் கண்டதே இல்லை ஸார்!"

ஜயராமன் தலை மீது கூரை சரிந்து விழுவதைப் போல இருந்தது. ஐயங்கார் புரிந்து கொள்ள முடியாத மங்கலான சிரிப்போடு கையலம்ப எழுந்தார். அவருக்கு மேல் கூரை பத்திரமாகவே நிலைத்து நின்றது!

டி.கே.சி.யின் கடிதங்கள்

திருக்குற்றாலம்
4—4—43

*"ஏது கவிதை?" என்னும் கவியைப் பார்த்தேன். தங்கள் கவித்திறம் அதில் நன்றாய்த் தெரிகிறது. புலவர்கள் 'ஏதோ பெரிய பெரிய விஷயந்தான் கவிக்குரிய பொருள்' என்று விஷயம் தெரியாமல் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆங்கிலேயர்களும் (Critics) மூக்காலே முன்னால் காணிப் பேர்கள் அப்படித்தான் சொல்லுவார்கள். அதைப் படித்து விட்டு நம்மவர்களும் ஒத்துப் பாடுவார்கள். ஆகவே விஷயம் விஷயம் என்று ஓரே கூக்குரலாய்ப் போய் விட்டது கவியுலகம். எஞ்சினைப் பற்றிப் பாடுவார்கள். Steam. Hammer. போர்க் கப்பல், திமிங்கிலம் அல்லது மனசில் எழும் பெரும் பெரும் நிகழ்ச்சிகள், கோபம், சோகம், காதல் இவைகளைப் பற்றிப் பாடினால்தான்—ஏன் பாடி விட்டாலே, பாட்டு என்கிறார்கள். தாள இயல், உருவம் இவை வேண்டாம் என்று சொல்லி வசனகவிகளைப் பாராட்டுகிறார்கள். சில வேளை எழுதியே விடுகிறார்கள். இந்த அமாவாசைக்குள்த் தாங்கள் விளக்குப் போட்டு விட்டீர்கள்.

வண்டி, மாடு இவைகளைவிடக் கிழான பூட்டாங்கயிறு எல்லாம் கவிஞனுக்கு அற்புதப் பொருள். மேலும் சென்னை யூனிவெர்சிட்டி எம். ஏ., பி. ஏ., பி. எல்., அற்புதப் பொருள்கள் அல்ல. எந்திரசாலைகள் கடைந்து தள்ளிய ஜாதிக்காய்க் கம்புகள் தானே அவைகள். ஆனால் 'வண்டல் கிண்டி உழுவோன்' உண்மையிலேயே அதிசயப் பொருள். அற்புதமான தானியத்தை விளைத்து அற்புதமாகவே மக்களைக் காப்பாற்றுகிறான். ஏதோ லக்ஷக் கணக்கான வருஷமாக அல்லவா காப்பாற்றி வருகிறான்!

கல் சொன்ன கதைகளைத் தாங்கள் காது கொடுத்துக் கேட்டிருக்கிறீர்கள். அல்லாத பக்ஷம் எப்படி வரும் இந்தக் கவி.

"கல்லின் கதைகள் எல்லாம்-இரு
காது குளிரக் கேட்பேன்

புல்லின் பேச்சும் அறிவேன்-அதைப்
புராணமாக விரிப்பேன்"

ரொம்பவும் அற்புதம் என்கிற பாவம் புல்லின் என்ற எதுகையில் இங்கு அழகாய் அமைந்து விட்டது. கடைசிக் கவி ரொம்பவும் வாய்ப்பு. உண்மையை அப்படியே சொல்லி விட்டீர்கள். உண்மை ஒன்று இதயத்தில் இருந்தால்த்தானே கவி உண்டாகும். அல்லாத பக்ஷம் கானை மாடு கன்றீன்ற கணக்குத்தான்.

"உள்ளத்துள்ளது கவிதை"

சித்ரவதையிலிருந்து சித்ர கவிதானே பிறக்கும். ஒரு நாளும் கவிதை பிறக்காது. சென்ற அறுபது எழுபது வருஷமாகப் புலவர்கள் சித்ர கவிகள்தானே செய்தார்கள். கவி வந்ததா அவர்களுக்கு! ஏன், கவி இன்னதென்றே தெரியாமல் போய் விட்டது. பாவி கலைமகள் அவர்களது கண்ணைக் கெடுத்து விட்டாள்.

"இன்பம் உருவெடுப்பது கவிதை"

என்று தெள்ளத் தெளிந்த தமிழில் பாடி விட்டீர்கள். ரொம்ப சந்தோஷம்.

டி. கே. சிதம்பரநாதன்

* கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையின் அருமையான பாடல்களில் ஒன்று.

கீழ் நாடுகளுக்கு

பறந்து செல்லுங்கள்

சிங்கப்பூர், பாங்காக்
ஹாங்காங்
டோக்கியோ



அற்புதமான, சௌகரியமான இணைப்பு சர்வீஸ் கீழ்கண்ட இடங்களுக்கு உண்டு.

ஜாகர்தா—மணில்லா
செய்கோன்—ஸிட்னி

ஏர் இந்தியா இண்டர்நேஷனல் மூலம் கான்ஸ்டலேஷன் ரகத்தில் கீழ் நாடுகளுக்கு பறந்து செல்லுங்கள். பிரயாணத்தின்போது வெஜிடேரியன் மற்றும் நான்-வெஜிடேரியன் சாப்பாடு இலவசம்.

நீங்கள் பிரயாணம் செய்கையில் தனிக்கட்டணம் எதுவுமின்றி வழியிலுள்ள எந்த ஸ்டேஷனிலும் இறங்கிக் கொள்ள முடியும். உங்கள் இஷ்டம்போல் வேண்டிய நாட்களோ வாரங்களோ கழித்தபின் நீங்கள் போய்ச் சேரவேண்டிய இடத்திற்கு பறந்து செல்லலாம்.

பிரதி வெள்ளிக்கிழமை: பம்பாய்-மதராஸ்-சிங்கப்பூர்

பிரதி ஞாயிற்றுக்கிழமை: பம்பாய்-கல்கத்தா-பாங்காக்-ஹாங்காங்-டோக்கியோ

ஏர்-இந்தியா இண்டர்நேஷனல்

மதராஸ்

AII.1800



உங்கள் பேனாவின் ஆயுளை
பல்லாண்டு நீடிக்கச்
செய்கிறது!

பார்க்கர்

க்வின்க்

ஸால்வ்-X

அடங்கிய மசி
இது ஒன்றே

மட்டரகமான மசிகள் ஒரு நல்ல பேனாவை பாழ்படுத்திவிடக்கூடும். எப்பொழுதும் பார்க்கர் க்வின்க் உபயோகிப்பதே புத்திசாலித்தனம். க்வின்க் ஒன்றில்தான் ஸால்வ்-X அடங்கியுள்ளது. இப்பொருள் நாசகரமான மசி வண்டல்களைக் கரைத்து வெளியேற்றி, துருவை அரிப்பைத் தவிர்த்து, உங்கள் பேனாவை சுத்தமாகவும் மசி ஒழுக்கு தடைபடாமலும் வைத்திருக்கிறது. 6 வசீகரமான நிறங்களில் கிடைக்கும்.

விலை ரூ. 1/-

பார்க்கர் பேன் கம்பெனி (இந்தியா) லிட்.,
த. பெ. 51, மதராஸ் 1.

ஏக விற்பனையாளர்: பாரி & கம்பெனி லிமிடெட்,
டேர் ஹவுஸ், மதராஸ் 1.

PKQ. 934.



ஆற்றங்கரையினிலே

பேராசிரியர்: ரா. பி. சேதுப்பிள்ளை

27. திருவரங்கம் (தொடர்ச்சி)

தென் பாண்டி நாட்டுப் புதுவையம் பதியிலே தோன்றினாள் ஒரு தெய்வப் பாவை. அழகின் கொழுந்தெனத் திகழ்ந்த அப் பாவையைப் பேணி வளர்த்தார் பட்டர்பிரான் என்னும் பெரியார். இளமையிலேயே கண்ணன் திருவுருவம் அவள் கண்ணிலும் கருத்திலும் புகுந்து நிறைந்தது. "பச்சைமாமலை போல் மேனி, பவளவாய் கமலச் செங்கண் அச்சுதா" என்று அவள் பாடிப் பாடிப் பரவசம் உற்றாள்; அப் பெருமானது திருமேனியின் அழகைத் தன் உள்ளத் திரையில் உயிரோவியமாக எழுதி மகிழ்ந்தாள். "உண்ணும் சோறும் பருகும் நீரும்" எல்லாம் கண்ணனே என்று எண்ணிக் களி கூர்ந்தாள். அவன் திருவிளையாடல்களை நெஞ்சார நினைந்து போற்றினாள்.

"அன்றிவ் உலகம் அளந்தாய் அடிபோற்றி
சென்றங்குத் தென்இலங்கை செற்றாய்
திறல்போற்றி
பொன்றச் சகடம் உதைத்தாய் புகழ்போற்றி
கன்று குணிலா எறிந்தாய் கழல் போற்றி
குன்று குடையா எடுத்தாய் குணம்போற்றி"

என்று கண்ணன் புகழ் பாடிக் கரைந்து உருகினாள்.

இவ்வாறு பள்ளத்தில் பாயும் வெள்ளம் போல் பரந்தாமன் திருவடியிலே படிந்த உள்ளமுடைய மங்கை மணப் பருவம் உற்றாள். கண்ணினைக் காக்கும் இமை போல் அக் கோதையைப் பாதுகாத்த பட்டர்பிரான் குண நலம் வாய்ந்த மணமகன் ஒருவனைத் தேடத் தொடங்கினார். தந்தையின் கருத்தறிந்த கோதை மனம் நொந்தாள். "கருமுகில் வண்ணன் கமலக் கண்ணன்-அவனே என் கணவன்" என்று அருமைத் தந்தையிடம் அறிவித்தாள்.

கோதையின் கருத்தறிந்த தந்தையார் கவலையுற்றார். ஊழி முதல்வனாய் நின்ற ஒருவன் ஏழையாய கோதையை ஏற்றுக் கொள்வானோ என்று ஏங்கினார். மனவாக்குக் கெட்டாத மணிவண்ணன் இவள் மணவாளனாய் வருவானோ என்று மயங்கினார். தனக்குவமை யில்லாத் தலைவனுக்கு இவள் தாரம் ஆவளோ என்று தளர்ந்தார். ஓங்கி உலகளந்த உத்தமன் வாரானாயின் ஏங்கி இற்றும் கோதையின் உள்ளம் என்னாகுமோ என்று இடருற்றார்.

அவர் கவலை யறியாத கன்னி அல்லும் பகலும் அஞ்சன வண்ணனையே நினைந்து நெஞ்சுருகி நின்றாள். விண்ணிலே தவழ்ந்த கருமேகத்தில் தன் காதலனாகிய கண்ணன் நிறம் கண்டு களிப்புற்றாள். சோலையிலே இசை பாடும் குயிலை நோக்கி "கருங் குயிலே! என் கண்ணன் வரக் கூவாய்" என்று வேண்டினாள்.

"மென்னடை அன்னம் பரந்து விளையாடும்
வில்லிபுத்தூர் உறைவான் தன்
பொன்னடி காண்பதோர் ஆசையினால் என்
பொருகயற் கண்ணிணை துஞ்சா
இன்னடி சிலொடு பாலமு தூட்டி
எடுத்த என் கோலக் கிளியை
உன்னொடு தோழமை கொள்ளுவன் குயிலே
உலகளந் தான்வரக் கூவாய்"

என்று பரிந்து பாடினாள். காதல் புரியும் இளங் கன்னியர் வழிபடும் காமதேவனைக் கை தொழுதாள். "கரும்பு வில் ஏந்திய காமதேவா! என் கருத்தில் உறையும் காதலன் நீலமேனியன்; கமலக்கண்ணன்; பவளவாயன். அவன் திருமேனியை நான் காணக் கருணை புரியாயோ! அவனே என் கண் நிறைந்த காதலன்; கருத்துக்கு உகந்த கணவன். மானிடன் எவனையும் நான் மணப்பதில்லை. எவர்க்கேனும் என்னை மணம் பேசினால் மாண்டு தீர்வேன்.

"மானிட வர்க்கென்று பேச்சுப் படில்
வாழகில்லேன் கண்டாய் மன்மதனே"

என்று வாய் விட்டு உரைத்தாள்.

இங்ஙனம் மையல் கொண்டு மையலுற்ற மங்கைக்கு மணிவண்ணன் கனவிலே காட்சியளித்தான். இந்திரன் முதலிய வானவர் எல்லாம் வந்திருக்க, மேள தாளங்கள் முழங்க, மணக் கோலத்தில் மணிவண்ணன் எழுந்தருளி, சித்திரப் பந்தலில் தன் கைத்தலம் பற்றிக் கல்யாணம் செய்யக் கனாக் கண்டாள் கோதை. அவ் இன்பக் கனவை ஆருயிர்த் தோழியிடம் ஆசையால் எடுத்துரைத்தாள்.

"மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத
முத்துடைத் தாமம் நிரைதாழ்ந்த பந்தற்கீழ்
மைத்துனன் நம்பி மதுசூதன் வந்தென்னைக்
கைத்தலம் பற்றக் கனாக்கண்டேன்
தோழீ நான்"

என்று பேசினாள் கோதை.

கண்ணன் மணக் கோலம் கொண்டு வரும் காட்சியையே கனவிலும் நனவிலும் கண்ட கோதை தன்னை ஆடையணிகளால் ஒப்பனை செய்வாளாயினாள். கழுத்திலே காறை அணிவாள்; கண்ணாடி பார்ப்பாள். கைவளை திருத்துவாள்; கூறை உடுத்துவாள்; வழிமேல் விழி வைத்து நிற்பாள்.

"காறை பூணும், கண்ணாடி காணும்தன்
கையில் வளை குலுக்கும்
கூறை உடுக்கும், அயர்க்கும், தன்
கொவ்வைச் செவ் வாய்திருத்தும்
தேறித் தேறிநின் றாயிரம்பேர்த்
தேவன் திறம் பிதற்றும்
மாறில் மாமணி வண்ணன் மேல்
இவள் மாலுறு கின்றாளே"

என்று கண்டோரெல்லாம் இரக்கம் கொண்டனர். தன்னந்தனியாக இருந்து கன்னங்கரிய திருமாலை நினைந்து கண்ணீர் வடிப்பாள். பரந்தாமனைப் பரிந்து அழைப்பாள். திருவரங்க நாதனது எழுதரிய அழகினை எண்ணி எண்ணி ஏங்குவாள். வெள்ளலை சோரத் தன் உள்ளம் கவர்ந்த அக் கள்வனையே நினைந்து உருகுவாள்.

"எழிலுடை அம்மனைமீர்
என்அரங்கத் தின்அமுதர்
குழல்அழகர் வாய்அழகர்
கண்அழகர் கொப்பூழில்
எழுகமலப் பூவழகர்
எம்மானார் என்னுடைய
கழல்வளையைத் தாமும்
கழல்வளையே ஆக்கினரே"

என்று வருந்துவாள்.

கோதையின் காதலை அறிந்த அரங்க நாதன் மனம் இரங்கினான். அன்பினால் அவள் சூடிக் கொடுத்த மண மாலையும் அப் பெருமானுக்கு உகந்ததாயிற்று. தன் திருமகளின் கருத்தறிந்து முடித்த கருணை வள்ளலை மனமாரப் போற்றினார் பட்டர்பிரான்.

"ஒருமகள் தன்னை உடையேன்
உலகம் நிறைந்த புகழால்
திருமகள் போல வளர்த்தேன்
செங்கண்மால் தான்கொண்டு
போனான்"

என்று திருமகள் கணவனாகிய திருமாலை வாயார வாழ்த்தினார்.

கோதை என்றும் ஆண்டாள் என்றும் தமிழ்நாடு போற்றும் தெய்வப் பாவை பாடிய திருப்பாவை சங்கத் தமிழ் மாலையாகத் திகழ்கின்றது. பூமாலை சூடிக் கொடுத்த சுடர்க் கொடியாள் பாடிக் கொடுத்த நற் பாமாலையைப் போற்றிப் புகழ்ந்தனர் ஆன்றோர்.

"அன்ன வயற்புதுவை ஆண்டாள் அரங்கற்குப்
பன்னு திருப்பாவைப் பல்பதியம்—
இன்னிசையால்
பாடிக் கொடுத்தாள் நற்பாமாலை பூமாலை
சூடிக் கொடுத்தாளைச் சொல்லு"

என்று பாடினார் உய்யக் கொண்டார்.

திருவரங்கநாதனுக்குத் திருத்தொண்டு செய்த அடியார்களுள் சிறந்தவர் விப்பிர நாராயணர் என்னும் தொண்டரடிப் பொடி ஆழ்வார். பள்ளி கொண்டருளும் திருவரங்கப் பெருமானைத் துயிலுணர்த்தும் பான்மையில் இவ் ஆழ்வார் பாடி

யருளிய 'திருப்பள்ளி எழுச்சி' என்னும் பாமாலை தெய்வத் தமிழ் மணம் கமழ்வ தாகும்.

"கதிரவன் குணதிசைச்
சிகரம்வந் தணைந்தான்
கனையிருள் அகன்றது
காலையம் பொழுதாய்
மதுவிரிந் தொழுகின
மாமலர் எல்லாம்
வானவர் அரசர்கள்
வந்துவந் தீண்டி
எதிர்திசை நிறைந்தனர்
இவரொடும் புகுந்த
இருங்களிற் றீட்டமும்
பிடியொடு முரசும்
அதிர்தலில் அலைகடல்
போன்றுள தெங்கும்
அரங்கத்தம்மா பள்ளி
எழுந்தரு ளாயே"

என்ற பாட்டின் சுவையறிந்த பாரதியார் தொண்டரடிப் பொடியின் அடிச்சுவடு பற்றி "பாரதமாதா திருப்பள்ளி எழுச்சி" பாடினார்.

"அன்னிய தென்னுந் தன்னையெம் அன்னை
ஆருயிரே பள்ளி எழுந்தரு ளாயே"

என்று பாரதமாதாவின் துயில் உணர்த்தினார் பாரதியார்.

திரு அரங்கநாதனைச் சேவிக்கும் செல்வமே செல்வம் என்று தெள்ளத் தெளிய உணர்த்தினார் தொண்டர் அடிப்பொடி ஆழ்வார். 'பச்சைமேனியனே! பவள வாயனே! கமலக் கண்ணனே! அச்சுதா! அமரர் கோவே! ஆயர்தம் கொழுந்தே!' என்று அருந்தமிழால் அருச்சனை செய்ய ஆசைப்படுகின்றார் அவ் ஆழ்வார். இந்திரன் நாட்டுச் செல்வமும் செந்தமிழ் இன்பத்துக்கு நிகரில்லை யாதலால் உம்பர் நாட்டுச் செல்வம் வேண்டேன் என்று உறுதியாகக் கூறுகின்றார்.

"பச்சைமா மலைபோல் மேனி
பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா அமரர் ஏறே
ஆயர்தம் கொழுந்தே என்னும்
இச்சுவை தவிர யான்போய்
இந்திர லோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன்
அரங்கமா நகரு ளானே"

என்ற திருவாக்கு, பொன்போல் போற்றத் தக்கதாகும்.



நான்தான் டீ

சுறுசுறுப்பு மிக்க நேரத்திலும்
களைப்பு மிகுந்த நேரத்திலும்
நானே உங்கள் நண்பன்.

நான் உமது நண்பன். லட்சக்கணக்கான மக்களுக்கு நண்பன்—உழைக்கும் பணம் படைத்தவருக்கும் சமமாக நண்பன். சிறுவரும் பெரியோரும் என்னை விரும்புகின்றனர் எவ்விடத்திலும் எனக்குத் தனிச் சிறப்பும் வரவேற்பும் உண்டு.

உச்சி வெயிலில் வாடி, வியர்த்து விறுவிறுத்திருக்கையில் உமக்கு அமைதி அளிக்கிறேன். மனோவியாகூலம் அடைந்துள்ள சமயத்தில் சந்தோஷமளித்து மனக் கொந்தளிப்பின்போது சாந்தி தருகிறேன். என்றும் என்றும் கெடுதலில்லை (ஒரு டம்ளர் கூடவே சாப்பிடலாம்); எப்போதும் இன்பத் துணையே.

ஓய்வுக்காக ஏங்கும்போதும், மேலும் செல்வது கடினமாகத் தோன்றும்போதும், கண்ணைத் திறக்கமுடியாமல் களைப்பு மேலிடும்போதும், நான் உமக்குப் புத்துயிர் அளிக்கிறேன். வேலைநேரம் முடிந்து வீடு திரும்பும்போது அங்கும் உமக்குத் தெம்பு கொடுக்கக் காத்திருக்கிறேன்.

உண்மையில், எங்கிருந்தபோதிலும், என்ன செய்தபோதிலும், உடல் நிலை எப்படி இருந்தபோதிலும், என்னை உயிரளிக்கும் பானமென்று காண்பீர்கள். மேலும் இவ்வளவு உயரிய குணங்கள் பெற்ற நான்தான் மிக்க மலிவான பானமுங்கூட; தேநீருக்கு "பதிலாக" என்று ஒன்றில்லை.

நான்தான் டீ — இன்பத்தின் சின்னம்

TEA BOARD INDIA

பாகு

கல்கியின் அமரதாரா

அத்தியாயம் 31


நாமகரணம்

நான் சினிமாவில் நடிக்கச் சம்மதித்ததற்குப் பெரும்பாலும் சூழ்நிலைகள் காரணமாக இருந்த போதிலும், இயல்பாகவே என்னிடமிருந்த கலையுணர்ச்சியும் அதற்கு ஒரு காரணமாகும். வெகு காலமாகவே உள்ளத்தின் ஒரு மூலையில் சினிமாவில் நடிக்க வேண்டுமென்ற ஆவல் இருந்து கொண்டு தான் இருந்தது.

சுலோசனாவுடன் நான் அருணா தேவி நடித்த படப் பிடிப்பைப் பார்த்த தினத்திலேயே அந்த எண்ணம் நெஞ்சின் ஒரு மூலையில் விதைக்கப் பட்டது என்று கூறலாம். எல்லோரும் புகழும்படியான ஒரு சிறந்த நடிகையாக விளங்கவேண்டுமென்று எனக்கு அவ்வப்போது தோன்றியதுண்டு. அந்த விதை தண்ணீர் இல்லாமல் அப்படியே கிடந்தது. இப்போது சந்தர்ப்பம் என்ற தண்ணீர் பாயவே என் ஆர்வமும் முளைத்துத் தழைத்துப் பெரிதாக வளர்ந்து வந்தது.

நான் சென்னையிலிருந்தபோது சுலோசனாவும் நானும் சில சினிமாப் படங்கள் பார்த்துவிட்டு வருவோம். அவளுக்குக் கலைகள் என்றால் ரொம்பப் பிரியம்.

ஒருநாள் நான் புஷ்பங்கள் பறித்துக்கொண்டு வந்து கிண்ணங்களில்



வைத்துக் கொண்டிருந்தேன். அப்போது கலோசனு அங்கு வந்தான். நான் புஷ்பங்களை வரிசையாக வைப்பதைப் பார்த்து விட்டு, "உனக்கு நல்ல ரஸிகத் தன்மை இருக்கிறது இந்து. உன்னைப் பார்க்கும் போதெல்லாம், நீ செய்யும் காரியத்தைக் கவனிக்கும் போதெல்லாம் நீ பிறவியிலேயே ஒரு 'ஆர்டிஸ்ட்' என்கிற எண்ணம் எனக்கு எழுகிறது" என்றான்.

"ஆமாம்! நான் ஆடுவதும் பாடுவதும் தட்டுக் கெட்டுப் போகிறது. நல்ல 'ஆர்டிஸ்டை'க் கண்டு பிடித்தாய்!" என்றேன்.

"உனக்குத் தெரியாது, இந்து! வெளிப்படையாக ஏதேனும் செய்தால்தான் கலைஞன் என்பதில்லை. சிலருக்கு உள்ளத்தில் கலையுணர்ச்சி பொங்கிக்கொண்டே யிருக்கும். அதை வெளியிடும் வாய்ப்புக் கிடைப்பதில்லை. உனக்கும் ஏதேனும் ஒரு சூழ்நிலையில் வாய்ப்பு ஏற்படுமானால் உனக்குள் பொதிந்து கிடக்கும் கலையுணர்ச்சியை நீயே புரிந்து கொள்வாய்" என்றான்.

அவனுடைய வார்த்தைகளுக்கு நான் அப்போது அதிக மதிப்புக் கொடுக்கவில்லை. ஆனால் நான் கதாநாயகியாக நடிக்க ஆரம்பித்த சில நாட்களிலேயே கலோ சொன்ன விஷயம் எனக்குப் புரிந்தது. நடிக்கும் திறமை எனக்கு உண்டு என்று அப்போதுதான் எனக்குத் தெரிந்தது. எல்லாக் கலைஞர்களையும் போல் நானும் நடிப்புக் கலையை நேசிக்கத் தொடங்கினேன்.

முதலில் சில நாட்கள் ஷூட்டிங் எடுக்கும் போது ரொம்பக் கஷ்டமாக இருந்தது. போகப் போகக் கஷ்டமும் அதிகமாகத் தெரியவில்லை. நான் ரஸித்து நடிக்கவும் ஆரம்பித்தேன். அதன் பிறகு எனக்கு நடிப்பே உலகமாயிற்று. பிரமாதமாக நடிக்க வேண்டும் என்ற எண்ணம் என் உள்ளத்தை ஆக்கிரமித்துக் கொண்டது. ஒரு அளவுக்கு எனக்கு வாழ்க்கையில் ஏற்பட்ட மற்ற ஏமாற்றங்களை மறப்பதற்கு இந்த ஆர்வம் உதவி புரிந்தது. அல்லது ஏமாற்றத்துக்கு மேல் ஏமாற்றத்தை அனுபவித்ததால் இதிலாவது பூரண வெற்றி அடைய வேண்டும் என்று என் மனத்தில் ஒருவித வெறி உண்டாயிற்று என்றும் சொல்லலாம். இரண்டும் உண்மையே.

ஆனால் நடிக்க ஆரம்பித்த புதிதில் ரொம்பக் கஷ்டமாக இருந்தது. புதிய மனிதர்கள். புதிய விஷயங்கள். முற்றிலும் புதிய சூழ்நிலை. பல பேருக்கு நடுவில் நடிக்க வேண்டும். அத்தனை பேரும் நம்மையே பார்க்கிறார்கள் என்று தோன்றி விட்டால் நடிக்கவே முடியாது. சூழ்நிலையை மறந்து கதா பாத்திரத்தோடு ஒன்றி விடுவதற்கு எனக்குக் கொஞ்சநாளாயிற்று. ஆயினும் ஆரம்பத்திலிருந்தே என் நடிப்பு நன்றாக இருக்கிறதென்று தான் எல்லோரும் சொல்லி வந்தார்கள். நாளாக ஆக இன்னும் நன்றாக ஆகிக் கொண்டு வந்தது.

அத்தனை பேரும் என்னிடம் ஒரு விதமான அனுதாபத்துடனும், பிரியத்துடனும் நடந்து கொண்டார்கள். ஆனால் கதாநாயக வேடதாரியான சங்கர் மட்டும், என்னிடம் கடு கடுப்பாக இருந்தார். என்னை ஒரு பொருட்டாகவே அவர் மதிப்பதில்லை. அவருடன் நடிப்பதற்கே எனக்குப் பயமாக இருந்தது. ஒருநாள் சங்கருடைய கடுகடுப்புக்குக் காரணம் எனக்குத் தெரிந்து போயிற்று. யாரிடமோ, "எவளோ முன்பின் தெரியாதவளைக் கொண்டு வந்து எனக்கு 'ஹீரோயி'னைப் போடுவது. அதைப் பிரமாதப் படுத்துவது. முக்கியமான 'க்ளோஸ் அப்புகள்', நடிக்கும் பாகங்கள் எல்லாம் அவளுக்குத்தான். என்னுடைய திறமையை வெளியிடச் சந்தர்ப்பமே இந்தப் படத்தில் கிடைக்கவில்லை. பார்க்க நன்றாக இருந்தால் இவர்களுக்கெல்லாம் தலைகால் புரிவதில்லை. திறமையைப் பற்றி அக்கறையே கிடையாது" என்று சொல்லிக் கொண்டிருந்ததைத் தற்செயலாகக் கேட்டேன். எனக்கு வேடிக்கையாக இருந்தது.

தன்னைவிட இன்னொருவருக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள் என்ற நினைப்பைத் தாள முடியவில்லை அவரால். இயற்கைதானே? நிறைய நடித்துப் பழகியவரை விடப் புதிய நடிகைக்கு அதிக சந்தர்ப்பம் அளித்தால் ஆத்திரம் வருகிறது.

படத்தின் வெற்றிக்குத் தான்தான் காரணமாக இருக்க வேண்டுமென்பது



அவருடைய ஆசை. எனக்கு அதிகமான சந்தர்ப்பங்கள் அளிக்கப்படுவதால் தனக்கு அந்தப் பெயர் வராமல் போய் விட்டால் என்ன செய்வதென்று அவருக்குக் கவலை. ஆனால் அதற்கு என்னிடம் கோபித்துக் கொண்டு என்ன செய்வது? நானா அவருக்குச் சந்தர்ப்பம் அளிக்க வேண்டாமென்று கூறினேன்?

முதலில் படத்தில் மீதியிருந்த முக்கால் பாகத்தை எடுத்தார்கள். அதன் பின்னர் முதலில் எடுக்கப்பட்டிருந்த சுமதி நடித்த பாகங்களை எடுத்தார்கள். அதற்கு எடுத்திருந்த படத்தைத் திரும்பத் திரும்ப நூறு தடவையாவது பார்த்திருப்போம்.

படம் முழுவதும் எடுத்து முடிப்பதற்கு மொத்தம் ஒன்பது மாதங்கள் ஆயின. இரவும் பகலுமாகப் படப்பிடிப்பு நடந்துகொண்டே இருந்தது. என் வாழ்க்கையில் மிகப் புதுமையான சம்பவம் ஏற்பட்டிருந்த போதிலும், தினந்தோறும் ஒரே மாதிரி இருப்பதாகவே எனக்குத் தோன்றிக் கொண்டிருந்தது.

நான் புதிய நடிகையானதால் என்னைச் சரியானபடி வேலை வாங்கினார்கள். சில நாட்கள் இரவிலும் பகலிலும் சேர்ந்து கூட வேலை செய்தேன். இது ரொம்ப அக்கிரமமென்று ராஜாராம் முதலாளியிடம் சண்டை பிடிக்கப் போவதாகச் சொன்னார். நான் தான் தடுத்து விட்டேன்.

தினமும் ஸ்டுடியோவுக்குப் போவது. அலங்காரம் செய்து கொள்வது. பிறகு ஒத்திகை, படப் பிடிப்பு, பிறகு ஏதோ பெயருக்குச் சாப்பிடுவது, களைத்துப் போய்த் தூங்குவது. இவையே என் வாழ்க்கையாயிற்று.

படப் பிடிப்புத்தான் இவ்வளவு கஷ்டம் என்றால், பாட்டை ஒலிப்பதிவு செய்வது அதைவிடக் கஷ்டம். முதலில் சங்கீத டைரக்டரிடம் பாட்டைக் கற்றுக் கொள்ள வேண்டும். அதன் பிறகு வாத்திய கோஷ்டியினருக்கு அதைச் சொல்லிக் கொடுப்பார். பின்னணி சங்கீதம் அமைப்பதற்காகப் பல முறை திரும்பத் திரும்பப் பாட வேண்டும். அதன் பிறகு சேர்ந்து ஒத்திகை. அதன் பிறகு ஒலிப்பதிவு. ஒலிப்பதிவுக் கருவியைச் சரியாகப் பொருத்துவதற்காகப் பாட வேண்டும். அத்தனைக்கும் பிறகு ஒலிப்பதிவு ஆரம்பிக்கும் போது ஒரு பூனை கத்தி வைக்கும். ஒரு சமயம் பாதிக்கு மேல் ஒலிப்பதிவு ஆன பிறகு ஒரு ஆகாச விமானம் பலத்த சத்தத்துடன் ஆகாயத்தில் பறந்து போயிற்று. அதனால் ஒலிப்பதிவு முழுவதையும் மறுபடியும் எடுக்க வேண்டியதாயிற்று.

சினிமாத் துறையில் நான் பலவிதமான மனிதர்களுடன் பழக நேரிட்டது. பல பேருடைய விசித்திரமான குணங்களைத் தெரிந்து கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டது.

சில சமயம் அங்கே நடக்கும் விசித்திரமான விவாதங்கள் வெகு ருசிகரமாக இருக்கும்.

வெற்றி வேல் ப்ரொடக்ஷன்ஸில் பொன்னப்பா என்பவர் சங்கீத டைரக்டர். படத்துக்கு வேண்டிய பாட்டுக்களை அமைத்துக் கொடுப்பவர், ராஜாமணி என்ற கவி. ராஜாமணி கொடுக்கும் கவிதைகளுக்குப் பொன்னப்பா இசை அமைக்க வேண்டும். தினந்தோறும் இவர்களிருவருக்கும் ஏதாவது ஒரு வாக்குவாதம் இல்லாமலிருக்காது.

டைரக்டர் சம்பவத்தை விவரமாகச் சொல்லி விடுவார். அந்தச் சந்தர்ப்பத்துக்கு ஏற்றவாறு பாட்டு வேண்டும் என்று கூறுவார். உடனே இருவருக்கும் சண்டை வந்து விடும்.

"எனக்கு மட்டும் ஒரு 'சான்ஸ்' கொடுத்தால் ஊரையே பயித்தியமாக அடிக்கும்படியான நெஞ்சை அள்ளும் 'ட்யூன்கள்' போட்டுத் தருவேன். ஆனால் இவர் கொடுக்கிற வார்த்தைகள் கடாமுடா என்று பாட்டுக்கே பிரயோஜனமில்லாததாக இருக்கின்றனவே!" என்பார் பொன்னப்பா.

"ஆமாம்! ஆமாம்! எத்தனை அழகான வார்த்தைகள் போட்டுக் கொடுத்தாலும், சங்கதி போடுகிறேன் என்று இங்கே கொஞ்சம், அங்கே கொஞ்சம் பிச்சுப் பிச்சு நாசம் பண்ணறது. அப்புறம் டைரக்டர் பாட்டு நன்றாக இல்லை என்று சொன்னால் பழியை என் தலையிலே போடறது" என்பார் ராஜாமணி.

இதற்குள் நடுவில் ஒருவர், "பாட்டுக்கள் அப்படியே ஜிலு ஜிலுன்னு தென்றல் வீசுகிற மாதிரி இருக்கணும். நீங்க போடற பாட்டெல்லாம்



நீங்கள் ஒரு நாற்காலியில் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கும் போது கூட உங்கள் சக்தி செலவாகிக் கொண்டு வருகிறது

இழந்த சக்தியை க்ளுகோவிடா எவ்விதம் ஈடு செய்ய உதவி, உங்களுக்கு தெம்பும் சுறுசுறுப்பும் ஊட்டுகிறது.

இரவு பகல் ஒவ்வொரு வினாடியும், நீங்கள் விச்ராந்தியுடன் இருப்பதாக நினைக்கும்போது கூட, உங்கள் இருதயமும் மற்றும் முக்கியமான உறுப்புகளும் ஓய்வின்றி வேலை செய்கின்றன. அவைகள் தூங்குவதுமில்லை, களைப்பாறுவதுமில்லை. உங்கள் சக்தியை விரயமாக்கிக்கொண்டே வருகின்றன. நித்திய வேலைகளோடு இப்படி வீணாகும் சக்தியும் சேர்ந்து உங்கள் உடல் வலிமையை பாதிக்கக் கூடுமாதலால், உங்களுக்கு அடிக்கடி சக்தி கிடைப்பதற்கு ஒரு மார்க்கம் தேவையாவதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. இதற்கு க்ளுகோவிடா உட்கொள்வதைவிட சிறந்த வழி கிடையாது.

க்ளுகோவிடாதான் சக்தியூட்டும் இயற்கை உணவாகிய சுத்தமான க்ளுகோஸ். அதில் விடமின்களும் தாதுப் பொருள்களுங்கூட சேர்க்கப்பட்டுள்ளன. பிரதிதினமும் இரண்டு ஸ்பூன் அளவு க்ளுகோவிடா, தேநீர், காப்பி அல்லது ஏதாவது குளிர்ந்த பானத்துடன் சேர்த்துப் பருகவும். அது உங்கள் நிலைப்படி வேலையை எதிர்த்து நிற்கவும் ஓய்ந்த வேளையில் அதி உற்சாகமுள்ளதாகவும் செய்ய உதவியாயிருக்கும்.

க்ளுகோஸ் மிகவிரைவில் ஜீரணமாகிறது—உடனடியாக சக்தி தருகிறது. சமீபத்தில் நடத்தப்பட்ட ஒரு அகில இந்திய ஆராய்ச்சியின் மூலம் 10 டாக்டர்களில் 9 பேர் வழக்கமாக இதையே சிபார்சு செய்கின்றனர் என்று தெரியவருகிறது.

இங்குள்ள அலுவல்களில் எவ்வளவு சக்தி செலவழிகிறதென்பதை பாருங்கள்!

(ஒவ்வொரு வேலையும் அதனால் விரயமாகும் சக்தியை ஈடுசெய்யக்கூடிய க்ளுகோஸின் அளவைக்கொண்டு மதிப்பிடப்பட்டிருக்கிறது)





நாற்காலியில் ஓய்வெடுத்தல்
மணி 1-க்கு 1 அவுன்ஸ்



சமையல் செய்தல்
மணி 1-க்கு 5 அவுன்ஸ்



ஸைக்கிள் விடுதல்
மணி 1-க்கு 15 அவுன்ஸ்

உங்களுக்கு **க்ளுகோவிடா** அவசியம்

—இன்றே ஒரு டின் வாங்குங்கள்!

காரன் ப்ராடக்ட்ஸ் கம்பெனி (இந்தியா) லிமிடெட், பம்பாய் 1-கல்கத்தா 1 CPG. 1546 (A)

உச்சி வெய்யில் மாதிரி இருக்கிறது" என்று சொல்லி வைப்பார்.

பொன்னப்பாவுக்குக் கோபம் தாங்காது. "என் ட்யூன் நன்றாகத்தான் இருக்கிறது. இந்தக் கவிதையை அவர் அமைக்கிற தாளம் சுத்த கர்நாடகம். என்னை என்ன செய்யச் சொல்கிறீர்கள்? அந்தத் தாளம் விலங்குமாதிரி என் கற்பனையைக் கட்டி விடுகிறது."

இவர்களைச் சமாதானம் செய்யும் பொறுப்பு டைரக்டருடையது. அவர், "அப்படியானால் இந்தத் தடவை நீங்கள் ட்யூனைக் கொடுத்து விடுங்கள். பிறகு ராஜாமணி அதற்கு வார்த்தை போடட்டுமே?" என்பார்.

ராஜாமணி, "முடியவே முடியாது. அப்படிச் செய்ய ஸரஸ்வதி தேவியே வந்தாலும் முடியாது" என்று பதில் அளிப்பார்.

கடைசியில் டைரக்டர் இருவருக்கும் பொதுவாக, "முதலில் பொன்னப்பா என்ன தாளம் என்று சொல்லட்டும். 'தானந் தனன்ன தான தான' என்று ஏதாவது வைத்துக் கொள்ளுங்கள். அந்த சந்தத்திற்கு நீங்கள் வார்த்தை போடுங்கள்" என்று கூறி முடிப்பார்.

இதற்குப் பிறகு பாட்டை டைரக்டருக்குப் பாடிக் காட்டுவார்கள். கவிஞர் ராஜாமணி தம்முடைய சாகித்தியத்துக்காக எங்கேனும் ஒரு இடத்தில் ட்யூனைச் சிறிது மாற்றுவார்.

இதைப் பொன்னப்பாவால் பொறுக்க முடியாது. "அந்த இடம் அம்பாள் கொடுத்த வரப் பிரஸாதம். அதை மாற்றவே கூடாது" என்பார்.

கடைசியில் கதாநாயகனைப் பாடச் சொல்லுவார்கள். அவருக்கு அது சரியாக வராது. மேல் பஞ்சமம் பிடிக்க முடியவில்லை என்றோ, சங்கதி பேசாது என்றோ அவர் தம் குறையைச் சொல்லமுடியுமா? ஆகவே அந்த இடம் நன்றாகவே இல்லை என்பார்.

இத்தனை அமர்க்களத்துக்குப் பிறகு ஒலிப்பதிவு ஆகும். ஒலிப்பதிவு ஆன பிறகு அதைப் போட்டுக் கேட்பார்கள். "சிவ சிவா! குரலே கேட்கவில்லை. வாத்திய சத்தம் ரொம்ப ஜாஸ்தி. பொன்னப்பா! நீங்கள் இதை ஏன் கவனிக்கவில்லை?" என்று கோபத்துடன் கேட்பார் டைரக்டர்.

"ஒத்திகையின் போது சரியாகத்தான் வாசித்தார்கள், ஸார். எடுக்கும் போது அழுத்தி வாசித்து விட்டார்கள். நான் என்ன செய்வது?" என்பார் அவர்.

கடைசி வரையில் எல்லோருக்கும் குறையாகத்தான் இருக்கும். படம் வெற்றிகரமாக ஓடி விட்டால் ஒருவரை ஒருவர் பாராட்டிக் கொள்வார்களா? அதுதான் கிடையாது. ஒவ்வொருவரும் தாங்கள்தான் படத்தின் வெற்றிக்குக் காரணம் என்று நினைத்துக் கொள்வார்கள். படம் ஓடா விட்டாலோ பழியை மற்றவர்கள் மீது போடுவார்கள். அந்த உலகமே ஒரு விசித்திரமான உலகம்!

என்னைப் பொறுத்த வரையில் நான் யாருக்கும் தொந்தரவு வைக்கவில்லை. "வருகிறாயா?" என்றால் "வருகிறேன்," "பாடுகிறாயா?" என்று கேட்டால், "பாடுகிறேன்."— இப்படியே காலந் தள்ளி வந்தேன். என்னால் மற்றவர்களுடைய காரியம் கெட்டுப் போகக் கூடாதே என்ற கவலையுடன், நானே வேலையை இழுத்துப் போட்டுக் கொள்வேன். நாளைக்கு என்று டைரக்டர் சொன்னால், 'இன்றே செய்து விடலாமே?' என்று கூறுவேன். இதனாலெல்லாம் டைரக்டர் பாஸ்கரனுக்கு என்மீது ஒரு தனி அபிமானம் ஏற்பட்டது. ப்ரொட்யூஸரும் என்னிடம் பரிவாக நடந்து கொண்டார்.

படம் முடியும் காலம் நெருங்கி வந்து கொண்டிருந்தது. படத்துக்கு விளம்பரம் செய்ய வேண்டுமென்று ப்ரொட்யூஸர் கதிர்வேல் சொல்லிக் கொண்டிருந்தார்.

என் பெயர் அது வரை விமலாவாகவே இருந்தது. ராஜாராமும், கதிர்வேல் அவர்களும் சேர்ந்து எனக்குப் புதிய பெயரை நாமகரணம் செய்ய உத்தேசித்தார்கள். ராஜாராம் பல பெயர்களை எழுதிக் கொண்டு வந்தார். எனக்கு அவர் சொன்ன ஒரு பெயரும் பிடிக்கவில்லை.

கடைசியில் "அமரதாரா" என்ற பெயரை இருவரும் தேர்ந்தெடுத்தார்கள். அதுதான் புது மாதிரி இருக்கிறதென்று ப்ரொட்யூஸர் அபிப்

பிராயப் பட்டார். அய்யாக்குட்டியும் "ஆமாம்! ஆமாம்!" என்று அதற்குத் தலையசைத்தார்.

"ஆமாம், விமலா! தாரா என்றால் நக்ஷத்திரம் என்று அர்த்தம். உனக்கு ஏற்ற பெயர்தான். இந்தப் பெயர் அமைந்ததே ஒரு நல்ல சகுனம் என்று தோன்றுகிறது. நீ சுடர் விட்டுப் பிரகாசிக்கும் அமரதாராவாக விளங்கப் போகிறாய். உன் பெயர் சினிமாவின் சரித்திரத்திலேயே மறக்க முடியாத முக்கியத்துவம் பெறப் போகிறது" என்று பிரசங்க மாரி பொழிந்தார்.

அவர் கூறியதைக் கேட்ட போது எனக்கே அப்படியெல்லாம் நிஜமாகவே நடந்து விடும் என்று தான் தோன்றியது.

அத்தியாயம் 32

புகழ் பரவியது

"கவிஞனின் காதல்" என்ற படம் திரையிடப் பட்டது. அதன் மகத்தான வெற்றிக்குக் காரணமாக இருந்தது எது என்று யாராலும் சொல்ல முடியவில்லை. ராஜாராம் என்னுடைய நடிப்புத்திறமை என்று கருதினார். டைரக்டர் தம்முடைய திறமை என நினைத்தார். கவிஞராக நடித்த சங்கர் தம்மால் தான் என்று எண்ணினார். பட முதலாளியான கதிர்வேல் அவர்கள் சமீபத்தில் தமக்குப் பிறந்த குழந்தையின் அதிர்ஷ்டம் என்று நினைத்தார். சிலர் "அமரதாரா" என்ற அதிர்ஷ்டப் பெயர் தான் காரணம் என்றார்கள்.

முனிசாமி கவுண்டர், "கடவுளின் திருவுள்ளம்" என்று கூறி அவர்கள் ஊர்க் கோவிலுக்குப் போய் அபிஷேகம் செய்து விட்டு வந்தார்.

பட முதலாளி கதிர்வேல் அவர்கள் தம் குழந்தையின் அதிர்ஷ்டத்தை மாத்திரம் நம்பிப் பேசாமலிருந்து விடவில்லை. சினிமா வானில் சுடர் வீசிப் பிரகாசிக்கப் போகும் "அமரதாரா" என்னும் புதிய நட்சத்திரத்தின் உதயத்தைப் பற்றிப் பிரபலமான பத்திரிகைகளிலெல்லாம் விளம்பரம் செய்தார்.

"தாரா! தாரா! தாரா! அழியாப் புகழுடையப் போகும், அமரதாராவின் அமரத்துவம் பெற்ற நடிப்பைக் 'கவிஞனின் காதல்' என்ற படத்தில் கண்டு களியுங்கள்" என்பது போன்ற விதம் விதமான பெரிய விளம்பரங்கள், போட்டோக்களுடன் தெருச் சுவர்களை அலங்கரித்தன.

படம் ஆரம்பமாவதற்கு முன்னால் நடிக நடிகையரின் பெயர்கள் வரும் அல்லவா? அதில் அமரதாரா என்ற பெயர் நக்ஷத்திரங்களாலேயே எழுதப் பட்டிருந்தது. இப்படியெல்லாம் அந்தப் பெயர் பட்ட பாட்டைப் பார்த்த போது எனக்கே அது என் பெயர் தானா என்று பலமான சந்தேகம் வந்து விட்டது.

படம் ஒரே சமயத்தில் பல நகரங்களில் முக்கியமான தியேட்டர்களில் திரையிடப் பட்டது. அன்றைய தினத்தில் எனக்கு ஏற்பட்ட உணர்ச்சிகளை விவரிக்கவே முடியாது. கோயமுத்தூர் நகரத்தில் முதல் நாளே சொல்ல முடியாத கூட்டமாக இருந்தது. ராஜாராம், கவுண்டர், நான் மூவரும் இருட்டிய பிறகு காரில் அந்தப் பக்கம் போய்க் கூட்டத்தைப் பார்த்து விட்டு வந்தோம். உண்மையிலேயே நல்ல கூட்டம் தான். எனக்கே அதிசயமாக இருந்தது. கவுண்டருக்கோ ஒரே ஆனந்தம். மற்ற இடங்களிலிருந்தும் இரண்டு நாட்களில் தகவல் வந்தது. படம் வெற்றிகரமாக ஓடும் என்று தெரிந்து போய் விட்டது. மூன்று வாரங்களில் அது உறுதியாயிற்று. கூட்டம் சிறிதும் குறையவே இல்லை.

பத்திரிகைகள் எல்லாம் ஒருமுகமாகப் புதிய நட்சத்திரத்தைப் புகழ்ந்து எழுதின. பல கோணங்களில் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் பத்திரிகைகளில் காட்சியளித்தன.

ராஜாராமிடம் என் கவலையை வெளியிட்டேன். "என் படங்களை இப்படிப் பிரமாதமாக விளம்பரப் படுத்துகிறார்களே? பத்மநாபன்,

சுலோசனா யாராவது பார்த்து நான் தான் என்று தெரிந்து கொண்டு விட மாட்டார்களா?" என்றேன்.

"தெரிந்து கொண்டால் தான் என்ன செய்து விட முடியும்? இப்போது நீ நல்ல நிலையிலிருக்கிறாய். அவர் மீது நீ நியாயமாக வழக்குப் போட வேண்டும். உன் பணத்தை அவர் கொடுக்க வேண்டி யிருப்பதால் நீ இருக்கும் இடம் தெரிந்தால் கூடத் தெரியாத மாதிரி தான் இருப்பார். சுலோசனாவுக்குத் தெரிந்தால் என்ன மோசம்? நீ நல்ல நிலையில் இருப்பது தெரிந்து அவள் சந்தோஷப்படுவாள். உனக்கு ஒரு வேளை கடிதம் கூட எழுதலாம். நீ பயப்பட வேண்டிய அவசியமே இல்லை" என்று அவர் ஆறுதல் கூறினார்.

"ஈசுவர மூர்த்திக்குத் தெரிந்தால்?"

"தெரிந்தால் தெரியட்டுமே. நான் இருக்கும் போது அவர்களால் உன்னை என்ன செய்து விட முடியும்? மேலும் உன் தந்தை உன்னைக் காப்பாற்றுவார். உனக்குக் கஷ்டம் வந்தால் அவருக்கு நிச்சயம் தெரியும். உன்னைத் துன்புறுத்துபவர்களை அவர் சும்மாவிட மாட்டார்" என்று கூறினார்.



அதன் பிறகு என் மனம் சற்று சமாதானமடைந்தது.

ப்ரொட்யூஸர் கதிர்வேலுவுக்குக் "கவிஞனின் காதல்" படம் வெளியான பிறகு பணம் வந்து குவிந்தது. டைரக்டர் பாஸ்கரனுக்குப் புகழ் குவிந்தது. கதிர்வேல் அவர்கள் என்னிடம் சற்றுத் தாராளமான மனப்பான்மையுடன் நடந்து கொண்டார். அது ராஜாராமின் முயற்சி என்றுதான் சொல்ல வேண்டும்.

"நான் எடுத்த படங்களில் எதுவுமே இவ்வளவு வெற்றி பெற்றதில்லை, விமலா! அதற்கு நீதான் காரணம் என்பது எனக்குத் தெரியும்" என்று என்னிடத்திலேயே கூறினார். பத்தாயிரம் ரூபாய் பணத்தை அப்படியே கொடுத்து விட்டார். அதாவது முதலில் வாங்கிக் கொண்ட பணத்தை யெல்லாம் கழித்துக் கொள்ளவில்லை. அதைத் தவிர கதிர்வேல் அவர்களின் மனைவி வடிவம்மை எனக்கு ஒரு அழகிய வைர மோதிரத்தைப் பரிசாக அளித்தார்.

நான் இவற்றை யெல்லாம் முனிசாமி கவுண்டரிடமும், அவர் மனைவியிடமும் கூறி அவர்களைப் பாராட்டிக் கொண்டிருந்த போது ராஜாராம் வந்தார். நான் கூறியதைக் கேட்டதும் அவர் சிரித்து விட்டு, "உன்மாதிரி குழந்தை சுபாவமுடையவர்களை இந்தக் காலத்தில் பார்க்கவே முடியாது. உன்னால் கதிர்வேல் அடைந்திருக்கும் லாபம் குறைந்தது ஒன்றரை லட்சம் இருக்கும். நான் ரொம்பக் குறைத்துச் சொல்லுகிறேன். படம் ஓட ஆரம்பித்து இருபது வாரங்கள் தானே ஆகிறது? ஐந்து வாரங்களிலேயே செலவழித்த பணம் வந்து விட்டது. அதன் பிறகு லாபம்தான். நியாயமாக உனக்கு இன்னும் எவ்வளவோ தரலாம். இன்னும் எவ்வளவு நாள் ஓடப் போகிறதோ? அந்த லாப மெல்லாம் அவருக்குத்தானே? அதெல்லாம் கணக்குப் போட்டுத்தான் கொடுக்கிறார். இதை யெல்லாம் ஒரு பிரமாதமாக நீ எடுத்துக் கொள்கிறாயே?" என்று சொன்னார்.

"சரிதான்! உங்களுக்கு நன்றியே கிடையாது, ராஜாராம். முன்பின் தெரியாத ஒரு பெண்ணை நடிக்கச் சொல்லிச் சினிமா எடுக்கத் துணிச்சல் வேண்டாமா? துணிந்து எடுத்தார். லாபம் வருகிறது. அதற்காக அதில் நாம் பங்கு கேட்பதா? ரொம்ப அழகாக இருக்கிறது!" என்றேன்.

"என்னமோ அம்மா! உன்னாலே நாங்கள் நல்ல நிலைமைக்கு வந்திருக்

கிறோம். உன்னை அன்றைக்கு எங்கள் வீட்டுக்கு அழைத்துக் கொண்டு போனதற்கு இன்றைக்கு இவ்வளவு அனுபவிக்கிறோம்!" என்றார் வள்ளியின் பாட்டி அன்போடு.

"நீங்கள் அன்று எனக்குச் செய்த உதவி எவ்வளவு பெரிசு என்று உங்களுக்குத் தெரியாது, அம்மா. அதனால் இப்படிச் சொல்லுகிறீர்கள். எனக்கு அன்று என்ன இருந்தது? கீழே பூமி. மேலே ஆகாசம். அதைத் தவிர ஒன்றுமில்லாத ஒரு அனாதைப் பெண்ணுக்கு நீங்கள் சொந்த மகளைப்போல் அன்பு காட்டினீர்கள். அதற்கு நான் என்ன செய்தாலும் போதாது. இதை இனிமேல் சொல்லாதீர்கள்."

"நாம் ஒரு சின்ன நன்மை செய்தால் ஈசுவரன் நமக்கு அதைப் போல் பல மடங்கு நன்மை செய்கிறான். அதற்குத்தான் கடவுளை நம்ப வேண்டும் என்று சொல்வது" என்றார் பாட்டி.

"இல்லை அம்மா! நமக்கு நன்மை வரும்போது மாத்திரம் கடவுள் நன்மை செய்தார் என்றும், அதற்கு நாம் தகுதியுடையவர்கள் போலவும் பேசுவது சரியல்ல. இறைவனுக்கு நாம் குழந்தைகள். நமக்கு எப்போதும் அவர் கருணையினால்தான் நன்மை செய்கிறார். அவருடைய பக்தர்களாக நாம் இருப்பதுதான் எல்லாவற்றையும் விடச் சிறந்த பரிசு" என்றேன்.

"போதும்! நீங்கள் வேதாந்த சர்ச்சை செய்ய ஆரம்பித்து விட்டீர்களல்லவா? கொல்லன் பட்டறையில் ஈக்கென்ன வேலை? நான் போகிறேன்" என்று எழுந்தார் ராஜாராம்.

"வேண்டாம். இங்கு விருந்து சமைத்திருக்கிறேன். சாப்பிட்டு விட்டுத்தான் போக வேண்டும்" என்றார் கவுண்டரின் தர்ம பத்தினி.

"விருந்து என்றால் தத்துவம் கூடப் பேசலாம். அது கிடக்கட்டும். நான் வந்த காரியத்தை அடியோடு மறந்து விட்டேனே, இந்து! ஸாரி! விமலா! நாளைக்கு நமக்கெல்லாம் டைரக்டர் பாஸ்கரன் வீட்டில் விருந்து. இந்தப் படத்தினால், ஏன், உன்னால் பாஸ்கரனின் மதிப்பு இப்போது ரொம்ப உயர்ந்து போய்விட்டது, தெரியுமோ? அதற்காக விருந்து வைக்கிறார். சாதாரணமாகக் காலணா செலவழிக்காத பேர்வழி பெரிய விருந்து வைப்பதென்றால் மதிப்பு பிரமாதமாக உயர்ந்திருக்குமென்றுதான் தோன்றுகிறது. விருந்தில் நீதான் 'பிரதான விருந்தாளி'யாம்" என்று கூறி விட்டு என்னிடம் ஒரு அழைப்பிதழையும் கொடுத்தார் அய்யாக்குட்டி.

அப்போது அங்கு வந்த வள்ளி, "அக்கா! நான் நாளை விருந்துக்கு என்ன பாவாடை உடுத்திக் கொள்வது? பச்சையா? சிவப்பா?" என்று ஆவலுடன் கேட்டாள். அவளுக்குப் புதிதாக வாங்கிய பாவாடைகள் அவை இரண்டுதான்.

"இரண்டையும் உடுத்திக் கொண்டு விடேன்!" என்றார் ராஜாராம்.

"போங்க மாமா! எங்க விமலா அக்காவுக்குத்தான் எல்லாம் தெரியும். உங்களை ஒண்ணும் நான் கேக்கல்லே" என்றாள் வள்ளி.

வள்ளிக்கு என்னிடம் அபாரமாக மதிப்பு பெருகி விட்டது. அற்ப விஷயமாக இருந்தாலும் இப்போது என்னைக் கேட்டு விட்டுத்தான் செய்தாள். பூ வைத்துக் கொள்வதிலிருந்து சாப்பிடுவது, படிப்பது எல்லாம் என் யோசனையின் பேரில்தான் செய்து வந்தாள்.

ராஜாராம் என்னிடம் ஒரு கட்டு கவர்கள் கொடுத்தார்.

"இவை எல்லாம் என்ன?" என்று வியப்புடன் கேட்டேன்.

"அமரதாராவுக்கு வந்திருக்கும் பாராட்டுக் கடிதங்கள்" என்றார்.

ஆவலுடன் அவைகளை வாங்கிக் கொண்டேன். ஒரு கவரின் மீது "அற்புத அழகி அமரதாரா" என்று எழுதியிருந்தது. அதைப் பார்த்த போது எனக்கு எரிச்சலாக இருந்தது.

ஒரு கடிதத்தின் உறையைக் கிழித்தேன். அதைக் கிழிக்கும் போது, 'ஒரு கடிதம் வராதா என்று நாள்தோறும் தபால்காரனை எதிர்பார்த்துக் கால் கடுக்க வாசற்படியில் நிற்பேனே? இப்போது இத்தனை கடிதங்கள் வருகின்றன. இவைகளால் எனக்கு என்ன பிரயோஜனம்?' என்று நினைத்தேன். அதன் பிறகு கடிதத்தைப் படிக்கப் பிடிக்கவில்லை.

உறையிலிருந்து எடுத்த கடிதத்தைக் கசக்கி வீசி எறிந்தேன். அதே சமயத்தில் வாசலில் ஒரு கார் வந்து நின்றது. ப்ரொட்யூஸர் கதிர்வேல் அதிலிருந்து இறங்கினார். (தொடரும்)



நொண்டிச் சாக்கு

மு. வ. வே. ரா.

““களுக்” என்ற சிரிப்பைக் கேட்டு வியப்புற்ற ராமன், சிரிப்பு வந்த பக்கம் திரும்பிப் பார்த்தான்.

“இந்தச் சாமியை இப்படிக் கும்பிட்டு வருகிறீர்களே! இது என்னத்தை உங்களுக்குக் கொடுக்கப் போகிறது!” என்று சொல்லிக் கொண்டே ராமனை நோக்கி இரண்டடி நடந்து வந்த கோதை மேலும் கட கட வென்று சிரித்தாள்.

கோபுர வாயிலைத் தாண்டி உள்ளே சென்றதும் எல்லாக் கோயில்களிலும் இருப்பதுபோல இந்தக் கோயிலிலும் முன் பிராகாரத்தில் துவஜஸ்தம்பம் கம்பீரமாய் நின்றது. அதையடுத்து கர்ப்பக் கிருஹத்தின் வாயில் இருந்தது. அந்த வாயிலின் வடபுறத்தில் கணபதியும் தென் பக்கத்தில் மயில்வாகனனும் குடி கொண்டிருந்தனர்.

அந்தக் கணபதிக்குத் தினந்தோறும் மாலையில் ஒரு ‘சதிர்’த் தேங்காய் விட்டுத் தோப்புக் கரணம் போட்டு, சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து விட்டு, பிறகு அந்த ஆலயத்தை ஒரு முறை வலம் வந்து வீட்டுக்குப் போவதை ராமன் வழக்கமாகக் கொண்டிருந்தான்.

அதேமாதிரி கோதையும் ஆலயத்துக்குப் போவதைத் தன் முக்கிய பணியாகக் கொண்டிருந்தாள். ஆனால் அவள் முருகன் சன்னதியில் ஒரு முழம் கதம்பத்தை வைத்து விட்டு நமஸ்கரித்துக் கோயிலை வலம் வந்த பிறகு வீட்டுக்குப் போவாள்.

ராமன் ஒரு தனிக் கட்டை. கோயிலின் கோபுர வாசலில் தேங்காய்க் கடை வைத்திருந்த கந்தசாமியிடம் தேங்காய்களை மட்டை உரித்துக் கொடுத்துக் கூலி வாங்கி ஜீவிப்பவன். நூறு காய்கள் உரித்தால் எட்டணாக் கூலி. எட்டணாதான் ராமனுக்கு ஒரு நாளைய ஜீவனத்துக்கு வேண்டியது. அம்மட்டுந்தான் அவன் வேலை செய்து சம்பாதிப்பான். விசேஷ தினங்களில் வியாபாரம் அதிகமாகு மென்று மற்றுமொரு ஐம்பதோ நூறோ தேங்காய்களுக்கு மட்டை யுரித்துக் கொடுக்கும்படி கந்தசாமி ராமனைக் கேட்பதுண்டு. ஆனால் ராமன் அதைச் செய்ய மாட்டான். “எனக்குத் தேவையானதை நான் சம்பாதித்துக் கொண்டேன். அதற்கு மேல் எனக்கெதற்கு! மேற்கொண்டும் வேலை இருக்குமானால் அதை வேறொருவனுக்குக் கொடுங்கள். அவனும் பிழைக்கட்டுமே!” என்பான் ராமன். ஆயினும், எட்டணாக் கூலி மட்டும் கொடுத்தால் போதாது ராமனுக்கு. கொசுறாக ஒரு தேங்காயும் கொடுக்க வேண்டும். அந்தத் தேங்காயைத்தான் தினசரி கணபதிக்கு ‘சதிர்’விட்டு வழிபட்டு வந்தான் ராமன்.

கோதை சின்னஞ் சிறு வயதிலேயே தந்தையையும் தாயையும் இழந்தவள். அவள் பாட்டனான வனமாலி அவளுக்குத் தாயும் தந்தையுமாக இருந்து அவளை வளர்த்து வந்தான். வனமாலி வயோதிகத்தால் தளர்ந்து விட்டான். அவன் நடமாட்ட மெல்லாம் வீட்டோடுதான். வீட்டுப் பின்புறத் தோட்டத்தில் பூஞ்செடிகளையும் கொடிகளையும் பயிரிட்டுப் பாதுகாத்து நீர் பாய்ச்சி, அவற்றில் பூத்துக் குலுங்கும் பூக்களைப் பறித்து மாலை தொடுத்து விற்று அவன் ஜீவித்து வந்தான். அனாதையாக விடப்பட்ட அவனுடைய பேத்தி கோதைதான் அவனுக்கு உற்றார், உறவினர் எல்லாம்.

முதுமையின் காரணமாக வனமாலியினால் தோட்டத்தில் முன் மாதிரி பாடுபட முடியவில்லை. ஆனால் கோதைக்கு வயது வந்ததும் தோட்ட வேலையில் மிகவும் சிரத்தையோடு பாடுபடலானாள். வனமாலிக்கு இது பெரிய உதவியாக இருந்தது.

எட்டு வயதுச் சிறுமியாயிருக்கும் நாள் முதலே, வனமாலி தொடுத்துக் கொடுக்கும் கதம்பச் சரங்களை விற்று வந்து உதவுவாள் கோதை. குடிமையான கோதையிடம் ஊரில் உள்ள எல்லோருக்குமே ஒருவித அபிமானம்

ஏற்பட்டிருந்தது. "பூக்காரப் பெண் கோதை" என்று முதலில் அவளை ஊரார் அழைத்து வந்தனர். பிறகு கொஞ்சம் கொஞ்சமாக இப்பெயர் மாறிக் கடைசியில் பூங்கோதை என்றாகி விட்டது. ஊரிலுள்ளவர் யாராயினுஞ் சரி; பூங்கோதை எப்போது வருவாள் என்று பார்த்திருந்து அவளிடந்தான் கதம்பம் வாங்குவது வழக்கம். பூங்கோதை பூவெல்லாம் விற்று விட்டாளானால்தான் வேறொருவரிடம் பூ வாங்குவார்கள்.

பூங்கோதையின் வியாபாரமே அலாதி வகையைச் சேர்ந்தது. தினசரி பன்னிரண்டு முழம் கதம்பம் கணக்காகக் கொண்டு வருவாள். விற்றுக் கொண்டே வரும் போது முதலில் கூப்பிட்டு வாங்குபவருக்குக் கொடுப்பதற்கு முன்னால் ஒரு முழம் கதம்பத்தை முதலில் நறுக்கித் தனியாக வைத்து விடுவாள். மிச்சமுள்ளதை ஒரு முழம் ஒன்னரையணாவென்று விற்பாள். எப்படியானாலும் சரி, அவள் பாட்டனிடம் கொண்டு கொடுக்க ரூபாய் ஒன்று முழுசாகக் கிடைக்க வேண்டும். மேலும் அரையணாவோ, காலணாவோ நின்றால் அதற்குச் சூடம் வாங்கிச் செல்வாள். தனியாக எடுத்து வைத்த ஒரு முழம் கதம்பத்தைக் கோவிலில் முருகன் சன்னிதியில் வைத்து, சூடத்தையும் கொளுத்தி ஒருமுறை, நமஸ்காரஞ் செய்து விட்டுத் தான் வீடு திரும்புவாள். பூங்கோதையின் வியாபாரம் ஒரு நொடியில் தீர்ந்துவிடும். ஊராரெல்லோருமேதான் அவளுக்காகக் காத்துக்கொண்டிருக்கிறார்களே! தீருவதற்கென்ன!

இவ்வாறு தினந்தோறும் கோவிலில் கோதையின் முருக வழிபாடு தவறாமல் நடந்து வந்தது. பக்கத்தில் கணபதி சன்னிதியில் தன்னைப் போலவே தவறாமல் வழிபடும் ராமனைக் கோதை பல தடவைகள் பார்த்திருக்கிறாள். 'இந்தக் கல்லுப் பிள்ளையாரைக் கட்டிக் கொண்டு அழுகிறாரே இந்த மனிதர்!' என்று ராமனிடம் ஒரு வியப்பும் அநுதாபமும் ஏற்பட்டன கோதைக்கு. அந்த வியப்புத்தான் ஒருநாள் அவளை மீறி வெளிப்பட்டு, ராமனை நோக்கி, 'இந்தச் சாமியை இப்படிக் கும்பிட்டு வருகிறீர்களே ! இது என்னத்தை உங்களுக்குக் கொடுத்து விடப் போகிறது!' என்று கேட்கத் தூண்டித் துணிச்சலையும் தந்தது.

* * *

பூங்கோதை சொன்னதைக் கேட்டு ராமன் விழித்தான். "ஏன் ! இந்தச் சாமிக்கு என்னவாம் ! இது எனக்கு எதை வேணுமானாலும் கொடுக்கும் !" என்று அவன் பூங்கோதைக்குப் பதில் சொன்னான்.

"தனக்கு என்று ஒரு தங்க இடமில்லாமல், அரசமரத்தின் கீழ்.......தன்னந் தனியே... மானம் பார்க்க உட்கார்ந்திருக்கும் சாமி. உங்களுக்கு வீடு, வாசல் பணம், காசு, பெண்டாட்டி பிள்ளை எல்லாவற்றையும் வாரி வாரிக் கொடுக்குமோ !" என்று சொல்லிக் கோதை மேலும் கடகடவென்று சிரித்தாள்.

பூங்கோதையின் சிரிப்பில் குழந்தை யுள்ளத்தின் வெகுளியைத்தான் ராமன் கண்டான். வேறு ஒரு வகையான குற்றத்தையும் காணவில்லை. ஒரு மணி நேரத்தில் தனது தினசரி வாழ்க்கைக்கு அவசியமான எட்டணாவைச் சம்பாதித்தானானால் மிச்சம் நேரத்தை ஓரளவு தமிழ் படிப்பதிலும், தேவாரம், திருவாசகம் போன்ற பக்தி நூல்களைக் கற்பதிலுமாகக் காலத்தை நல்ல வழியில் கழிப்பவன் ராமன். பெரியோர்கள், படிப்பாளிகள், பக்திமான்கள் உள்ள விடங்களி லெல்லாம் அவனைப் பார்க்கலாம். இவ்வகைத் தொடர்பினால் ஓரளவு பக்தியுடன் ராமனுக்குப் படிப்பும் பண்பும் கூட வளர்ந்தன.

ராமனுக்குப் பூங்கோதையின் பேச்சில் கோபமே ஏற்படவில்லை. ஆனால் அவளையும் அறியாமல் அவன் உள்ளத்தில் சிறு சலனத்தை ஏற்படுத்தியது. தேங்காய் உரித்துக் கூலி பெறுவதையும் கணபதி வழிபாட்டையும் தவிர வேறு எதையும் நினைத்தறியாத அவனது உள்ளத்தில் பூங்கோதையின் சித்திரம் தானாகப் பதிந்தது. அவளுக்குப் பதில் சொல்லவேண்டும் என்று அவனுள்ளிருந்து ஏதோ ஒன்று தூண்டியது.

"உண்மைதான். நான் வழிபடுந் தெய்வம் நீ சொல்லும் அவல நிலையிலிருப்பது உண்மைதான். ஆனால் ஒரு விஷயம், பூங்கோதை ! நீ தொழுந் தெய்வம் முருகன். விரும்பிய பெண்ணை அவனுக்கு மணஞ் செய்வித்து அருளியது, இந்தத் தனிக் கட்டையான கணபதிதான், தெரியுமா !" என்றான்.

"ஆ...மாம், அப்படியே நினைத்துக் கொண்டிருங்கள். உங்களுக்கும் நீங்கள் நினைத்துக் கொண்டிருக்கும் பெண்ணையே கட்டிவைக்கும் உங்கள் சாமி !" என்று சொல்லி மறுபடியும் வெகுளித்தனமாகச் சிரித்தாள் பூங்கோதை. அப்படியே யாகட்டும் என்ற வகையில் தலையை அசைத்துக் கொண்டே கோவிலை வலம் வரலானான் ராமன்.



தேங்காய்க் கடைக்காரக் கந்தசாமிக்குக் கையில் கொஞ்சம் 'காசு' மிச்சப்படலாயிற்று. அதன் சின்னமாகச் சிறிது குணபேதமும் ஏற்படலாயிற்று.

வனமாலியின் சகோதரி பொருத்தி இருந்தாளாம். அவள் வாழ்க்கைப் பட்டதும், வாழ்க்கையில் நரக வேதனைகளை பனுபவித்துக் காலனின் கருணையால் விடுபட்டதும் பழைய கதை. பூங்கோதை அப்பொழுது பிறக்கவே இல்லை.

பிற்காலத்தில் தன் சகோதரி ஞானமி பட்ட கஷ்டங்களைப் பற்றி வனமாலி பூங்கோதையிடம் சொல்லி இருக்கிறான். ஞானமியின் புருஷன் வழியில், கந்தசாமி வனமாலிக்கு ஏதோ தூர பந்துவாக வேண்டும்.

கந்தசாமியின் மகன் சின்னசாமி. சற்றுச் சிவப்பு. கட்டுமஸ்தான தேகம். நடக்கும் போது பூமி அதிருகிறதோ என்று தோன்றும் படிதான் சின்னசாமி நடப்பான். படிப்போ பண்போ இல்லாதவன். அப்பனுக்குச் செல்வப் பிள்ளையாக வளர்ந்தவன் சின்னசாமி. புதுப் பணத்தின் திமிர் ஒரு பக்கம். சின்னசாமியின் வெளித் தோற்றம் பூங்கோதைக்கு ஓரளவு வியப்பை யளித்தது. பூங்கோதைக்குச் சின்னசாமி முறைக்காரன் என்ற வகையில் கந்தசாமி வனமாலியுடன் நடந்து கொண்டான். அதே வகையில் சின்னசாமியும் பூங்கோதையிடம் நடந்து வரலானான்.

கந்தசாமிக்கு உள் நோக்கம் வேறு. வனமாலியின் வீடு ஊருக்கு எல்லைப்புறத்தில் "டோல்கேட்டை" யடுத்திருந்தது. ஏறத்தாழ இரண்டு ஏக்கர் விஸ்தீரணமுள்ள இடத்தில் இரு கிணறுகளும் ஒரு பாகம் பூந் தோட்டமும் ஒரு பாகம் தென்னந் தோட்டமு மிருந்தன. இன்னும் ஒன்றிரண்டு வருஷங்களில் அந்தத் தென்னந் தோப்பில் மரங்கள் காய்க்கத் தொடங்கி விடும். தென்னந் தோப்புக்குத் தண்ணீர் பாய்ச்ச ஒரு ஆளை ஏற்பாடு செய்திருந்தான் வனமாலி. வாரத்தில் மூன்று நாட்கள் கிணற்றிலிருந்து தண்ணீர் இறைத்துத் தென்னந் தோப்புக்குப் பாய்ச்ச இந்த வேலையாள் உதவுவான். இரண்டு அல்லது மூன்று மணி நேரம் இவனுடன் வனமாலியுஞ் சேர்ந்து இறைப்பான். பூங்கோதை மண்வெட்டியை எடுத்துக் கொண்டு, தண்ணீர் பாய்ச்சுவாள். அன்றைய தினம் வேலைக்காரனுக்கு ஒருவேளை சாப்பாடு போட்டு நான்கணு கூலி கொடுப்பான் வனமாலி. பூந்தோட்டத்துக்குத் தினந்தோறும் பாட்டனும் பேத்தியுமாகத்தான் குடங் குடமாகத் தண்ணீர் ஊற்றுவார்கள். கந்தசாமியின் நோக்கமெல்லாம் இந்தத் தோட்டத்தின் மீதுதான்.

முறைக்காரன் என்ற வகையில் சின்னசாமிக்குப் பூங்கோதையைக் கட்டிப்போடுவது. பிறகு, சாலைப் புறத்தில் ஒரு சிறிய கடையை வைத்தால், 'டோல்கேட்டும்' அடுத்துள்ளதால் நல்ல வியாபாரமாகும். காலக்கிரமத்தில் தென்னந்தோப்பில் காய்க்கத் தொடங்கினால் இளநீராகவும் தேங்காயாகவும் வியாபாரம் செய்ய வசதி அதிகரிக்கும். கீற்று, மட்டை, பன்னாடை போன்ற எரி துரும்புகள் என்ற வகையில் வேறு வருவாயும் உண்டாகும். கிழவன் வனமாலி எத்தனை காலத்துக்கு இருக்கப் போகிறான்! சின்னசாமி-பூங்கோதை இவர்கள் கலியாணமான தினம் முதலே நாம் சர்வாதிகாரியாக அவ்விடத்தில் நிலைத்து விடலாம் என்பது கந்தசாமியின் அந்தரங்க எண்ணம். ஜாடை மாடையாக இவர்கள் மனப் போக்கை அறிந்திருந்தான் வனமாலி. ஆனால் படிப்பும் பண்பும் இல்லாத ஒருவனுக்கு ஞானமியைக் கட்டிக் கொடுத்ததின் விளைவை அவனால் மறக்க முடியுமா! பூங்கோதையின் தாய் மங்களத்தையும் அப்படியே தான் "முறைக்காரன்" என்ற ஒரு மூர்க்கனுக்குக் கட்டிக் கொடுத்துச் சொல்ல முடியாத கஷ்டங்களை மங்களம் அனுபவிக்கக் கண்டான். அதை இப்போது நினைத்தாலும் உடல் துடி துடித்துப் போவான். இவ்விதம் இரு முறை அனுபவமேற்பட்டதால் அவ் வகையைச் சார்ந்த சின்னசாமிக்குப் பூங்கோதையைக் கொடுக்க வனமாலிக்கு மனந் துணிய வில்லை.



தன் திருமணம் காரணமாகப் பாட்டன் படும் வேதனை கோதைக்குத் தெரியாமலில்லை. அவள் என்ன செய்வாள், பாவம்! படிப்பு வாசனையும் மனிதப் பண்பும் இல்லாத சின்னசாமியை மணக்க அவள் மனம் சிறிதும் சம்மதிக்க வில்லை. தாத்தாவுக்காக அவள் எதையும் செய்யத் தயாரா யிருந்தது, உண்மைதான். ஆனால் மனம் விரும்பாத மனிதனை எப்படி அவள் மணந்து கொள்வாள்!

கோதையின் இதயத்தின் ஒரு மூலையில் அவளைக் கவர்ந்தவன் உருவம் தோன்றிக் கொண்டுதான் இருந்தது. அது வேறு யாரும் இல்லை. ராமன் தான். அவன் படித்தவன். உயர்ந்த பண்புள்ளவன். ஊரிலும் ராமனுக்கு நல்ல மதிப்பு இருந்தது.

மளிகைக்கடை தங்கவேலு செட்டியார் ஒரு நாள் ராமனைக் கூப்பிட்டு "ராமய்யா! கொஞ்சம் உங்களுக்கு ஓய்வு இருக்கும்போது நம்ம கடையில் கணக்குகளைக் கொஞ்சம் பார்த்து உதவி செய்யுங்கள். உங்களைப் போன்ற நாணயமான நம்பத் தகுந்தவர் ஒருவர் கிடைத்தால் நான் கணக்கு வரையில் கவலையற்றிருப்பேன். மாதம் பத்து வராகன் செலவுக்கு எடுத்துக்குங்க. தீபாவளி, பொங்கலுக்கு ஒவ்வொரு மாசச் சம்பளம் அதிகப்படி போட்டுத் தரேன்" என்றார்.

"ஏதுக்குங்க செட்டியாரே! அதைப் படிச்ச பிள்ளைகள் – வேறு வகையில் உழைத்துப் பிழைக்க மாட்டாதவர்கள் — யாருக்காவது கொடுங்கள். பிழைத்துப் போகட்டும். கணக்கு எழுதித்தான் பிழைக்க முடியும் என்பவருக்குக் கொடுப்பதுதான் நியாயம். நான் எந்த வேலையாவது செய்து பிழைத்துக் கொள்வேன். உங்கள் தயவு மட்டும் போதும்" என்று மறுத்து விட்டான் ராமன்.

ராமனின் இந்த உயர்ந்த குணம் பூங்கோதை அவனிடம் கொண்டிருந்த மதிப்பை இன்னும் உயர்த்தியது. அவள் இதய அந்தரங்கத்தில் அவனிடம் கொண்டிருந்த இனம் தெரியாத அன்பையும் அதிகப்படுத்தியது.

* * *

வனமாலியிடம், சின்னசாமி—பூங்கோதை கல்யாணத்தை ஒருநாள் வெளிப்படையாகக் கந்தசாமி பேசினான். இதற்கு இணங்கவும் முடியாமல், மறுக்கவும் முடியாமல், பலத்த மனப்போராட்டத்துக்குப் பிறகு, பூங்கோதையின் மனத்தை யறிய முயன்றான் வனமாலி.

பூங்கோதைக்கு இவ்விஷயமாக ஏற்கெனவே மனம் குழம்பியிருந்தது. ஆயினும் வனமாலிக்குத் தன் விஷயமாக மன நிம்மதி வேண்டும் என்பதற்காக எவ்வித ஏற்பாடானாலும் ஏற்றுக்கொள்ளத் தயார். யாவற்றையும் முருகன் பொறுப்பில் விட்டு விட்டால் சரியாகி விடும் என்ற வகையில் வனமாலியிடம் தெரிவித்தாள். கந்தசாமியின் பேச்சுக்கள் ஒருவாறு முடிந்தன. ஊரறிய 'பரிசம்' போடும் நாளும் நிச்சயிக்கப் பட்டது. இவ்விஷயம் ஊர் முழுவதும் பரவி விட்டது. பரிசம் போடுவதற்கான ஏற்பாடுகளைக் கந்தசாமி மிகுந்த ஊக்கத்துடன் செய்து வரலானான்.

"தாத்தா! நீங்கள் பயப்படவே வேண்டாம். முருகன் ஒரு நாளும் நம்மைச் சோதிக்க மாட்டான்" என்று பூங்கோதை வனமாலிக்குத் தைரியம் சொல்லலானாள்.

• • •

அவள் சித்தத்தை யார் அறிய முடியும்! பரிசம் போட வேண்டிய நாள் நெருங்கிக் கொண்டிருந்தது. இன்னும் இரண்டே தினங்கள்தான் இடையில் இருந்தன என்ற பொழுது தான் அவ்விபத்து நேர்ந்தது. வனமாலி வீட்டின் பூந்தோட்டத்தில் இரண்டு மூன்று காளை மாடுகள் எப்படியோ புகுந்து பூச்செடிகளை மேய்ந்தும் மிதித்தும் சேதப்படுத்தின. பூங்கோதை கூச்சலிட்டுக் கொண்டே ஓடி அவற்றை ஓட்டினாள். ஒரு முரட்டுக் காளை சீறி இப்படியும் அப்படியும் பாய்ச்சல் காட்டிக் கடைசியில் பூங்கோதையை எதிர்த்துப் பாய வந்தது. "ஐயோ! முருகா!" என்று அலறி விட்டாள் பூங்கோதை. தலையைத் தாழ்த்தி வந்த காளை தன் இரு கொம்புகளாலும் பூங்கோதையைத் தூக்கி வேலிக்கும் அப்புறம் எறிய வேண்டிய நேரம்—அல்லது எறியத்தான் செய்ததோ—காளை பூங்கோதையின் மேல் பாய்வதும், அவள் கூவுவதும் அதே கணம் இரண்டடி பின்னால் நகர்ந்த பூங்கோதை வேலியின் மேல் விழுந்து அப்பாலிருந்த பள்ளத்தில் உருண்டு உருண்டு சென்று சேர்ந்தாள். இவை யெல்லாம் ஒரு கணத்தில் நடந்து விட்டன.

பூங்கோதையின் கூக்குரல் கேட்டு அக்கம் பக்கத்தார் ஓடிச் சென்று, பரிதாப நிலையில் பள்ளத்தாக்கில் விழுந்து மூர்ச்சையுற்றிருந்த பூங்கோதையை வீட்டுக்குக் கொண்டு வந்து சேர்த்தனர். இதைத் தொடர்ந்து காய்ச்சலும் தேகத்தில் இங்கும் அங்கும் ஏற்பட்ட காயமும் பூங்கோதையை ஒரு மாதம் படுத்த படுக்கையில் கிடத்தி விட்டன.

இதனால் வனமாலி அடைந்த மன வருத்தத்தைச் சொல்லி முடியாது. வீட்டு வேலைகளைப் பார்த்துக் கொள்ளுவதும், பூங்கோதைக்கு வேளா வேளைக்கு மருந்தும் ஆகாரமும் கொடுத்துக் கவனிப்பதும், தோட்டத்தைப் பாழாக்காது பாதுகாப்பதுமாக



பால்காரர்:—அம்மா, அம்மா! தயவு செய்து தமிழ்லே பேசுங்க. ஹிந்தியிலே 'கடபுடான்'னு பேசினீங்களானால் நம்ம மாடு பால் கறக்காது!

அவன் மீது மூச்சு விடவும் நேரமில்லாமல் வேலைகள் வந்து அமைந்து விட்டன. பரிசம் போட வேண்டிய நாளும் கழிந்து விட்டது. கந்தசாமியும் சின்னசாமியும் பட்டும் படாமலும் தங்கள் அனுதாபத்தை மட்டும் தெரிவித்து விட்டுச் சும்மா இருந்து விட்டனர்.

ஒரு மாத காலம் ஓடிவிட்டது. பூங்கோதை மெல்ல எழுந்து சற்று நடமாடத் தொடங்கினாள். ஆனால் பாவம் இடது கால் சற்று ஊனமாகி விட்டது. வலியையும் பொறுத்துக் கொண்டு நொண்டி நொண்டித்தான் நடமாடினாள். அவ்விதமேயாவது ஓரளவு தன் பாட்டனின் கஷ்டத்தைக் குறைக்கலாமே என்று வீட்டு வேலைகளையும் கவனிக்கத் தொடங்கினாள். நொண்டிக் கொண்டே கதம்பத்தை விற்க வந்த பூங்கோதையிடம் ஊரார் எல்லாம் கனிந்தனர். திருஷ்டி விழுந்துதான் பூங்கோதைக்கு இவ்வகையில் அங்கஹீனமேற்பட்டதென்று சிலர் சொல்லலாயினர்.

* * *

"இந்த நொண்டிப் பெண்ணைக் கட்டிக் கொள்ள முடியாது" என்று சின்னசாமி தன் தந்தையிடம் தெரிவித்து விட்டான். கந்தசாமியும் வனமாலியிடஞ் சென்று, "பரிசம் போட ஏற்பாடு செய்யும்போதே இந்தச் சம்பவம் நேரிட்டது. இது சகுனத்தடை. கடவுளுக்கே இதில் சம்மதமில்லை போலிருக்கிறது. பையனும் சம்மதப்படமாட்டேன் என்கிறான்" என்று சொல்லிக் கலியாணப் பேச்சை அம்மட்டோடு நிறுத்தி விட்டான்.

பூங்கோதை இதில் ஓர் உண்மையைக் கண்டாள். கந்தசாமி என்ன அர்த்தத்தில் சொல்லி இருந்தாலுஞ் சரி. கடவுளுக்கே இதில் சம்மதமில்லை என்றதில் உண்மை யிருந்ததாக எண்ணி வனமாலியிடத்திலும் இதே வேதாந்தத்தைச் சொல்லித் தேற்றுவித்தாள்.

அடுத்த ஒரு மாதத்துக்குள் புதுச்சேரியிலிருந்து ஒரு பெண்ணைப் பேசி, சின்னசாமியின் கல்யாணத்தை முடித்து விட்டான் கந்தசாமி.

"முருகா! என் கரம் பிடிக்க ஒரு புருஷனை சிருஷ்டிக்க மறந்து விட்டாயா!" என்று ஒரு சமயம் இறைஞ்சிடுவாள் பூங்கோதை. "உன் மனதிற்குகந்த வள்ளியை மணக்க உன்னால் இயலவில்லை. நீயே பரிதவித்துப் போனாய். என் மனத்துக்குகந்த........." வெட்கத்தால் அவள் எண்ணமும் ஓட மறுத்தது. "சரி, போதும் இந்த முருகனை வேண்டியது. 'அவர் சாமி'யைத்தான் இனி வேண்டிப் பார்க்கலாமே" என்ற எண்ணத்துடன், ஒரு தேங்காயை 'சிதிர்' விட எடுத்துக் கொண்டு கோவிலுக்குச் சென்றாள் ஒரு நாள்.

ஏறத்தாழ இதே விதமான எண்ணங்கள் ராமன் மனத்திலும் கொஞ்சகாலம் ஊசலாடின. இதற்குமேல், "போதும் இந்தக் கணபதியை வேண்டியது. தனக்கு ஒரு மனைவியைத் தேடிக் கொள்ள முடியாத இந்த சாமி என்று 'அவள்' சொன்னதில் உண்மை இருக்கலாம். ஆகவே இனி 'அவள்' சாமியைத் தொழுது பார்த்தாலென்ன! ஒன்றுக்கு இரண்டு மனைவிகளைத் தேடிக் கொண்டவனுக்கு..." அதற்கு மேல்ராமனின்சிந்தனையும் தடைப்பட்டது. ஒரு நாள் ஒரு முழம் கதம்பமும், காலணா சூடமுமாக ராமன் கோவிலுக்குச் சென்றான்.

"யாரது! பூங்கோதையா! என்ன தேங்காயைக் கொண்டு வந்திருக்கிறாயே! கதம்பம் எங்கே!" என்றான் பூங்கோதையைக் கோவிலில் சந்தித்த ராமன்.

"நீங்கள் என்ன கதம்பம் கொண்டு வந்திருக்கிறீர்களே! தேங்காய் எங்கே!" என்றாள் பூங்கோதை.

"நான்தானே முதலில் கேட்டேன். அதற்கு நீ பதில் சொல். பிறகு உன் கேள்விக்கு நான் சொல்லுகிறேன்" என்றான் ராமன். அவன் சொல்லில் ஒரு தனிக் கனிவு இருப்பதைக் கண்டாள் பூங்கோதை.

"இதில் முன்னென்ன பின்னென்னவாம்!" என்று 'களுக்' கென்று சிரித்தாள் பூங்கோதை.

நெடுநாட்களுக்கு அப்புறம் அந்த வெகுளிச் சிரிப்பையும் அதன் பின்னுலுள்ள வெள்ளை யுள்ளத்தையும் கண்ட ராமனுக்கு உள்ளம் கிளுகிளுத்தது.

"நீ சொல்லவில்லையா, பூங்கோதை! தனக்கென்று ஒரு வீடோ வாசலோ, மனைவி மக்களோ இன்றி நிற்கும் தனிக் கட்டையான இந்தச் சாமி உங்களுக்கு மட்டும் என்னத்தைக் கொடுக்குமென்று! ஆகவே இனிமேல் உன் சாமியை இறைஞ்சிடுவதென்று தீர்மானித்து.." என்று கூறி ராமன் தன் கையில் வைத்திருந்த கதம்பத்தை நோக்கலானான்.

சற்று நேரம் மௌனம். இடையில் இரண்டொரு தரம் பூங்கோதையின் முகத்தை நோக்கினான். மறுபடியும் தலையைக் கவிழ்த்துக் கொண்டாள். வைத்த கண் வாங்காமல் அவளை விழுங்கி விடுபவன் போல் பூங்கோதை பார்த்தவண்ணமே நின்றான். புதிதான இந்த அனுபவம் ராமனை என்ன என்னவோ செய்தது. முடிவில், "ஆமாம்! நீ ஏன் கதம்பம் கொண்டு வரவில்லை!" என்று கேட்டு நிலவரத்தைச் சமாளிக்க முயன்றான்.

"நீங்கள் முன்பு ஒரு நாள் சொல்லவில்லையா, 'உன் சாமி ஆசைப்பட்ட பெண்ணை என்றும்

பிள்ளைச் சாமிதான் முயற்சி எடுத்துக் கல்யாணம் செய்து வைத்தது என்று!' நானும் பார்த்தேன்..."

"...அப்படியானும் நீ ஒருவனைக் கல்யாணம் கட்டிக் கொள்ள ஆசைப்படுகிறாயாக்கும்! யார் அந்த பாக்கியசாலி, பூங்கோதை!"

பூங்கோதை தலையைக் கவிழ்த்துக் கொண்டாள். வெட்கம் வந்து கப்பிக் கொண்டது. சற்று நேரம் மௌனம். இரண்டொரு தரம் ஓரக் கண்ணால் ராமனைத் திருட்டுப் பார்வையால் எடை போட்டாள்.

"நீங்களும் அப்படித்தானே! உம்... கதம்பம் வாங்கி வந்தீங்க!..."

"ஆமாம். நானும் ஒரு பெண்ணை மணக்க விரும்பி இருக்கிறேன். அதற்காகத்தான்..."

"யாராம் அந்த அதிர்ஷ்டக்காரி!"

"நான் கேட்டதற்கு மட்டும் நீ பதில் சொல்ல வில்லையே!"

"ஆமாம்!" என்று செல்லமாகச் சிணுங்கிய பூங்கோதை, "இதிலே போட்டி என்னத்துக்கு!" என்றாள்.

"சரி! அந்தப் பெண் யார் என்று நான் உன் தாத்தாவிடம் தெரிவிக்கிறேன். இப்போது என் கேள்விக்குப் பதிலைச் சொல்லமாட்டாயா!"

"நான் எப்படிச் சொல்றதுங்க. எல்லாம் தாத்தா கிட்டே நீங்க வந்து சொல்றப்போ அவுங்களே உங்க கேள்விக்கும் பதில் சொல்லி விடுவாங்க."

என்ன காரணமோ தெரியாது......இருவரும் வானம் இடியும்படி சேர்ந்து இடி இடி என்று பலமாகச் சிரித்தனர்.

"வேண்டாம், பூங்கோதை! வழக்கப்படியே அவரவர் சாமியை அவரவர் தொழலாம். அந்தத் தேங்காயை இங்கே கொடு" என்று சொல்லிக் கொண்டே கதம்பத்தையும் கூடப் பொட்டலத்தையும் அவளிடம் கொடுத்தான் ராமன்.

இருவரும் சேர்ந்து இரண்டு சாமிகளையும் கும்பிட்டு எழுந்து கோவிலை வலம் வந்து கொண்டிருந்தனர்.

"இங்கிருந்து இருவருமே சேர்ந்து தாத்தாவைக் காணச் செல்லலாம், பூங்கோதை" என்று சொல்லிக் கொண்டே அவள் பக்கம் திரும்பினான் ராமன்.

என்ன ஆச்சரியம்! பூங்கோதை கொண்டையில்லையே! கன்னுகத்தான் கம்மைப் போல—முன்னாலிலே போல—நடந்து வருகிறாள்! அதே வீச்சு கைகளில், அதே வெள்ளைப் புன்னகை முகத்திலே!

இதைக் கண்டு பிரமித்துப் போன ராமன், சற்றுப் பேச்சற்று நின்ற நேரம்—தனக்குப் பின்னால் வந்து கொண்டிருந்த சின்னசாமி தம்பதிகளைக் கண்டு திகைத்தான்.

பூங்கோதையை எரிக்கும் கண்களால் பார்த்துக் கொண்டே வந்த சின்னசாமி, "என்ன, கோதை! கொண்டிக் கால்......" என்றதும், கோதை இடைமறித்துப் பேசினாள்.

"ஆமாம்! உங்கள் மனத்தைப் பார்க்கலாம் என்றுதான் கொண்டி என்று அன்று சாக்குச் சொன்னேன். உங்கள் குணம்தான் தெரிந்து போச்சு. இனிமேலே என்னத்துக்கு இந்த கொண்டிச் சாக்கு!" என்றாள்.

படித்துப்பாருங்கள்

இலங்கையிற் கலை வளர்ச்சி

கொலம்பஸ் என்ற மானுமிக்கு அமெரிக்காவைக் கண்டு பிடிப்பதில் எவ்வளவு கஷ்டமிருந்ததோ அவ்வளவு கஷ்டமிருக்கிறது, காலஞ் சென்ற பெரிய மனிதர்களுக்குத் தக்க ஞாபகார்த்தம் எழுப்புவதில். எப்படியோ இலங்கைவாசிகள் காலஞ் சென்ற ஈழகேசரி அதிபர் திரு பொன்னையா அவர்களுக்கு நினைவுச் சின்னம் ஏற்படுத்துவதில் நல்ல முடிவு செய்து நல்ல காரியம் செய்யத் தலைப்பட்டு விட்டார்கள். இதற்கு அவர்களை நாம் பாராட்ட வேண்டும்.

ஈழகேசரி அதிபர் திரு பொன்னையா இருபத்தைந்து வருஷ காலமாகத் தமிழ் வளர்ச்சிக்கும் தமிழ் கலாசார முன்னேற்றத்துக்கும் அரசியல் சுதந்திரத்துக்கும் அருந் தொண்டு புரிந்த பெருமகன் ஆவார். அவர் ஞாபகார்த்தமாகவும் அவர் புரிந்து வந்த தொண்டினைத் தொடர்ந்து செய்யும் முறையிலும் "ஈழகேசரிப் பொன்னையா நினைவு வெளியீட்டு மன்றம்" என்பதாக ஒரு கழகம் நிறுவியிருக்கிறார்கள். இதன் முதல் பிரசுரமாக 'இலங்கையில் கலை வளர்ச்சி' என்ற நூல் சிறந்த முறையில் வெளிவந்திருக்கிறது. இனியும் தொடர்ந்து பல நூல்கள் வெளி வரும்.

இலங்கை நீர் வளமும் நிலவளமும் பெற்றிருப்பதுடன் கலைவளமும் பெற்ற நாடு. "இலங்கையின் கலை புத்த சமயத்தோடு அதிகத் தொடர்புற்றதாகக் காணப்படினும் சைவ சமயச் சார்பும் கலந்துள்ளது. சோழ மன்னரும் பாண்டிய மன்னரும் இலங்கையில் ஆதிக்கம் செலுத்திய காலத்தில் அவர்களால் பொலன்னறுவையில் கட்டப்பட்ட கோவில்கள் அழகிய சிற்பத் திறம் வாய்ந்தவை" என்று கூறுகிறார், இந்நூலுக்கு மதிப்புரை அளித்துள்ள இலங்கையின் தபால் ஒலிபரப்புப் பகுதி அமைச்சர் திரு சு. நடேசபிள்ளை.

இந்த வகையில் உயர்ந்த சிற்பங்களின் அறுபத்திரண்டு புகைப்படங்களை உயர்ந்த ஆர்ட் காகிதத்தில் அச்சிட்டு இந்நூலில் வெளியிட்டிருக்கிறார்கள். இலங்கையின் கலை வளர்ச்சியைப் பற்றிய சரித்திரத்தையும், பாரத நாட்டுக் கலையின் கலைச் சிறப்பை உலகத்து அறிஞர்களின் கவனத்துக்குக் கொண்டு வந்த டாக்டர் ஆனந்தகுமார ஸ்வாமி அவர்களின் வாழ்க்கைக் குறிப்பையும் திரு க. நவரத்தினம் அவர்கள் மிக விரிவாக எழுதியுள்ளார்.

திரு நடேசப் பிள்ளை அவர்கள் சொல்வது போல் இந்நூல் 'இலங்கையின் கலைவளப்பைக் காண்பதற்குக் கண் கொடுத்துதவும் கலைநூல்!'

ஆசிரியர்: திரு க. நவரத்தினம்; பிரசுரம்: ஈழகேசரிப் பொன்னையா நினைவு வெளியீட்டு மன்றம், குரும்பசிட்டி, இலங்கை.
விலை: ரூபாய் 10. சதம் 50.



ரவிசந்திரிகா

14. சூரப் புலி!

சோமு

உஸ்தாத் மீரானுக்கு ஒரு விசேஷம் ஒன்றுமே ஓடவில்லை. திண்ணையிலே உட்கார்ந்திருப்பது நாகரத்தினமும் குப்புசாமியுந்தானு என்று கண்களை இரண்டு மூன்று தடவை மூடி மூடி விழித்தார்.

குப்புசாமியும் நாகரத்தினமும் உஸ்தாதுக்கு முன்னுல் பயத்தையும் மரியாதையையும் நன்ருக வரவழைத்துக் கொண்டு திண்ணையிலிருந்து எழுந்து நின்ருர்கள்.

"என்னடா குப்புசாமி!" என்று குப்புசாமியைத்தான் முதலில் வரவு விசாரித்தார் உஸ்தாத். அவனுக்கு உடம்பெல்லாம் அப்படியே வளைந்தது. புளியம் பழம் சாப்பிடும் சிறுவர்களின் முகம் எப்படி யெல்லாம் கோணுமோ, அப்படிக் கோணியது குப்புசாமியின் முகம்!

"லால்குடி முதலாளி உட்காருங்கள்! நிற்கிறீர்களே!" என்ருர், அடுத்தாற் போல் நாகரத்தினத்தை.

உஸ்தாத் "காமா"க இருக்கிருர் என்று நாகரத்தினத்துக்குத் தெரிந்து விட்டது. முதலாளி என்றல்லவா தன்னை அழைக்கிருர்! இந்த மரியாதை நல்லதுக்கு அடையாளம் இல்லையே!

நாகரத்தினம் உஸ்தாத் மீரானுடைய கோபத்துக்குக் காரணம் என்னவாக இருக்கக் கூடும் என்று யோசனை செய்து கொண்டே, திண்ணையில் மறுபடியும் உட்கார்ந்தான்.

"என்னடா குப்புசாமி, என்ன சமாசாரம்? இந்த நேரத்திலே இரண்டுபேரும் சேர்ந்து வந்திருக்கீங்க?" என்று கேட்டார் உஸ்தாத்.

இந்தக் கேள்விக்குக் குப்புசாமிக்குப் பதிலாக நாகரத்தினமே பதில் சொன்னுன்.

"உஸ்தாத்! இக்கட்டான நிலைமை எப்போ உண்டாகுதோ, அப்போல்லாம் இங்கேதானே வந்தாகணும்! வேறே எங்கே போக்கு எங்களுக்கு!"

"பரவாயில்லையே! லால்குடி முதலாளி ரொம்பப் பக்குவமாப் பேசப் படிச்சிருக்கிங்களே! ஏண்டா குப்புசாமி, உன்னைக் கேட்ட கேள்விக்கு இவரு பதில் சொல்லுருரு — என்னடா தம்பி! நீங்க ரெண்டு பேரும் சினிமாவுலே சொல்ருங்களே ஈருடல் ஓருயிர் அப்படீன்னு — அந்த மாதிரியாடா?"

நாகரத்தினம் பேசாமல் இருந்தான். குப்புசாமி உடம்பை நெளித்தான்.

"ஏண்டா குப்புசாமி! வாயிலே என்னடா போட்டிருக்கே? நாக்கு இருக்கா, இல்லே, அதையும் துப்பாக்கியோட சேர்த்து அந்த மாடியிலே போட்டுட்டு ஓடி வந்துட்டியா?"

நாகரத்தினத்துக்கு ஒரு விநாடி உடம்பில் மின்சாரம் பாய்ந்தது. குப்புசாமியோ திண்ணையில் ஒன்றிப் போய் நின்று விட்டான்!

"என்ன லால்குடி முதலாளி! நீங்கதான் பதில் சொல்லுங்களேன்!"

நாகரத்தினம் தொண்டையை ஒரு தரம் இருமிச்

சரிப்படுத்திக் கொண்டு உஸ்தாதிடம் பேச ஆரம்பித்தான்.

"உஸ்தாத்! நீங்க ஏதோ கொஞ்சம் கோபமா..."

"கொஞ்சமா? கொஞ்சம் கோபமா? சரியாப் போச்சு! தம்பீ நாகரத்தினம், எனக்கு இப்போ உங்க ரெண்டு பேரிடத்திலேயும் இருக்கிற கோபத்துக்கு ஒரு அளவே கிடையாது தெரிஞ்சுதா — கொஞ்சம்னு சொல்றது அதை!"

"உஸ்தாத்! நாங்க இப்போ எதுக்காக வந்திருக்கோம் என்கிற விஷயத்தைக் கேட்டா நீங்க அப்படிக் கோபப்படவே மாட்டீங்க—"

"நீங்க வந்திருக்கிற விஷயம்தானே? அதை வேறே கேக்கணுமா நான்! உண்மையைச் சொல்றதா யிருந்தா நீங்க ரெண்டு பேரும் இப்போ வந்திங்களே, அதனாலேதான் எனக்குக் கோபம்! வராம இருந்திருந்தா, நான் இவ்வளவு கோபப் பட்டிருக்க மாட்டேன்!"

"உஸ்தாத்! நான் உங்களை நேற்று ராத்திரி பார்த்திட்டுப் போனதுக்குப் பிறகு நடந்த சமாசாரம்........."

"நாகரத்தினம்! அதெல்லாம் எனக்குத் தெரியும்! ஏண்டா குப்புசாமி, பண்டிகை யிலே புலிவேஷம் போட்டுப் போட்டு ரொம்பத் தேர்ந்திட்டேடா நீ! இப்போ திருட்டு வேஷத்துக்கே வந்துட்டியே! பரீட்சை தேறிட்டே சிஷ்யா! இனிமே இந்தப் பள்ளிக்கூடத்திலே நீ படிக்கிறதுக்குப் பாடமே இல்லே!"

குப்புசாமி இப்பொழுது வார்த்தைகளை ஒவ்வொன்றாக அடுக்கிச் சேர்த்துத் தயங்கிக்கொண்டே பேச ஆரம்பித்தான்.

"வாத்தியாரய்யா! எந்தக் காரியமும் உங்களுக்குத் தெரியாமல் செய்தா இப் படித்தான் ஆகும். எனக்கு இப்போதான் அந்தப் புத்தி வந்தது—"

"புத்தியா! உனக்கா! அது அவ்வளவு சீக்கிரம் வந்திடுமா! ஏண்டா தம்பி, உனக்குப் புத்தியை வரவழைக்கணும்டா! தானா அது வராது! பார்ப்போம், வர வழைக்க முடியுமா இல்லையான்னு—"

நாகரத்தினத்துக்கு முகத்தில் கொஞ்சம் கடுமை உண்டாயிற்று. ஆனாலும் உஸ்தா திடம் எப்படிக் கோபத்தைக் காட்டிக் கொள்ளுவது? சொன்னான்:

"உஸ்தாத்! சந்திரிகா விஷயத்தில் என்னுடைய மனம் எத்தனை கொதித்துப் போயிருக்கிறது என்பது உங்களுக்குத் தெரிந்தால், நீங்கள் இத்தனை கோபப்பட மாட்டீர்கள். நேற்றிரவு எனக்கு இருந்த வேகம் அத்தனை! நீங்கள் கொஞ்சம் பொறுமையோடு நான் சொல்வதைக் கேளுங்கள். அதன் பிறகு—"



"நாகரத்தினம், ஒரு கேள்வி கேட்கிறேன், அதுக்கு மட்டும் பதில் சொல்லு. நேற்று ராத்திரி நான் உன்னிடத்திலே என்ன சொல்லி அனுப்பினேன், நீ என்ன செய்திருக்கே?"

"உஸ்தாத், உங்ககிட்டே யாரோ வந்து தவறுதலா என்னவோ சொல்லி யிருக்காங்க. அதுனாலேதான் நீங்க இப்படியெல்லாம் பேசுறீங்க—"

"நாகரத்தினம், இந்த உஸ்தாதுக்குத் தெரியாமல், இந்த உஸ்தாத் வார்த்தையை மீறி, இந்த உஸ்தாதுக்கு விரோதமாக ஒரு காரியம் செய்துடலாம்னு ரெண்டு பேரும் நினைச்சீங்க! அல்லாஹ் ஒரு குட்டுக் குட்டினான்! இப்போ மறுபடியும் உஸ்தாதைத் தாஜா பண்ணலாம்னு வந்திருக்கீங்க! ஆனா உஸ்தாத் முழிச்சுட்டான்! அதான் விஷயம்! ஏண்டா குப்புசாமி! குருவுக்கு மிஞ்சின சிஷ்யா! சரிதானேடா நான் சொல்றது! திருட்டுப் பயலே! புலிப் பார்வையா பாக்கிறே! சொல்லுடா பதில்!"

குப்புசாமிக்கு உடம்பு பதறியது.

"ஏண்டா, திருட்டு வேஷத்தைக் கலைச்சுட்டு வந்திட்டே! குருநாதன் பார்த்து உனக்கு ஸர்டிபிகேட் கொடுக்க வேண்டாமா? அதுக்குள்ளே அவசரமா! அட சூரப் புலியே!"

"உஸ்தாத்—" என்று நாகரத்தினம் தொடங்கினான்.

"தெரியும் எனக்கு; மூட்டாள்த்தனமா மாடியிலே ஏறிக் குதிச்சாச்சு! எதிர் வீட்டுக்காரன் வேறே வந்து பார்த்தாச்சு! நிலைமை ஒருமாதிரிச் சுழன்று போச்சு! அதுனாலே இப்போ உஸ்தாதுட்டே உதவிக்கு வந்திருக்கீங்க! மீரானைப் பைத்தியக்காரப் பயல்னுதானே நினைச்சிருக்கீங்க —இல்லே, ஒருவேளை லால்குடி முதலாளியோட பணம் இந்த மீரானை விலைக்கு வாங்கி விடும்னு நினைப்போ? ஏண்டா குப்புசாமி, நீ எத்தனை ரூபாய்க்குடா உன்னை வித்திருக்கே? வழக்கப்படி உனக்கு அஞ்சு ரூபாய். உன் வேஷத்துக்கு அஞ்சு ரூபாய். போன இடத்திலே உதை விழுமே, அந்த உதைக்கு அஞ்சு ரூபாய். மொத்தம் எத்தனை ஆச்சு?"

நாகரத்தினம், குப்புசாமி — இரண்டு பேருமே ஒன்றும் பேசவில்லை. ஐந்து நிமிஷம் மௌனம் நிலவியது. பிறகு உஸ்தாத் மீரானே பேசினார்:

"தம்பிங்களா! நல்லாத் தெளிவாகக் கேட்டுக்குங்க—எந்த நிமிஷத்திலே என் வார்த்தையை மீறி இப்படி ஒரு காரியம் செஞ்சுட்டீங்களோ, அந்த நிமிஷமே, அந்த விநாடியே இந்த உஸ்தாதுடைய உதவியை மறந்துட வேண்டியது! அதை



விட்டுட்டு, மறுபடியும் என்னிடத்திலேயே வந்து என்னையும் உங்க திருட்டுக் கூட்டத்திலே சேர்க்கலாம்னு நினைச்சீங்களே! அதைப் பார்த்தாத்தான் ஆவேசம் வருது! இத்தனை நாள் என்னோடு பழகினதுக்கு, என்னைப் பத்தி எத்தனை உயர்வா நினைச்சிருக்கீங்க! அடாடாடா!"

இந்த இடத்தில் நாகரத்தினத்துக்குக் கோபம் வந்தது. அந்தக் கோபத்தைக் கஷ்டப்பட்டு அடக்க முயன்றான்.

"முதலாளிக்குக் கோபம் வருது போலிருக்கு! அப்படியானா போயிட்டு வாங்க! அடே குருவுக்கு மிஞ்சின சிஷ்யா, குப்புசாமி! இனிமே இந்தத் திசைப் பக்கம் திரும்பினே, விலா எலும்பு நொறுங்கிடும்! ஜாக்கிரதை! புறப்படு — கடைசி முறையாச் சொல்லுறேன். இந்த உஸ்தாத் இனிமேல் ரவீந்திரனுடைய ஆள்! அந்த ரவீந்திரன் கறுப்போ, சிவப்போ, யோக்கியனோ, அயோக்கியனோ, பணக்காரனோ, ஏழையோ? — எப்படியிருந்தாலும் சரி, அதைப் பற்றி மீரானுக்குக் கவலை இல்லை. எவனாவது இனிமேல் ரவீந்திரன் வீட்டுப் பக்கம் அப்படி இப்படி நடமாடினானோ, இந்த மீரானுக்கு அவன் பதில் சொல்லி ஆகணும்! இது அல்லாஹ் உத்தரவுடா அடே தம்பிங்களா! அல்லாஹ் உத்தரவு, தெரிஞ்சுதா? கவனமா நடந்துக்குங்க."

நாகரத்தினம் திண்ணையை விட்டு எழுந்தான். குப்புசாமி 'திரு திரு' என்று விழித்துக் கொண்டே திகைத்தான்.

"என்னடா, ஆடு திருடினவன் மாதிரி முழிக்கிறே. கிளம்புடா! உன்னுடைய புருஷன் எழுந்தாச்சு! நீ இன்னும் உட்கார்ந்திருக்கிறே!"



நாகரத்தினம் சொன்னான்: "உஸ்தாத்! நீங்க இத்தனை தூரம் கோபப்படுவீங்கன்னு, நாங்க நினைக்கலை. குப்புசாமிக்கு—"

"தம்பி! குப்புசாமிங்கிற வார்த்தையை இன்னொரு தரம் சொல்லாதே. வீட்டிலே அம்மைக்கு உடம்பு சரியில்லைன்னு சொல்லி ராத்திரி அந்த நேரத்திலே கோதாவிலேயிருந்து கிளம்பி வந்து எனக்குத் தெரியாம, என்னோட யோசனைக்கு விரோதமா இப்படி ஒரு காரியம் எப்போ செஞ்சானோ, அவன் என் சிஷ்யனா! அவன் தான் என்னுடைய முதலாவது விரோதி. அவனை அந்த மாதிரிச் செய்யும்படி விலை பேசி வாங்கினானே ஒரு துரோகி, அவன் நம்முடைய ரெண்டாவது விரோதி! தெரிஞ்சுதா? புரிஞ்சுதா?"

நாகரத்தினத்துக்கு இதற்கு மேல் ஒன்றும் பேச ஓடவில்லை.

"நான் அப்போ சாவகாசமாப் பார்க்கிறேன், உஸ்தாத்! சலாம்!"

"சாவகாசமாப் பார்க்கிறதா! இனிமே உங்க ரெண்டு பேரையும் பார்க்கிறது சாவகாசத்திலே இல்லை. அப்படியே 'தரதர'ன்னு காய்ச்சின எண்ணெய் மாதிரிக் கொதிக்குமே ஒரு படபடப்பு, அந்தப் படபடப்பிலேதான் இனிமேல் உங்க ரெண்டு பேரையும் நான் பார்க்கணும்— அந்தச் சமயத்திலே உங்களை நீங்கதான் பாதுகாத்துக்கணும் — அல்லாஹ் கை விட்டுடுவான்! ஜாக்கிரதை!"

மீரானுடைய முகம் உண்மையில் எண்ணெய் காய்கிற இருப்புச் சட்டியாகத்தான் இருந்தது. அதைக் கவனித்த நாகரத்தினம் அந்த இடத்தை விட்டு நகர்ந்தான். குப்புசாமி மட்டும் கொஞ்சம் காலைத் தேய்த்தான்.

"தன்னுடைய வாலையே கடித்துக் கொண்டு சுத்திச் சுத்தி வருமே நாய், பாத்திருக்கியாடா குப்புசாமி! அதை நினைப்பு வச்சுக்க! உன்னுடைய வாலை இன்னொருத்தன் வெட்ட வேண்டிய அவசியமில்லை! நீயே அதுக்குத் தயாராகியாச்சு! போடா! போ! உலக்கை மாதிரி என் முன்னாலே நிக்காதே! அவமானமாயிருக்குடா! போ! போய்த் தொலை! உடம்பை மட்டும் பார்த்துக்க! நான் வளர்த்து விட்ட உடம்புடா அது!"

குப்புசாமியும் நாகரத்தினமும் அங்கிருந்து புறப்பட்டார்கள். குப்புசாமி அப்படியே இடி விழுந்தவன் மாதிரி ஒன்றுமே பேசாமல் நடந்தான். நாகரத்தினத்துக்கு மனத்துக்குள் கஷ்டமாக இருந்தாலும், குப்புசாமியை உத்தேசித்து அந்தக் கஷ்டத்தை வெளியே காட்டிக் கொள்ளாமல் நடந்தான். அவனுடைய மனமோ பலமாக ஒரு புதிய யோசனையில் ஈடுபட்டது.

"குப்புசாமி! கவலையே படாதே. இதுக்கும் ஒரு யோசனை பண்ணிட்டேன். இந்த உலகத்திலே உஸ்தாத் மீரான் ஒருத்தர்தான் மனுஷனோ! தம்பி, பணம் பத்தும் செய்யும்னு வசனம் கேட்டதில்லையா நீ? நம்ப ஜூவேஜ காலியாயிட்டாலும் பாதகமில்லை. இதிலே ரெண்டிலே ஒன்று பார்த்துத் தான் விடுறதுன்னு தீர்மானிச்சிட்டேன். உஸ்தாத் என்ன


திமிரோட பேசுறாரு. நாம்ப இவரைக் கேக்காம ஒரு காரியம் பண்ணிட்டோமாம், இவருக்குக் கோபம் வந்துட்டுதாம்! எப்படியிருக்குது கதை! காப்பி சாப்பிடுறது, டீ சாப்பிடறது கூட உஸ்தாதைக் கேட்டுத்தான் செய்யணும்னு சொல்லுவாரு போலிருக்கு—"

"அப்படியில்லே, நாகரத்தினம்! உஸ்தாத் சொன்னது என்னன்னு......"

"குப்பு! இன்னும் உனக்கு இந்த உஸ்தாத் பைத்தியம் விடல்லையா? உன்னைத்தான் என்னென்ன பேச்செல்லாம் பேசிட்டாரு. இன்னும் நீ அவரை மறக்கலையா? ஆனாலும் குரு பக்தின்னிறது உனக்கு அளவுக்கு மீறி இருக்குது. குப்புசாமி! இத்தனை வேண்டியதில்லை. வல்லவனுக்கு வல்லவன் வையகத்திலே உண்டு தம்பி."

"அப்படின்னா இப்போ என்ன செய்யணும்னு சொல்றே?"

"குப்புசாமி அதெல்லாம் யோசனை பண்ணி முடிச்சிட்டேன். சிலம்பப் பள்ளிக்கூடம் ஒண்ணு இருக்கிறதினாலேதானே இத்தனை திமிரோடு பேசுறாரு, மீரான்! இன்னும் ஒரு வாரத்திலே அந்தப் பள்ளிக்கூடம் என்ன ஆகுது, பார்! மீரான் பள்ளிக்கூடத்துக்கு எதிராக பகேரான் பள்ளிக்கூடம் ஒண்ணு கிளம்பாட்டா என் பேர் நாகரத்தினம் இல்லே!"



"என்ன பகேரானா?" என்று ஆச்சரியத்தோடு கேட்டான் குப்புசாமி.

"ஆமா, பகேரான் பள்ளிக்கூடந்தான்!"

"யார், நம்ப சட்டாம்பிள்ளை பகேரானா? மஜீத்தோட சாச்சா மகனா?"

"ஆமா! சட்டாம் பிள்ளைன்னா என்ன அவரு கடவுளா? மனுஷன்தானே! தம்பி, அதான் சொன்னேனே, லால்குடி கன்செப் பூராக் காலியாகிறதுன்னாலும் சரி. விடறதில்லே. இன்னைக்கு மீரான் இத்தனை பேசினதுக்கு ஒரு கை பார்க்காம விடப் போறதில்லே. அவரு ரவீந்திரனைக் கட்டி அழட்டும். நமக்குக் கவலையில்லே. பகேரான் நம்ப கட்சி. உஸ்தாதின் சிஷ்யர்கள் அத்தனை பேரும் நம்ப கட்சி. பாரு என்ன நடக்குதுன்னு. இனிமேல் குப்புசாமிதான் நம்முடைய சட்டாம்பிள்ளை!"

"என்ன! சட்டாம்பிள்ளையா? நானா!" என்று கேட்டான் குப்புசாமி. அப்படிக் கேட்கும்போதே அவனுக்கு நாக்கில் தண்ணீர் சொட்டியது.

"ஆமா தம்பி! சட்டாம் பிள்ளைன்னா என்ன அவருக்கு ரெண்டு கொம்பா முளைச்சிருக்கணும்! அப்படியே கொம்பு முளைச்சுத்தான் ஆகணும்னாலும், உனக்குக் கொம்பு முளைக்கப் பண்றது! அவ்வளவுதானே! குப்புசாமி, அதான் சொன்னேனே பணம் பத்தும் செய்யும், பதினாயிரமும் செய்யும் தம்பி!"

இப்படிப் பேசிக்கொண்டே நடந்தார்கள், குப்புசாமியும் நாகரத்தினமும், பாலக்கரை வீதியிலே! அங்கே மலைக் கோட்டையிலோ...?

மீரானை அழைத்து வரப் போன அப்புலிங்கமோ, காரோ வெகு நேரம் வரை திரும்பக் காணோம். ரவீந்திரனுக்கும் ராமநாதனுக்கும் கவலை ஏற்பட்டது. சந்திரிகா மனம் குழம்பினாள். டாக்டருக்குக் கவலையோ குழப்பமோ இல்லாவிட்டாலும், ஆஸ்பத்திரிக்குக் காலையிலே செல்லவேண்டிய கடமை இருந்தது.

"ரவீந்திரன், விடிகிற நேரம் ஆகி விட்டது. நான் ஒரு டாக்ஸியில் வீட்டுக்குச் சென்று விடுகிறேன். காலை எட்டு மணிக்குள் நான் ஆஸ்பத்திரியில் இருக்க வேண்டும். நீங்களும் குளித்துச் சாப்பிட்டு விட்டு ஆஸ்பத்திரிக்கு வாருங்கள். அப்புலிங்கத்தைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். மீரானோ பல ஜோலிக்காரர். அவர் எங்காவது போயிருப்பார். எப்படியும் மீரானைச் சந்திக்காமல் அப்புலிங்கம் வர மாட்டார். அதனால்தானே அவரைக் காரிலே அனுப்பினேன். இல்லையென்றால் தோட்டக்காரன் போனாலே போதும் என்று சொல்லியிருப்பேனே! எப்படியும் மீரானோடு வந்தால் சரிதான். நேரம் ஆவதைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம்!" என்று சொல்லிவிட்டு டாக்டர் புறப்பட்டார். அவரை வழியனுப்பலாம் என்று வெளியே வந்த சந்திரிகாவுக்கு உண்மையிலேயே கண் கலங்கி விட்டது. டாக்டர்களுக்கு இதயம் கிடையாது என்றும், கல் மனிதர்கள் அவர்கள் என்றும், சொல்கிறார்களே, அது எவ்வளவு பிசகு என்று மனத்திற்குள் நினைத்துக் கொண்டான் அவன்!

"உங்களுக்குத்தான் எங்களால் எத்தனையோ சிரமம்!" என்று நன்றி தோய்ந்த குரலில் டாக்டரிடம் பேச ஆரம்பித்தான் ரவீந்திரன்.

"மிஸ்டர் ரவீந்திரன், சரியாப் போச்சு! எனக்கு 'வோட் ஆப் தாங்க்ஸ்' சொல்ல ஆரம்பித்து விட்டீர்களே அதற்குள்ளே! இன்னும் நிகழ்ச்சிகள் முடிய வில்லையே, ஸ்வாமி!" என்று ரவீந்திரனிடம் சொல்லிக் கொண்டே ராமநாதனிடம்,

"மிஸ்டர் ராமநாதன்! ஒன்று சொல்கிறேன் கேளுங்கள், என் அநுபவத்தை. பொதுவாக டாக்டர் 'பின் குஷன்' மாதிரி. எங்கள் மேஜைகளில் இருக்குமல்லவா குண்டூசிகளைக் குத்தி வைப்பதற்காக, அந்த மாதிரிக் குஷன் என்று வைத்துக் கொள்ளுங்களேன்! யார் வேண்டுமானாலும் வருகிற நேரத்தில் எல்லாம் ஒரு ஊசியைக் குத்தி வைத்து விட்டுப் போவார்கள். அதற்கு நேரம் பொழுது என்று இடையாது. குஷனுக்கு வலிக்குமே என்று கவலைப் படுவதுண்டோ? அப்படிக் கவலைப் படுவதிலேதான் அர்த்தமுண்டோ?"

இவ்வாறு சொல்லிப் பலமாக ஒரு சிரிப்புச் சிரித்தார் டாக்டர்.

ரவீந்திரன் பணிச்சென்று பதில் சொன்னான்: "டாக்டர், நீங்கள் தான் எல்லாரையும் பிடித்துஊசி குத்துகிறீர்கள் என்று நாங்கள் சொல்லுகிறோம். நீங்களானால், எங்களைச் சொல்கிறீர்களே!"



"யார் ரவீந்திரனா பேசியது. பலே! சபாஷ்! இருமட்டும் உங்களுடைய வழக்கமான வேடிக்கை வரப் பார்க்கிறதே!" என்று சொல்லிக் கொண்டு புறப்பட்டார் டாக்டர் சுரேஷ்.

டாக்டர் சென்று அரை மணி நேரத்துக்குள் அப்புலிங்கம் வந்து சேர்ந்து விட்டான்! ஆனால் எதிர்பார்த்தபடி வீரான் அவனுடன் வரவில்லை.

ஏமாற்றத்தோடு அவனை வரவேற்ற நண்பர்களிடம் அப்புலிங்கம் விவரங்களையெல்லாம் சொன்னான். அதிலும் "ரவீந்திரன் எப்படிப்பட்ட மனிதனாக இருந்தாலும் சரி. இனி அவர் நம்முடைய ஆள்!" என்று வீரான் சபதம் கூறியதைச் சொல்லும்போது உள்க் கூடத்திலே யிருந்து பேச்சைக் கேட்டுக் கொண்டே வந்த சந்திரிகா தன்னையும் மீறி, "கடவுள் காப்பாற்றினார்!" என்று சொல்லிய வண்ணம் ரவீந்திரனுடைய முகத்தை மிக்க அன்போடு பார்த்தாள்.

அந்தக் கவலையான முகத்தில் ஒரு விநாடி நிம்மதி ஒளி வீசிற்று.

* * *

கார் எட்டரைமணியிருக்கும். டாக்டருடைய காரை ஓட்டிக்கொண்டு ஆஸ்பத்திரிக்குள்ளே நுழைந்தான் அப்புலிங்கம்.

கார் சத்தத்தைக் கேட்டு, அப்புலிங்கத்தின் தகப்பனார் தமது பதினைந்தாம் நம்பர் அறையிலிருந்து மெதுவாக எழுந்து வராந்தாவுக்கு வந்தார். அப்புலிங்கம், ராமநாதன், ரவீந்திரன் — மூவரும் படிகளில் ஏறி வராந்தாவுக்குச் சென்றார்கள்.

ஆனால் இதென்ன எதிர்பாராத நிகழ்ச்சி? பன்னிரண்டாம் நம்பர் அறையிலிருந்து பதறிக் கொண்டு வெளியே வருவது யார்? நாகரத்தினமா? கல்யாணி அம்மாளின் அறையிலிருந்தா வருகிறாள்?

"யார் நாகரத்தினமா? இங்கேயா இருந்தாய் இத்தனை நேரம்?" என்று கேட்டுக் கொண்டே அப்புலிங்கத்தின் தகப்பனார் முருகானந்தம், ஒரே வியப்போடு பன்னிரண்டாம் நம்பர் அறையை நோக்கி நடந்தார். ஆனால் நாகரத்தினம் அவரைத் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. விறு விறு என்று ஓட்டமும் நடையுமாக அந்த அறைக்கு அப்பால் நடந்தாள்.

"நாகரத்தினம்! நாகரத்தினம்!" என்று இரண்டு முறை கூப்பிட்டுப் பார்த்தார் முருகானந்தம். பதிலே இல்லை! அவள் அந்த அறைகளைத் தாண்டி வராந்தாவின் திருப்பத்திலே மறைந்து விட்டாள்.

"நாகரத்தினம்!" என்றவார்த்தைகாதிலே விழுந்ததுதான் தெரியும். காரிலிருந்து இறங்கிய மூவரும் திரும்பிப் பார்த்தார்கள்.

"யார் நாகரத்தினமா? கல்யாணியின் அறையிலிருந்து அவள்தானா போகிறாள்?" என்று கேட்டுக்கொண்டே வராந்தாவில் வேகமாக ஏறினான் ரவீந்திரன்.


"ரவி!" என்று அவனுடைய கையைப் பிடித்து இழுத்தான் அப்புலிங்கம்.

"ரவி! தயவுசெய்து நாகரத்தினத்தைப் பின் தொடராதே! ஏதாவது எக்கச்சக்கமாக நடந்துவிடப் போகிறது. சொல்கிறதைக் கேள்! ரவி!" என்றான் அப்பு.


"நாகரத்தினமா? எக்கச்சக்கமாகவா!" இப்படிச் சொல்லும் போதே ரவீந்திரனுடைய குரலில் ஒரு வெறி கிளம்பியது. அடுத்த கணம் அப்புலிங்கத்தின் கையிலிருந்து தன் கையை வேகத்தோடு உதறினான் ரவீந்திரன். ராமநாதனைத் தாண்டிக் குதித்தான்.

"நாகரத்தினம்!" என்று ஆவேசமான ஒரு கூப்பாடு! அடுத்த விநாடி தடுத்தவர்களுடைய பிடியிலிருந்து சுண்டிக்கொண்டு, சுழன்று அடிக்கும் சூறாவளியின் வேகத்திலே எம்பிப் பாய்ந்து, மறைந்தோடும் நாகரத்தினத்தைப் பின் தொடர்ந்தான் ரவீந்திரன்! (தொடரும்)


ஹாஸ்யக் களஞ்சியம்




குழந்தையை இந்த மாதிரி பழக்கினதில், நாம் பேசிக் கொண்டு போகலாம். குழந்தையும் கூடவே வரும். யோசனை எப்படி?


"அவருக்குக் கொஞ்சம் உயரமான நாற்காலி போடக் கூடாதோ?"
"உயரமான நாற்காலிதானே போட்டேன்! பூமிக்குள்ளே அழுந்தி விட்டதுங்க!"


"எல்லோருக்கும் 'டான்ஸில்ஸ்' இருக்கணும், உனக்கு இல்லையே! கெதேலோ என்னவோ டாக்டரைப் போய்ப் பாரு!"


சாமா
"ஒரே நாளில் பல மோசமான காரியங்கள் செய்து விடுகிறாயே அது எப்படி?"
"நான் காலையில் சீக்கிரம் எழுந்து விடுகிறேனுங்க!"
"சீட்டு ஆட்டத்தில் ஜெயித்துப் பணம் வந்ததாம். அதைத் என் கணவர் இந்தப் புடவையை வாங்கித் தந்தார்."
"என் மாமனாருக்கு எதையுமே சின்னதாகச் செய்யத் தெரியாது. இதோ பாருங்கள், என் கலியாணத்திற்கு வாங்கினவைகளே!"
"என்னைத் தெரியவில்லையா? சனிக்கிழமை தெருவில் என்னை இழுத்துக் கீழே தள்ளினீர்களே."
"எத்தனை மணிக்கு?"
"பையன் என்ன 'பி. காம்' தானே?"
"இல்லே 'பி. காம் ப்ளெக்ஸ்'!"

பர்மா ரமணி

அழ. வள்ளியப்பா



1. மணி அடித்தது!

"சரோஜா, நேற்று ராத்திரி நடந்ததெல்லாம் அப்படி அப்படியே என் கண் முன்னாலே நிற்கிறது. அந்த ஜெயில் பூட்டு எப்படிப் 'படீர்' என்று தானாக உடைந்தது! அந்த ஆற்றின் நடுவே எப்படித் 'திடீ'ரென்று பாதை உண்டாயிற்று! இன்னும்......

"இன்னும் 'கடமுட கடமுட' என்று எப்படி இடி இடித்தது! 'பளிச் பளிச்' சென்று எப்படி மின்னல் மின்னியது! 'உஸ்ஸ்' என்று சீறிக்கொண்டு எப்படி அந்தப் பாம்பு படம் எடுத்து ஆடி வந்தது! இதையெல்லாம் பார்க்கப் பார்க்க அற்புதமாகத்தான் இருந்தது, அண்ணா!"

"ஆமாம், சரோஜா! இன்னொரு தடவைகூடப் பார்க்க வேணும் போலே இருக்கிறது."

"எனக்குந்தான், அண்ணா! அப்பாவிடம் சொல்லிக் கட்டாயம் போய்ப் பார்த்துவிட்டு வந்துவிட வேண்டும்."

"ஏண்டி சரோஜா, எதைக் கட்டாயம் போய்ப் பார்க்க வேணும்? மிருகக் காட்சிச் சாலையிலே புதிதாய் வந்திருக்குதே காண்டா மிருகம், அதைத் தானே?" என்று கேட்டுக் கொண்டே அப்போது அங்கே வந்தாள், சரோஜாவின் சிநேகிதி சகுந்தலா.

இதைக் கேட்டதும், சரோஜாவும் அவள் அண்ணன் முரளியும் 'கடகட' வென்று சிரிக்க ஆரம்பித்தனர். பிறகு, சரோஜா சகுந்தலாவைப் பார்த்து, "காண்டா மிருகத்தைப் பற்றியோ, கரடிக் குட்டியைப் பற்றியோ நாங்கள் பேசவில்லை, சகுந்தலா. தேவேந்திரா தியேட்டரில் நடக்கிறதே 'கிருஷ்ண லீலா' அந்த நாடகத்தைப் பற்றித் தான் பேசிக் கொண்டிருந்தோம். அந்த நாடகத்திலே ஒவ்வொரு காட்சியும் எப்படித் தெரியுமா இருக்குது? அடடா! அதிலே கிருஷ்ணனாக நடிக்கிறான் ஒரு சின்னப் பையன். அவன் நடிப்பைப் பற்றி எப்படிச் சொல்வதென்றே தெரியவில்லை!" என்றாள்.

"அவன் மட்டும்தான் பிரமாதமாக நடிக்கிறானே! அந்தக் கொட்டகையே கிடுகிடுக்கும்படி ராவணனாக நடித்தானே ஒரு பையன்......"



இப்படி முரளி சொன்னதும், சரோஜாவும் சகுந்தலாவும் சிரிக்க ஆரம்பித்து விட்டார்கள்.

"ஏன் இப்படிப் பல்லைக் காட்டுகிறீர்கள்?" என்று சற்றுக் கோபமாகக் கேட்டான் முரளி.

"என்ன அண்ணா, 'கிருஷ்ண லீலா'விலே ராவணன் எங்கே வந்தான்?" என்று சிரித்துக் கொண்டே கேட்டாள் சரோஜா.

"ப்பூ! கம்ஸன் என்பதற்குப் பதில் வாய் தவறிச் சொல்லி விட்டேன். அதுக்கா இந்த அசட்டுச் சிரிப்பு!" என்றான் முரளி.

"சரி, அது போகட்டும். ஏன் முரளி, எத்தனை மணிக்குக் 'கிருஷ்ண லீலா' ஆரம்பமாகிறது?" என்று கேட்டாள் சகுந்தலா.

"சரியாக ஆறு மணிக்கு ஆரம்பமாகும். எட்டு மணிக்கு முடியும்."

"அப்படியா! சரி. இதோ இப்போதே என் அப்பாவிடம் சொல்லி இன்றைக்கே 'கிருஷ்ண லீலா'வைப் பார்த்து விட்டு வருகிறேன். பார்த்த பிறகு உங்களோடே பேசினால்தான் சுவாரஸ்யப்படும்" என்று கூறிவிட்டு வந்த வழியே ஓடினாள் சகுந்தலா.

"அண்ணா, நாமும் அப்பாவிடம் சொல்லி இன்னொரு தடவை கட்டாயம் அந்த நாடகத்தைப் பார்த்துவிட வேண்டும்" என்றாள் சரோஜா.

இப்படிச் சரோஜாவும், முரளியும் தான் நாடகத்தைப் பற்றிப் பேசுவதாக நினைக்க வேண்டாம்! சென்னை நகர் முழுவதும் அதைப் பற்றியே பேச்சு! தினமும் ஆயிரக் கணக்கான குழந்தைகளும், பெரியவர்களும் கூட்டம் கூட்டமாகச் சென்று அந்த நாடகத்தைப் பார்க்கிறார்கள். பார்த்துவிட்டுச் சும்மா திரும்பி வரவில்லை; 'அபாரம்! அற்புதம்! பிரமாதம்!' என்றெல்லாம் புகழ்ந்து கொண்டே வருகிறார்கள்!

'ஸ்ரீ முருகன் பால நாடக சபா' என்றால் சென்னை நகரில் பச்சைக் குழந்தைக்குக்கூடத் தெரியும். அந்த நாடகக் குழுவில் இருப்பவர்கள் எல்லாருமே குழந்தைகள்தான். பதின்மூன்று பதினாறு வயதுக்குமேல் எவருமே இல்லை. மொத்தம் நாற்பத்து மூன்று குழந்தைகள் இருக்கிறார்கள். அவர்களுடைய பேச்சும், பாட்டும், நடிப்பும்—அடடா! அபாரம்! அபாரம்! அந்தச் சபையாரின் காட்சி அமைப்புகளெல்லாம் மிக மிகப் பிரமாதமாயிருக்கும். கண் மூடிக் கண் திறப்பதற்குள் பிரம்மாண்டமான காட்சிகளையெல்லாம் காணலாம். பளபளப்பான உடைகளும், வர்ண விளக்குகளும் அப்படியே உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும்.


குழந்தைகளை வைத்து இவ்வளவு பிரமாதமாக நாடகங்களை நடத்துவதற்கு முக்கிய காரணம் யார்? அவரைத் தெரிந்து கொள்ள வேண்டாமா? அவர் தான் அந்தச் சபாவின் மானேஜர் மதுரநாயகம். அவரது முயற்சியால்தான் அந்தச் சபா இவ்வளவு தூரம் பெரும் புகழும் பெற்றிருக்கிறது! நாடகங்களைத் தேர்ந்தெடுப்பது, அவற்றை ஒழுங்காக நடத்துவது, குழந்தைகளைத் தயார் செய்வது, வரவு செலவுக் கணக்குகளைப் பார்ப்பது, விளம்பரம் செய்வது எல்லாம் மதுரநாயகத்தின் பொறுப்புத்தான். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால், மதுரநாயகம் இல்லா விட்டால், அந்த நாடக சபாவே இல்லை!

அன்று செவ்வாய்க்கிழமை. நாடகம் கிடையாது. முதல் நாள் திங்கட்கிழமையும் நாடகம் நடக்கவில்லை. மறு நாள் புதன்கிழமைதான் நாடகம்.

நடுவே இரண்டு நாட்கள் நாடகம் நடக்காததற்குக் காரணம் வேறொன்று மில்லை. ஒரு நாடகம் முடிந்து மறு நாடகம் ஆரம்பிப்பதற்கு இடையிலே

சிறுவர்கள் சித்திரப்போட்டி







இரண்டு நாட்கள் வேண்டும். முந்திய நாடகத்தில் உபயோகித்த காட்சித் திரைகளை யெல்லாம் அப்புறப் படுத்தி விட்டுப் புது நாடகத்துக்கு வேண்டிய காட்சித் திரைகளை அமைப்பதற்குத் தான் இரண்டு நாட்கள் வேண்டி யிருக்கிறது!

'கிருஷ்ணலீலா' முடிந்து இப்போது 'துருவன்' நாடகம் ஆரம்பமாகப் போகிறது. அதற்கு வேண்டிய ஏற்பாடுகளெல்லாம் வெகு மும்முரமாக நடந்து கொண்டிருந்தன.

பகல் மணி இரண்டு இருக்கும். வீட்டுக்குச் சாப்பிடப் போயிருந்த மதுர நாயகம் திரும்பி வந்தார். மேடையில் எவ்வளவு தூரம் அலங்கார வேலைகள் நடந்திருக்கின்றன என்பதைப் பார்த்து விட்டுத் தம் அறைக்குச் சென்றார்.

மானேஜர் மதுரநாயகம் அறைக்குள்ளே போய் நாற்காலியில் உட்கார்ந்தார். துருவன் நாடகத்துக்கு இன்னும் என்னென்ன சாமான்கள் தேவை என்று யோசனை செய்தார். அவற்றை ஒரு காகிதத்தில் எழுதினார். எழுதி முடித்ததும், கைக் கடியாரத்தைப் பார்த்தார். மணி இரண்டரை. உடனே அவருக்கு ஏதோ ஞாபகம் வந்தது. மேஜைமீது இருந்த மணியை 'கிணிங்' என்று ஒரு தடவை அடித்தார்.

ஒரே ஒரு தடவைதான் அடித்தார்!

சில ஆபீஸ்களில், 'கிணிங், கிணிங், கிணிங், கிணிங்' என்று மிட்டாய்க் காரனைப் போல் ஓயாமல் மணியை அடித்துக் கொண்டே யிருப்பார்கள். ஆனாலும், ஆபீஸ் பையன் வரமாட்டான். எங்காவது மூலையில் தூங்கிக் கொண்டிருப்பான். அல்லது சொந்த வேலையாக வெளியே போயிருப்பான். இரண்டும் இல்லாத போனால், யாருடனாவது அரட்டை அடித்துக் கொண்டிருப்பான். கடைசியில் மணி அடித்தவரே, தாம் செய்ய வேண்டிய வேலையைச் செய்து முடித்து விடுவார்!

ஆனால், அங்கேயுள்ள ஆபீஸ் பையன் ரமணி அந்த ரகத்தைச் சேர்ந்தவனல்ல! மதுரநாயகம் ஒரே ஒரு தடவைதான் மணியடித்தார். உடனே, 'குப்'பென்று பாய்ந்து அறைக்குள்ளே ஓடினான். "என்ன சார்?" என்று அவன் மிகவும் பணிவாகக் கேட்டான். (தொடரும்)

1. க. திலகவதி, வயது 8, கல்வத்தை, இலங்கை; 2. கே. ஆண்டாள், வயது 12, ஐயங்குளம் கீழ்கரை, தஞ்சாவூர்; 3. எஸ். ஜி. ரமணன், வயது 11, தேவகோட்டை.

நிரூபணம்!



சாதாரணமான எளிய
பரீக்ஷைகளிலும் கூட

புதிய

'ஆஸ்ப்ரோ'

வலி, ஜுரம் இவற்றினின்று

துரிதமாயும், அபாயமின்றியும் நிவாரணம் அளிக்கின்றது

என்பது நிரூபிக்கப்பட்டிருக்கிறது

சிறந்தபாக்கிங்-நிறைந்தபாதுகாப்பு

புதிய 'ஆஸ்ப்ரோ'வுடன் கூடிய காகிதத் துண்டை ஜலத்திலிட்டு, எவ்வளவு நேரம் வேண்டுமாயினும் வைத்திருங்கள். பிறகு அத்துண்டைப் பிரித்து வில்லைகளைப் பரிசோதியுங்கள்—அவைகள் கெடாமலும், சுத்தமாயும், ஈரமில்லாமலும் இருக்கக் காண்பீர்கள்.



ஒவ்வொரு புதிய 'ஆஸ்ப்ரோ'வும், காற்று மற்றும் ஈரம் படாமல் தனித் தனியே ஸீல் செய்யப்பட்டிருப்பதனால், உதிரி வில்லைகளால் ஏற்படும் வயிற்றைப் பாதிக்கும் அமிலங்கள் சேர்வதினின்றும் பாதுகாக்கிறது.

துரிதமான வேலை - அதி சீக்கிர நிவாரணம்

இரண்டு புதிய 'ஆஸ்ப்ரோ' வில்லைகளை ஒரு கிளாஸ் ஜலத்திலிடவும். அவை நொடியில் ஜலத்தில் கரைந்து மென்மையான தூளாய் விடுகின்றன. இச்சிறந்த செய்முறை வழிக்கு எமது நன்றி. இதே மாதிரிதான் புதிய 'ஆஸ்ப்ரோ'வும் உங்கள் தேகத்திற்குள் க்ஷணத்தில் வேலை செய்ய ஆரம்பிக்கிறது.



புதிய 'ஆஸ்ப்ரோ' அதைப்போலுள்ள மற்றெவ்விதமான வில்லைகளைக் காட்டிலும் வேகமாகக் கரைகிறது, என்பதை ரசாயனசாலைப் பரீக்ஷைகள் நிரூபித்துள்ளன. புதிய 'ஆஸ்ப்ரோ'வில் துர்ப்பழக்கம் உண்டாக்கும் மருந்துகள் எதுவும் சேர்க்கப்படவில்லை, அன்றியும் அது இருதயத்தையோ வயிற்றையோ பாதிக்காது.



கைக்கடக்கமான மூன்று வில்லைகளடங்கிய
பாக்கெட் விலை 2 அணா
30 வில்லைகள் கொண்ட குடும்ப சைஸ் ரூ. 1/2

விநியோகஸ்தர்கள்: மூல்லர் அண்டு பிப்ஸ் (இந்தியா) லிமிடெட்,
பம்பாய், கல்கத்தா, மதராஸ், டில்லி.


ஒரு காங்கிரீட் வீடு வாழ்நாள்
முழுதும் வசதியையும், அமைதி
யையும் உங்களுக்கு தருகிறது.
உங்கள் காங்கிரீட் வீடுகளை எத்தகைய விசித்திர வேலைப்பாட்டிலும், சைசிலும், மாடிகளிலும் அமைக்கலாம். காங்கிரீட் வீட்டின் முதற்செலவு நேர்மையானது. ஒரு ஆயுட்காலம் வரை உழைக்க வல்லது. அதன் செப்பனிடும் செலவு மிகக் குறைவானது.
60 படங்கள் கொண்ட புத்தகத்திற்கு எழுதுங்கள் : விலாசம் :- தி காங்கிரீட் அஸோசியேஷன் ஆப் இந்தியா, 9, மௌண்ட் ரோடு, மதராஸ். ப்ளான்களும், மற்றும் முழு விவரங்களும் அடங்கிய புத்தகம் ரூ. 2/-. தபால் செலவு அணா 0-10-0 பிரத்தியேகம்.
நீடித்த உழைப்புக்கென
ஏ சி சி செமண்டினால்
கட்டப்பட்டது.

ஆரோக்கிய வாழ்வு

சீதாலக்ஷ்மி குமாரசாமி

26. அர்த்தமத்ஸ்யேந்திராசனம்

ஆஸ்துமாவுக்கு விபரீதகரணி, சர்வாங்காசனம், மத்ஸ்யாசனம், சிரசாசனம் ஆகிய இவைகள்தாம் முக்கியமென்றாலும், மற்றும் புஜங்காசனம், பஸ்சிமோத்தனு முதலிய ஆசனங்களும் ஆஸ்துமாவுக்குத் துணை செய்கின்றன. அவ் வகையில் இந்த அர்த்தமத்ஸ்யேந்திராசனமும் ஆஸ்துமாக்காரர்களுக்கு ஆஸ்துமா குணமாக உதவி செய்கிறது.

சலபாசனம், தனுராசனம், ஹலாசனம், மயூராசனம் முதலியவைகளும் இருக்கின்றனவே, அவைகளால் ஆஸ்துமாவுக்கு நன்மை ஒன்றும் இடையாதா! அவைகளைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லையே என்று சிலருக்குச் சந்தேகம் ஏற்படலாம்.

மேற்சொன்ன ஆசனங்கள் மட்டும் அல்ல, மற்றும் எத்தனையோ வித ஆசனங்கள் இருக்கின்றன. அவைகள் எல்லாமுமே ஆஸ்துமாவுக்குத் துணை செய்யக் கூடியவைதான். ஆசனங்களெல்லாமே தேகப் பயிற்சி வகையில் சேர்ந்தவை தானே! ஆகையால் எல்லாம் நன்மை செய்யக் கூடியவையே. ஆனால் இது வரை நான் குறிப்பிட்ட ஆசனங்கள் மட்டும் செய்தாலே ஆஸ்துமாவுக்குப் போதுமானது. சௌகரியம், நேரம், இஷ்டம் இருப்பவர்கள் மற்றவைகளையும் செய்யலாம். இதுவரை சொல்லி வந்த ஆசனங்களிலும் வயது, உடல் நிலை, நோய் நிலை முதலியவைகளை அனுசரித்துச் சிலவற்றைக் குறைக்க வேண்டி வரும். சிலர் அது செய்தால் என்ன, இது செய்தால் என்ன என்று ஆசனங்களை முறைப்படி செய்யாமல் தாறுமாறாகச் செய்து, நோய் விலகுவதற்குப் பதில் நோயை அதிகப்படுத்திக் கொள்ளுகின்றனர். சிலர் புது நோய்களை வரவழைத்துக் கொள்ளுகின்றனர்.

புது நோய் என்றதும் சிலர் பயப்படலாம். ஆசனங்கள் செய்தால் புது நோய் வருமாமே! அப்படியிருக்க ஏன் ஆசனம் செய்து நோயை விலைக்கு வாங்க வேண்டும்! சும்மா இருப்பதே சுகம் என்றும் சொல்லக் கூடியவர்களும் சிலர் இருக்கிறார்கள்.

"அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் விஷம்" என்ற பழமொழி உண்டு. அமிர்தத்தை நஞ்சு என்று யாராவது சொல்ல முடியுமா! அமிர்தம் இன்பமானது; சுகமளிக்கக்கூடியது; ஆரோக்கிய மளிக்கக் கூடியது என்பதுதான் பொதுவான தீர்மானம். ஆனால் அதையும் அளவுடன் உட்கொண்டால்தான் அதன் பூரண குணத்தையும் அனுபவிக்கலாம். அமிர்தம்தானே, நிறைய சுகம் கிடைக்கும், நிறைய இன்பத்தை அனுபவிக்கலாம், நிறைய ஆரோக்கியம் கிடைக்கட்டுமென்று அளவுக்கு மீறிச் சாப்பிட்டால் அது நன்மை செய்வதற்குப் பதிலாகத் தீமையாய்த்தான் முடியும்.

அதைப்போலத்தான் யோக ஆசனங்கள். இல்லறத்தார்கள் ஓரளவுதான் செய்யலாம். அதிலும், வயது, உடல் நிலை, நோய் நிலை ஆகியவற்றை அனுசரித்துச் சில ஆசனங்கள் மட்டும் பொறுக்கிச் செய்ய வேண்டும்.

"ஆசனங்கள் மட்டும் என்ன அவ்வளவு உயர்ந்தவை! மற்ற தண்டால், பஸ்கி, டம்பெல்ஸ், பார்பெல்ஸ், ஓட்டம், நீச்சல் முதலியவைகளும் தேகப்பயிற்சிகள் தானே! அவைகளை ஏன் ஆஸ்துமாவுக்குச் சிபாரிசு செய்யக் கூடாது!" என்று சிலர் கேட்கலாம். ஆம்! அவைகளும் நல்ல தேகப் பயிற்சிகள்தான். மிகமிகத் தீவிர இரத்த ஓட்டத்தை அளிக்கும் தேகப் பயிற்சிகள் தான். ஆனால் எல்லோராலும் எவ் வயதினராலும் பெண்களாலும் இவ் வகைப் பயிற்சிகள் செய்ய முடியுமென்று யாராவது சொல்ல முடியுமா! அதற்குத் தக்க முறை யிருக்கிறது. மேற்சொன்ன பயிற்சிகளெல்லாம் வாலிபர்கள் செய்யக் கூடியவை; அவசியம் செய்ய வேண்டியவை. செய்து அழகான கட்டான தேக அமைப்பை அடையுங்கள். இன்று வாலிப உலகம் இவைகளில் நாட்டம் கொண்டால் நமது நாடு எவ்வளவோ ஆரோக்கியத்தில் முன்னேறி விடும்.

ஆனால் இப் பயிற்சிகள் நோயாளிகளுக்கு, நோய் குணமாக உபயோகப்படாது. தவிர இப் பயிற்சிகளைப் பெண்கள் செய்ய வேண்டுமென்று யாராவது சிபாரிசு செய்ய முடியுமா! ஏதோ மேலை நாடுகளில் பெண்களில் சிலர் செய்யலாம். ஆனால் பொதுவாக யாரும் வரவேற்க மாட்டார்கள். தவிர இப்பயிற்சிகள் செய்ய வேண்டுமானால் கலோரிகள் அதிகம் செலவழிவதால் நல்ல சத்துள்ள உணவுகள் நிறையச் சாப்பிட வேண்டும். இம்மாதிரி ஒரு சிலரால் மட்டும்தான் முடியும். அவர்கள் செய்யட்டும்; தடுக்கவில்லை. ஆனால் இன்று நம் முன் உள்ள பிரச்னை வேறு. சாதாரண வருவாயில் கிடைக்கும் எளிய உணவுகளைக் கொண்டு, அவைகளின் சத்துக்களை வீணாக்கி விடாமல், ஆரோக்கியமாய் இருக்க, வந்த பிணிகளை எவ்வளவு தூரம் மருந்தின் துணையில்லாமல் போக்க முடியுமோ அவ்வளவும் முயற்சி செய்வதுதான் நன்மை அளிக்கும். அதுதான் தற்சமயம் ஏற்ற முறை.

இம் முறைப்படிக்குத்தான் முன்பு எழுதி வந்த ஆரோக்கிய ரகசியக் கட்டுரைகளும், இப்பொழுது எழுதிவரும் ஆரோக்கிய வாழ்வுக் கட்டுரைகளும் எழுதப்படுகின்றன. ஒரு பக்கம் உணவைச் சீர்திருத்திக் கொண்டு, மறுபக்கம் ஆசனமும் செய்து வந்தால் என்றும் ஆரோக்கியமாய் இருப்பதுடன் நோய்களுக்கும் அஞ்ச வேண்டியதில்லை. ஏதாவது நோய்கள் வந்தால் வெகு வருவில் போக்கடித்தும் விடலாம்.

பயங்கரமான நோய்களும், வாயில் நுழைய முடியாத பெயர்களுள்ள வியாதிகளும் வரும் என்ற பயமில்லாமல் நிச்சிந்தையாய் நமது கடமைகளை ஆற்றிக் கொண்டு போகலாம்.

ஆசனங்களில் சர்வாங்காசனம், மத்ஸ்யாசனம், சிரசாசனம், விபரீதகரணி இவைகள் தவிர மற்ற ஆசனங்களெல்லாம் தேகப் பயிற்சிகளில் சேர்ந்தவைதான். ஆனால் அவற்றிலும் உள் கோணங்களின் அமைப்பை மனதில் வைத்துத்தான் அந்த ஆசனங்களை அமைத்திருக்கிறார்கள். இவைகளெல்லாம் சில விநாடிகள் வீதம் மூன்று அல்லது ஆறு தடவைகள் செய்யக் கூடியவை.

சர்வாங்காசனம், மத்ஸ்யாசனம், சிரசாசனம் விபரீதகரணி போன்ற ஆசனங்கள் நீண்ட நேரம் செய்யும் ஆசனங்கள். ஆரம்பத்தில் விநாடிகள் கணக்கிலும், பின் சில நிமிஷக் கணக்கிலும்செய்தாலும், அவ்வாசனங்களினால் பூரண பலனை, அதாவது மருந்துகள் செய்யும் மாற்றை எதிர்பார்க்க வேண்டுமானால், அதிக நேரம் செய்தால்தான் உண்டு. குறைந்தது பத்து நிமிஷமும், அதிக பட்சம் முப்பது நிமிஷமும் செய்ய வேண்டும். அப்பொழுது தான் மருந்தின் குணம் ஏற்படுகிறது. இவ் வாசனங்கள் செய்யும்போது முக்கிய கோணங்களாகிய தைராய்ட், பாரா தைராய்ட், பிட்யூடரி, பினியல்பாடி முதலிய வைகளில் மருந்தின் தன்மை பொருந்திய ரசங்கள் இரத்தத்தில் கலக்கின்றன. அதனால் மருந்தின் உபயோகமில்லாமலேயே பல நோய்கள், குறைகள் நீங்க ஏதுவாகின்றன. பூரண ஆரோக்கியம் ஏற்படுகின்றது. இம் முறை மற்றெந்தத் தேகப் பயிற்சிகளிலும் காணக் கிடைக்காது. முற்றிலும் முழுவதும், பூரணமாக இந்த யோக ஆசனப் பயிற்சிகளுக்கே உரியது.

"அவ்வாறானால் சர்வாங்காசனம், மத்யாசனம், சிரசாசனம், விபரீதகரணி ஆகிய இந்த ஆசனங்களே போதுமானதல்லவா! மற்றும் பல ஆசனங்களைச் செய்யச்சொல்லுவானேன்?" என்றும் சந்தேகம் எழலாம். ஆம்; இந்த ஆசனங்கள் மட்டும் செய்தால் போதுமானது தான். ஏன், சிரசாசனம் மட்டும்கூடப் போதுமானதே. சிலர் சர்வாங்காசனம், மத்ஸ்யாசனம் மட்டுமே செய்து ஆரோக்கியமாய் இருக்கின்றனர். உடல் நிலை, வயது அனுசரித்து எப்படியும் பயிற்சி செய்யலாம். நேரமே இல்லாதவர்கள் மேற்படி ஒன்றிரண்டு ஆசனங்கள் மட்டும் செய்யலாம்.

ஏன்! நமது மதிப்புக்குரிய மாபெரும் தலைவர் ஸ்ரீ நேருஜீயே சிரசாசனம் மட்டும் செய்யவில்லையா! ராஷ்டிரபதி இராஜேந்திர பிரசாத் அவர்களும் சில ஆசனங்கள் செய்கின்றார்கள். மந்திரி ஸ்ரீ சி. சுப்ரமணியம் அவர்களும் செய்கின்றார்கள். சர். ஸி. பி. அவர்களும் செய்கிறார்கள். எவ்வளவோ தொல்லைகள் இருக்கக் கூடிய இவர்களே ஆசனங்கள் செய்கின்றார்கள் என்றால் நமக்கெல்லாம் நேரம் கிடைக்காது என்று சொல்லுவதற்கில்லை. இந்த ஒரு சில ஆசனங்களைச் செய்யவும் நேரமில்லை என்று சொல்லுபவர்களின் வேலை நேரங்களைக் குறிப்பிட்டு ஒரு கால அட்டவணை தயார் செய்தால் எத்தனை மணி நேரம் வெறும் பேச்சிலும் வெற்று விஷயங்களைப் படிப்பதிலும் செலவழிக்கிறார்கள் என்பது தெரியும்.

சிறிது அவகாசம் கிடைப்பவர்கள் மேற் சொன்ன சில ஆசனங்கள் மட்டும் செய்யலாம். ஆனால் ஒரு குறிப்பிட்ட நோயைக் குணப்படுத்த வேண்டுமானால் மேற் குறித்த ஆசனங்கள் மட்டும் அதிக நேரம் செய்வதுடன், மற்றும் சில ஆசனங்களைக் கலந்து செய்தால் தான் சீக்கிரமாகக் குணம் ஏற்படும்.

சர்வாங்காசனம், மத்ஸ்யாசனம், சிரசாசனம் விபரீதகரணி முதலியவைகள் பெரிய மருந்துப் புட்டிகள்தான்; ஆனால் அதைச் சாப்பிட வேண்டுமானால் சிறு அவுன்ஸ் கிளாஸ் கட்டாயம் வேண்டும். அப்படியே புட்டியுடன் வாயில் கொட்டிக் கொள்ள முடியாது. அவ்வகையில் மற்ற ஆசனங்கள் அமைகின்றன. இரத்தத்தில் கலந்த ரசங்கள் சரிவர வேலை செய்ய வேண்டுமானால், அவைகளும் ஏற்றுக் கொள்ளும் அளவுக்கு மற்ற உடல் பாகங்கள் தயாராய் இருக்க வேண்டும். அவ்வாறு தயார் செய்து வைப்பதே மற்ற ஆசனங்களின் நோக்கமாகும்.

அம்முறையில் படிப்படியாக ஆசனங்களைச் சொல்லிக் கொண்டு வரப் பெற்றது. இந்த அர்த்தமத்ஸ்யேந்திராசனமும் அவ்வகையில் சேர்ந்ததே ஆகும். இந்த ஆசனத்தின் முக்கியத்துவம், அவசியம், அதன் அபூர்வ குணங்கள் முதலியவை பற்றி அறியுமுன் செய்யும் விதத்தைப் பார்ப்போம். (தொடரும்)

டார்ஜீலிங்கில் வரவேற்பு

சிலருக்கு ஒரு காரியம் தொடங்கினால் அதிலேயேதான் மனம் போகும். வேறு எதிலும் மனம் பற்றாது. ஆனால் ரோலெக்ஸ் வாச் கம்பெனியார் அப்படியல்ல. அவர்கள் கடியார வியாபாரத்துடன் பல வேறு விஷயங்களிலும் கவனம் செலுத்தி மக்களுக்கு உற்சாக மூட்டி வந்திருக்கிறார்கள். 1953-ல் ஹிமயமலைச் சாரலிலுள்ள மிக உயர்ந்த சிகரமாகிய எவரெஸ்டு சிகரத்தை எட்டிப் பிடிக்க மலையேறிச் சென்ற ஸர் ஜான் ஹண்ட் கோஷ்டியினருக்கு உதவி புரிந்திருக்கின்றனர். அதுபோலவே சமீபத்தில் காஞ்சன் ஜங்கா என்ற சிகரத்தைப் பிடிக்கச் சென்று வெற்றியுடன் திரும்பிய டாக்டர் எவான்ஸ் கோஷ்டியினரின் முயற்சிக்கும் உதவியிருக்கிறார்கள். இப்படி ஒவ்வொரு இமயமலை ஏறும் கோஷ்டியினருக்கும் ரோலெக்ஸ் வாச் கம்பெனியார் உதவியிருக்கிறார்கள்.

சமீபத்தில் வெற்றி வாகையுடன் திரும்பிய காஞ்சன் ஜங்கா கோஷ்டியினரை ரோலெக்ஸ் கம்பெனியின் சார்பில், ஜே. வால்டர் தாம்ஸன் கம்பெனியைச் சேர்ந்த திரு அயான் பீர்பால் பம்பாயிலிருந்து டார்ஜீலிங்குக்குச் சென்று வரவேற்று உற்சாகமான விருந்துபசாரம் செய்தார். இதில் எவரெஸ்ட் வீரர் திரு. டென்ஸிங் உள்படப் பல பிரமுகர்கள் கலந்து கொண்டனர். ரோலெக்ஸ் கம்பெனியாரின் பரந்த நோக்கையும், அவர்களுடன் ஒத்துழைக்கும் தாம்ஸன் கம்பெனியாரின் அரும் பணியையும் என் என்பது!

மிகச் சிறந்த நித்திரை - கால பானம் இதோ இருக்கிறது -



— நல்ல தூக்கத்தை அனுபவிக்க உங்களுக்கு உதவிபுரிய !

நாள் பூராவும் உழைத்துக் களைப்படைந்த பிறகு நரம்புகளுக்கு புத்துணர்ச்சி அளித்து, உடல் போஷாக்கு அளிக்கும் மிகச் சிறந்த நித்திரை கால பானமாக விளங்குகிறது ஓவல்டின் ! இந்த இனிமையான சுவைக லிக்கும் பானத்தை இரவில் அருந்தினால் சுகமான, அயர்ந்த நித்திரை ஏற்படுகிறது. தூங்கும்போது, ஓவல்டினில் உள்ள மதிப்பு மிகுந்த போஷாக்குச் சத்து செலவழிந்த சக்தியைத் திரும்ப அளித்து, மறு நாளை உழைப்புக்கு உடலைத் தயாராக்குகிறது.

முதிர்ந்த பார்லி மால்ட், சுத்தமான பசுவின் க்ரீம் பால், பிரத்யேகமாகத் தயாரான கொக்கோ, இயற்கையான பாஸ்பேட்டுகள் வைட்டமின்கள் சேர்த்து இந்த பானம் தயாரிக்கப்படுகிறது. இத்துடன் A B D வைட்டமின்கள் சேர்த்துச் செறிவிக்கப்படுகிறது. உங்கள் வியாபாரியிடம் ஓவல்டின் கேளுங்கள் - அதுபோன்றது வேறெதுவும் இல்லை.

விநியோகஸ்தர்கள்: கிரஹாம்ஸ் ட்ரேடிங் கோ., (இந்தியா லிட்.)

ஓவல்டின்

இனிய ருசியுடன் ஊக்கமளிப்பது



சனிக்கிழமைகளில் இரவு 8 முதல் 8-30 வரை ரேடியோ சிலோனில் ([illegible] 41-73 மீட்டர்கள்) ஓவல்டின் அமைச்சூர் நேரத்தைக் கேளுங்கள்

J.V. 448

யார் அப்பாவி

ஸ்ரீ வத்ஸன்

ரயில் புறப்பட்டு விட்டது. அவசரம் அவசரமாக வந்து வண்டியில் ஏறினான் சந்துரு. ஒரு பலகையில் ஒரு வயோதிகரும் யுவதியும் உட்கார்ந்திருந்தார்கள். அந்த வண்டியில் அவர்களைத் தவிர வேறு யாரும் இல்லை. எதிர்ப் பலகையில் உட்கார்ந்து கொண்டான் சந்துரு.

"ஸார் எது வரைக்குமோ?" என்று பேச ஆரம்பித்தான். பெரியவர் அவனை முறைத்துப் பார்த்து விட்டு, "உங்களிடம் அவசியம் சொல்லித்தான் ஆக வேணுமோ?" என்று கேட்டார். சந்துருவின் முகத்தில் அசடு வழிந்தது.

"இந்த வண்டி கும்பகோணம் எப்போது போகுமோ?" என்று தமக்குத் தாமே சொல்லிக் கொண்டார் பெரியவர்.

"என்னிடம் கால அட்டவணை இருக்கிறது. வேண்டுமானால் பார்க்கிறீர்களா?" என்று ரயில்வே கால அட்டவணையை எடுத்துக் கொடுத்தான் சந்துரு.

"உம்மைக் கேட்டேனா? ஏது, அதிகப் பிரசங்கியாக இருப்பீர்போலிருக்கிறதே!" என்று சொல்லி அவன் மூக்கை உடைத்தார் பெரியவர். சந்துரு அப்புறம் எதற்கு வாயைத் திறக்கப் போகிறான்?

சிறிது நேரத்துக்கெல்லாம் வண்டி அடுத்த ஸ்டேஷனை அடைந்து இறங்கும் பிரயாணிகளை இறக்கி விட்டு ஏறும் பிரயாணிகளை ஏற்றிக் கொண்டு புறப்பட்டது. "ஸார், டிக்கெட்!" என்று கேட்டவாறே ஓடும் வண்டியில் ஏறினார் டிக்கெட் பரிசோதகர். சந்துரு தன் டிக்கட்டை எடுத்துக் கொடுத்தான். "உங்கள் டிக்கெட்?" என்று கேட்டார் அவர், பெரியவரைப் பார்த்து.

"மாலதி! டிக்கட்டைக் கொடு, அம்மா!" என்றார் பெரியவர். அவளுக்குத் தேள் கொட்டினாற் போலிருந்தது. "ஐயோ, அப்பா! மணிபர்ஸைக் காணோமே!" என்று கூச்சலிட்டாள்.

"காணோமா? எப்படிக் காணாமல் போகும்? ஜங்ஷனில் டிக்கெட், பணம் எல்லாவற்றையும் பர்ஸில் போட்டு நான் வைத்துக் கொண்டிருந்த பொழுது சின்னக் குழந்தைமாதிரி பர்ஸை நான் வைத்துக் கொள்ளுகிறேன் என்று கேட்டாயே! உன்னிடம் கொடுத்தேனே! அது எப்படித் தொலைந்தது?" என்றார் பெரியவர்.

"அதுதான் எனக்குத் தெரியவில்லை!"

"இப்படி ஒரு அசடு எனக்குப் பிறந்திருக்க வேண்டாம். இந்த அசடை எவன் தான் கட்டிக்கொள்ளப் போகிறானோ?" என்று அலுத்துக் கொண்டார் பெரியவர்.

"நான் தயார்!" என்று சொல்ல நினைத்தான் சந்துரு. பேச்சு வரவில்லை.

"அப்படியானால் டிக்கெட் இல்லையா?" என்று கேட்டார் பரிசோதகர்.

"டிக்கெட் பர்ஸில்தான் இருந்தது!"

"அதெல்லாம் எனக்குத் தெரியாது. ஒன்று டிக்கெட்டைக்காட்டுங்கள். இல்லாவிட்டால் பணத்தை எடுங்கள்!" என்று கண்டிப்பாகக் கூறிவிட்டார் பரிசோதகர்.

பெரியவர் முகத்தில் ஈயாடவில்லை. வெட்கத்துடன் தலை குனிந்தார்.

மாலதி சந்துருவைப் பார்த்தாள். 'எங்கள் இருவரையும் இப்போது காப்பாற்றுவதன் மூலம் வருங்காலத்தில் என்னை எளிதில் அடையலாம்' என்று அவள் கண்களால் சொல்வதாகப்பட்டது சந்துருவுக்கு. "எவ்வளவு ஸார், கட்ட வேண்டும்?" என்று கேட்டான் சந்துரு.

"எது வரைக்கும் நீங்கள் போக வேண்டும்?" என்று பெரியவரைப் பார்த்துக் கேட்டார் பரிசோதகர்.

"சுவாமி மலை!"

"அப்படியானால் ஆறு ரூபாய் பத்தணா."

"இந்தாருங்கள்!" என்று பணம் கொடுத்தான் சந்துரு. பெரியவர், "உங்களுக்கு ஏன் சிரமம்?" என்றார்.

"பரவாயில்லை. நீங்கள் என்ன செய்வீர்கள்?" என்றான் சந்துரு. டிக்கெட் பரிசோதகர் போய் விட்டார்.

"நீங்கள் எது வரைக்கும் போகிறீர்களோ?" என்று பெரியவர் சந்துருவைப் பார்த்துக் கேட்டார்.

"சுவாமி மலைக்குத்தான்!" என்று பதிலளித்தான் சந்துரு.

"ரொம்ப நல்லதாகப் போயிற்று. இவள்தான் என் பெண் மாலதி!" என்று தம் பெண்ணை அவனுக்கு அறிமுகப்படுத்தினார் பெரியவர்.

"அப்படியா? ரொம்ப சந்தோஷம்!" என்றான் சந்துரு வெகு அடக்கமாக.

சுவாமிமலை வந்தது. பெரியவர், மாலதி, சந்துரு மூவரும் இறங்கினார்கள்.

"உங்கள் புண்ணியத்தால் சுவாமிமலை வந்துவிட்டேன். இல்லாவிட்டால் அந்தப் பரிசோதகர் பாதிவழியிலே பிச்சைக்காரனை இறக்கி விடுகிற மாதிரி இறக்கி விட்டிருப்பார்!" என்றார் பெரியவர்.

"என் தயவா? எல்லாம் சுவாமிநாத சுவாமியின் தயவு என்று சொல்லுங்கள்!" என்றான் சந்துரு.

அன்று கோவில் அபிஷேகம் அர்ச்சனை முதலிய செலவுகளுக்காகப் பெரியவருக்குச் சந்துருதான் பத்து ரூபாய் கொடுத்தான். அதோடு அவரையும் மாலதியையும் திரும்பவும் திருச்சிக்கு அழைத்துக் கொண்டு போகும் செலவையும் அவனே ஏற்றுக் கொண்டான்.

ஜங்ஷனில் விடைபெற்றுக் கொள்ளும் பொழுது, "அவசியம் நீங்கள் வீட்டுக்கு வரவேண்டும்" என்று சந்துருவை அழைத்தார் பெரியவர்.

"அவசியம் வாருங்கள்!" என்று அழுத்தம் கொடுத்தாள் மின்னல் கொடியாளான மாலதியும்.

சந்துரு விடைபெற்றுக்கொண்டு போய் விட்டான். ஆனால் அவன் மனம் அவளிடமும், அவள் மனம் அவனிடமும் இடம் மாறி விட்டன.

அப்புறம் என்ன? ஆகவேண்டியது கல்யாணம்தானே? அதுவும் ஒரு நல்ல நாளில் நடந்தேறியது. தமக்கு எவ்விதச் சிரமமுமின்றி வரன் கிடைத்து விட்டதில் பெரியவரும் பரம மகிழ்ச்சி கொண்டார்.

அன்றிரவு மொட்டை மாடியில் உட்கார்ந்து மாலதியும் சந்துருவும் ஏதேதோ பேசிக் கொண்டிருந்தார்கள்.


"எல்லாந்தான் சுபமாக முடிந்து விட்டதே! உன் அப்பாவிடம் மணிபர்ஸைக் கொடுத்து விடட்டுமா?" என்று பேச்சுக் கிடையில் கேட்டான் சந்துரு.

"வேண்டாம், வேண்டாம்! அப்புறம் நம் குட்டு வெளிப்பட்டு விடும்!" என்று ஆட்சேபித்தாள் மாலதி.

* * *

மாலதிக்கும் சந்துருவுக்கும் அறிமுகமானதே ஒரு தனிக் கதை. அவளுக்கும் அவனுக்கும் ஏற்பட்ட சிநேகம் ரயில் சிநேகம் அல்ல; பாங்கு சிநேகம். அதுவும் சந்துரு வேலை செய்த பாங்கியில் செக் மாற்றப் போன பொழுது ஏற்பட்ட சிநேகம். அது முற்றிக் காதலாக வளர்ந்தது. தங்கள் காதல் நிறைவேற அவர்கள் அப்படி நாடகம் நடிக்கவேண்டி வந்தது. காரணம், மாலதியின் தந்தை மகா பிடிவாதக்காரர்; எதுவும் தம் இஷ்டப்படியே நடக்க வேண்டும் என்று எண்ணுபவர். அவரைச் சரிக்கட்டுவதற்கு மாலதி கையாண்ட சூழ்ச்சி என்ன, தெரியுமா?

கிருத்திகைக்குக் கிருத்திகை அவளும் அவள் தந்தையும் சுவாமி மலைக்குப் போவது வழக்கம். அப்படிப் போகும் போது ஒரு தடவை சந்துருவையும் அறிமுகம் இல்லாதவனைப் போல் வரச் சொல்வது, அந்தத் தடவை தந்தைக்குத் தெரியாமல் பர்ஸைச் சந்துருவிடம் கொடுத்து விட்டுப் பர்ஸ் காணமற் போய் விட்டது என்று பாசாங்கு செய்வது, சமய சஞ்சீவி





சூப்பர் இந்தியா
டயர்களையே கேட்டு வாங்குங்கள்
"டயர்களில் மிகச் சிறந்தவை"



யாகச் சந்துரு அவர்களுக்கு உதவி செய்ய வேண்டியது என்பதுதான்.

* * *

"என் ஏற்பாட்டை எத்தனை கனகச்சிதமாக முடித்தேன், பார்த்தீர்களா?" என்றாள் மாலதி.

"நானும் எத்தனை சாமர்த்தியமாக உன்னுடன் ஒத்துழைத்தேன், பார்த்தாயா?" என்றான் சந்துரு.


"அப்பா ஒரு அப்பாவி!" என்று இருவரும் சேர்ந்து ஒரே குரலில் கூறி முடித்தார்கள்.


அதே சமயம் கூடத்தில் படுத்திருந்த மாலதியின் தந்தை தம் மனத்தில் என்ன சொல்லிக் கொண்டிருந்தார் என்பது அந்த அப்பாவிகளுக்குத் தெரியவில்லை!

"பாவம், என் பெண்ணும் மாப்பிள்ளையும் அப்பாவிகள். இல்லாவிட்டால் உலகத்திலேயே தாங்கள் இருவரும்தான் சாமர்த்தியசாலிகள், மற்றவர்கள் எல்லோரும் அப்பாவிகள் என்று எண்ணியிருப்பார்களா? என்னை ஏமாற்றி விட்டதாக அவர்கள் நினைக்கிறார்கள். ஆனால்...

"ஒரு மாதத்துக்கு முன்பு பாங்குக்கு மாலதியை அனுப்பி விட்டுக் காத்திருந்தேன், காத்திருந்தேன்; அப்படிக் காத்திருந்தேன். வெகு நாழிகையாகியும் அவள் வராமல் போகவே, அவளைத் தேடிக் கொண்டு போனேன். அவளைப் பாங்கியில் காணாமல் வீட்டுக்குத் திரும்பி வந்து கொண்டிருந்த பொழுது, எதேச்சையாக அவளையும் அவனையும் ஒரு மரத்தடியில் பார்த்தேன். அங்கே அவர்கள் இருவரும் என்னை ஏமாற்றப் பர்ஸ் காணாமல் போகும் நாடகத்துக்கு ஒத்திகை நடத்திக் கொண்டிருந்தார்கள். 'அட, அப்பாவிகளே! என்னிடம் ஒரு வார்த்தை சொல்லியிருந்தால் உங்கள் இருவருக்கும் முடி போட்டிருப்பேனே! ஏன் இந்த நாடகம்?' என்று அவர்களிடம் சொல்லவில்லை; மனத்தில் நினைத்துக் கொண்டேன். அப்புறம் அவர்களுக்கு ஏற்றாற் போல் நடித்து அவர்கள் இஷ்டத்தையே நிறைவேற்றி வைத்தேன். இன்னொரு விசேஷம் என்னவென்றால், அன்று சுவாமி மலைக்குக் கூட நான் டிக்கெட் வாங்கவில்லை. வெறும் பிளாட்பாரம் டிக்கெட்தான் வாங்கினேன். நானா வீண் நஷ்டத்துக்கு இடம் கொடுப்பேன்? சுத்த அப்பாவிகள்!" என்று சொல்லிக் கொண்டார்.

'இப்படித்தான் நடக்க வேண்டும்!' என்று நாம் நிர்ணயித்திருக்கும் பொழுது ஒருவருக்கு ஒருவர் அப்பாவிப் பட்டம் கட்டிக் கொள்ளும் இந்த அப்பாவிகள் யார் என்று அந்நேரத்தில் இறைவன் எண்ணி நகையாடிக் கொண்டிருந்தாரோ, என்னவோ யார் கண்டார்கள்?





'அனஸின்'

நான்கு மருந்துகள் அடங்கியுள்ளது.

'அனஸின்' விஞ்ஞான முறைப்படி சேர்க்கப்பட்ட நான்கு மருந்துகளின் கலப்பாகும். அவை நரம்புகளின் முக்கிய சேர்க்கை பாகங்களில் கூட்டாக வேலை செய்து விரைவில் வலி, தலைவலி, ஜலதோஷம்,ஜுரம், பல்வலி, மற்றும் தசை நார்களில் நோவு இவற்றை நீக்கும். அனஸினில் அடங்கிய சில நான்கு மருந்துகள் —

1. கொயினா: ஜுரத்தடுப்பு குணமும், பலவிருத்தி செய்வதற்கும் பிரசித்தி பெற்றது. ஜுரத்தை குறைப்பதில் மிகத் துரிதமானது.
2. காபியின்: பலஹீனத்திற்கும், மனச்சோர்வுக்கும் மிதமான தூண்டுகோல் மருந்தாக விதிக்கப்பட்டிருக்கிறது.
3. பினாஸிடின்: ஜுரத்தடுப்பு, வலி நிவாரணத் தன்மைகளுக்கு பெயர் பெற்றது.
4. ஆஸிடில் ஸாலிஸிலிக் ஆஸிட்: தலைவலி அது போன்ற எல்லா வலிகளையும் போக்கடிப்பதற்கு மிகவும் உபயோகமுள்ளது.

அனஸினிலுள்ள இந்த நான்கு மருந்துகளும் ஒரு டாக்டரின் குறிப்புக்கு ஒப்பாகும். 'அனஸின்' ஹிருதயத்திற்கு தீங்கு விளைவிப்பதோ அல்லது வயிற்றுக்கு கோளாறு உண்டாக்குவதோ கிடையாது. வலி, தலைவலி, ஜலதோஷம், ஜுரம், பல்வலி மற்றும் தசைகளில் வலி முதலியவற்றிலிருந்து விரைவிலும், பத்திரமாகவும், நிச்சயமாகவும் நிவாரணம் பெறஎப்பொழுதும் அனஸினையே கேட்டுவாங்குங்கள்.



லக்ஷக்கணக்கான மக்களுக்கு நிவாரணம் அளிக்கின்றது.



தெலுங்குக் கதை: மொழிபெயர்ப்பு: ஜெயமணி

(சென்ற வாரத் தொடர்ச்சி)

அலையும் அமைதியும்

கென்னட்டி சூரி



கலா மன்றத்தின் உட்புறம் ஒரு மாளிகையைப் போல் மிகவும் விஸ்தாரமாக இருந்தது. ஏராளமானவர்கள் உள்ளே செல்லுவதும் வெளியே போவதுமாக இருந்தார்கள். பல விதமான கலைஞர்கள் அங்கு கூடிப் பல்வேறு விஷயங்களைப் பற்றியும் விவாதித்துக் கொண்டிருந்தார்கள். ஏராளமாகக் காப்பியும் டீயும் காலியாகிக் கொண்டிருந்தன! அங்கு கூடியிருந்தோர் நவீன நாகரிகத்தில் நாட்டம் கொண்டவர்கள் என்பதை உள்ளே சூழ்ந்திருந்த சிகரெட் புகை பிரகடனப்படுத்தியது.

அங்கிருந்தவர்களில் எவரும் ராஜுவைப் போல் சோர்வுடனோ, சோகத்துடனோ காணப்படவில்லை. எல்லோரும் சுறுசுறுப்பாகவும் உற்சாகத்துடனும் இருந்தார்கள். அவர்கள் எப்படி அவ்வளவு ஆனந்தத்துடன் இருக்கிறார்கள்! அவர்களுடைய குதூகலத்தின் இரகசியத்தை ராஜுவால் அப்போது உணர்ந்து கொள்ள முடியவில்லை.

எனினும் தன்னுடைய சோர்வுக்கும் மனப் போராட்டத்துக்கும் பரிகாரம் என்ன என்பதை, சூழ்மானியும் குதூகலமும் நிறைந்த அக்கூட்டத்திலிருந்து தெரிந்து கொள்ளலாம் என்ற நம்பிக்கை அவனுக்கு உண்டாயிற்று.

எனவே, இனிமேல் அந்தக் கலா மன்றத்துக்கு அடிக்கடி வர வேண்டுமென்று அவன் நிர்மானித்தான்.






பேசிக் கொண்டிருந்ததைப் பார்க்க அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

குமார் ஒரு குட்டிக் கவி. ராஜு அங்கு சென்ற சமயம் குமார் சகுந்தலாவை வானளாவப் புகழ்வதில் தன் கவித்திறனை யெல்லாம் காட்டிக் கொண்டிருந்தான்.

'பேஷ்' 'பேஷ்' என்று சகுந்தலா அதை ரசித்துக் கொண்டிருந்தாள்.

அதே சமயம் அவள் ராஜு வருவதைப் பார்த்து விட்டாள். உடனே அவள் மிகவும் சகஜமாக, "ராஜு! இப்படி வாருங்கள். இங்கே நாங்கள் இருக்கிறோம்" என்று உரக்கக் கத்தி அவனை வரவேற்றாள்.

ராஜு அருகில் வந்ததும், "இந்தக் கவி அற்புதமான கற்பனைச் சிகரத்தில் பறந்து கொண்டிருக்கிறார். நான்



ஆனால், அவன் கலா மன்றத்துடன் நெருங்கிய தொடர்பு வைத்துக் கொண்ட சில நாட்களுக்குள்ளேயே, அவனது மயக்கம் தெளிந்து விட்டது. அங்கு வரும் ஒவ்வொருவரும் தன்னைப் போலவே மன நோயால் பீடிக்கப்பட்டவர்கள் என்பதை அவன் உணர்ந்தான். அந்த நோயை மறப்பதற்காகவே, அவர்கள் அடிக்கடி கலா மன்றத்துக்கும் சினிமாவுக்கும் செல்லுகிறார்கள். அவர்களுடைய உள்ளத்தில் உண்மையான மகிழ்ச்சி இல்லை என்பதைத் தெரிந்து கொண்டான்.

கலா மன்றத்துக்கு வருவோரைத் தவிர, தான் சந்திக்கும் மற்றவர்களின் மன நிலையையும் அவன் ஆராயத் தொடங்கினான். அத்தகையோரில் நூற்றுக்குத் தொண்ணூறு பேர்கள் தன்னைப் போலவே இனந் தெரியாத மன நோயால் இடைவிடாமல் அவதிப்படுவது அவனுக்குத் தெரிந்தது.

ஒருநாள் மாலை அவன் கலா மன்றத்துக்குச் சென்றபோது, அங்குள்ள மத்திய மண்டபத்தில் வழக்கத்துக்கு விரோதமாக ஒரு சிலரே இருந்தனர். எனவே, அவன் பொழுது போக்காக அங்கிருந்து அதை அடுத்துள்ள நந்தவனத்துக்குச் சென்றான்.

அங்கு ஒரு மரத்தடியில் சகுந்தலாவும் குமாரும் தனிமையில்



"அப்பா! எங்க வாத்தியாருக்கும் பைத்தியம் பிடிச்சுட்டுதோ என்னவோ தெரியல்லே! நேத்து நாலும் ஒன்னும் அஞ்சு என்று கூறினார். இன்றைக்கு மூன்றும் இரண்டும் ஐந்து என்கிறார்!"

அதைப் பார்த்துக் கொண் டிருக்கிறேன்" என்றாள் சகுந்தலா.

"பாவம்! குமார் இன்னும் உலக விவரம் அறியாத சிறு பையன். அவனை ஏன் தொந்தரவு செய்கிறாய்!" என்றான் ராஜு.

"அப்படியானால் தாங்கள் உலக விவரம் அறிந்த மேதாவி போலும்! சரி, இப்படி என் அருகில் வந்து உட்காருங்கள்."

சகுந்தலா இவ்விதம் கூறியதைக் கேட்டதும் ராஜு திடுக்கிட்டான். அவள் முகத்தில் ஒருவித வெறி தாண்டவமாடுவதை அவன் உடனே கண்டு கொண்டு விட்டதால், அவன் சகுந்தலாவுக்குப் பதில் எதுவும் கூறாமல் மௌனமாக இருந்தான்.

அச்சமயத்தில், "இங்கேயே இருங்கள். இதோ ஒரு நிமிஷத்தில் வந்து விடுகிறேன்" என்று கூறிய வண்ணம் சகுந்தலா மண்டபத்தை நோக்கிச் சென்றாள்.

சகுந்தலா அப்பால் சென்றதும், "குமார், இது என்ன கூத்து!" என்றான் ராஜு கோபத்துடன்.

"ராஜு, வித்தியாசமாக நினைக்காதே. எனக்குப் பணமுடை. கையில் ஓர் அணுக்கூட இல்லை. இந்த அவலட்சணத்தை 'ரதி', 'ரம்பை,' 'ராணி,' என்றெல்லாம் புகழ்ந்தால் எதாவது பணம் வாங்கலாம் என்று கவி புனைந்தேன். அவ்வளவுதான்."

"இது உண்மைதானா?"

"இல்லாவிடில் இவள்மீது எனக்குக் காதல் பிறந்து விட்டது என்று எண்ணுகிறாயா!"

"குமார், ஜாக்கிரதையாக இரு. நீ உலக அனுபவம் இராதவன்....பின்னர் உன் வாழ்வும் கெடும். அவள் வாழ்வும் கெட்டு விடும்."

இச்சமயத்தில் சகுந்தலா 'குமார்' என்று உரக்கக் கத்திக் கொண்டே கந்தவனத்துக்கு வந்தாள். குமார் கையில் ஒரு பத்து ரூபாய் நோட்டை அலட்சியமாக வீசி எறிந்தாள். நோட்டை வாங்கிக் கொண்டதும், குமார் அங்கிருந்து நடையைக் கட்டினான்.

பிறகு சகுந்தலா தன் மோட்டாரில் போய் அமர்ந்து கொண்டு, "ராஜு, நீங்களும் வாருங்கள்" என்றாள்.

"எந்த இடத்துக்கு!"

"காரில் ஏறுங்கள், சொல்லுகிறேன்."

"எனக்கு வேறு அவசரமான காரியம் இருக்கிறது."

"நீங்கள் போக வேண்டிய இடத்துக்குக் கொண்டு போய் விடுகிறேன். ஏறுங்கள்."

ராஜு அதற்கு மேல் வழி எதுவுமின்றி மோட்டாரின் பின் பக்கத்தில் ஏறுவதற்குக் காலை எடுத்து வைத்தான்.

"ராஜு, உங்களை நான் விழுங்கி விட மாட்டேன். இங்கே முன் பக்கத்தில் வந்து உட்காருங்கள்" என்றாள் சகுந்தலா.

"நீ என்னை விழுங்கி விடுவாய் என்ற பயம் எனக்கு இல்லை. முன் பக்கத்தில் உட்கார்ந்தால் நீ மோட்டாரைச் சரிவர ஓட்டாமல் பேச ஆரம்பித்து விடுவாய். பிறகு, எங்கேயாவது மோதி விட்டால், எனக்கும் ஆபத்து, உனக்கும் ஆபத்துதான்!"

"இந்த ஆடவர்களே இப்படித்தான்! பெண்களைக் கண்டால் இவர்களுக்கு எங்கிருந்தோ அச்சம், கூச்சம் எல்லாம் வந்து விடுகின்றன. நீங்கள் இங்கு வரவில்லையானால், நான் இறங்கிப் பின்னால் உங்கள் பக்கத்தில் வந்து உட்கார்ந்து கொண்டு விடுவேன்" என்றாள் சகுந்தலா.

இவ்விதம் நாணமின்றிப் பேசும் சகுந்தலாவுக்கு என்ன பதில் கூறுவதென்று ராஜுவுக்குத் தெரியவில்லை. எனவே, அவன் பேசாமல் கீழே இறங்கி முன் பக்கத்தில் போய் உட்கார்ந்து கொண்டான்.

உடனே கூண்டிலிருந்து விடுதலை பெற்ற காட்டு மிருகத்தைப் போல் மோட்டார் வெகு வேகமாகச் செல்லத் தொடங்கியது.

"உங்கள் நண்பர் வீட்டுக்கு வந்து மூன்று நாட்கள் ஆகின்றன" என்றாள் சகுந்தலா.

"அவன் சில தீய நண்பர்களின் வலையில் விழுந்து விட்டான் என்று தோன்றுகிறது. இடைவிடாமல் சூதாட்டத்தில் இறங்கி விட்டான். அவனது மனமாற்றத்துக்கு நீ தான் காரணம் என்று சொல்லுவேன்.".

இதைக் கேட்டதும் "ராஜு!" என்று அலறி விட்டாள் சகுந்தலா.

பிறகு சிறிது நேரம் இருவரும் மௌனமாக இருந்தனர்.

கடைசியில், "இப்போதெல்லாம் என்னுடைய உடல் நிலை சரியாக இல்லை" என்று பேச்சை மாற்றினாள் சகுந்தலா.

"உன் உடம்புக்கு என்ன!"

"என்ன நோய் என்று திட்டமாக எதுவும் கூற முடியவில்லை. ஆனால், எந்த நிமிஷத்திலும் எனக்கு மரணம் ஏற்படலாம் என்று என் உள் உணர்வு கூறுகிறது."

"என் நிலையும் அப்படித்தான் இருந்து வருகிறது" என்றான் ராஜு.

"தயவு செய்து விளையாடாதீர்கள்."

"நான் வேடிக்கையாக எதுவும் கூற வில்லையே! உண்மையைத்தான் சொன்னேன். நாம் எல்லோருமே ஒரு வித நோயால் பீடிக்கப் பட்டிருக்கிறோம். ஏன், நம் நாட்டு மக்களில் நாலில் மூன்று மடங்கு பேர்கள் இதே நோய்க்கு இலக்காகித் தவிக்கிறார்கள்" என்று விளக்கினான் ராஜு.

மோட்டார் கடற்கரையை அடைந்தது. இருவரும் அதிலிருந்து கீழே இறங்கி, கடல் தண்ணீரை நோக்கிச் சென்றார்கள்.

அன்று வானம் மேகங்கள் எதுவும் இன்றி நிர்மலமாக இருந்ததால், குளிர்ந்த நிலவு ஆனந்தமாகப் பிரகாசித்துக் கொண்டிருந்தது. நேரமாகி விட்டபடியால் அவ்விருவரும் இறங்கிய இடத்தில் வேறு ஒருவர் கூட இல்லை.

சகுந்தலா மணலில் வேகமாகச் சென்று கொண்டிருந்தாள். அவளுக்குப் பின் சில அடி தூரத்தில் ராஜு போய்க் கொண்டிருந்தான்.

சகுந்தலா திடீரென்று திரும்பி ராஜுவையே உற்றுப் பார்த்தாள். அந்தப் பார்வையால் அவன் கலங்க வில்லை. அவன் கம்பீரமாக வந்து கொண்டிருந்தான்.

சகுந்தலாவின் முகம் நிமிஷத்துக்கு நிமிஷம் வெளுத்து கொண்டிருந்தது. அவள் மனத்தில் ஏற்பட்ட வெறியும் தடுமாற்றமும் அவள் முகத்தில் பிரதிபலித்தன.

அவன் அருகில் வந்ததும் சகுந்தலா இரு கைகளையும் நீட்டிக் கொண்டு, "ராஜு" என்று தாபத்துடன் கூப்பிட்டாள்.

"ஏன்!" என்றான் ராஜு நிதானமாக.

"நான் உங்களைக் காதலிக்கிறேன்!"

"நீ என்னைக் காதலித்தால் என் நண்பன் பக்துலுவின் கதி என்ன ஆவது!"

"என்னிடம் அவரது பெயரையே சொல்லாதீர்கள். அவரைக் கண்டாலே எனக்குப் பிடிக்க வில்லை."

இவ்விதம் சொல்லிக் கொண்டே சகுந்தலா இரு கைகளையும் தூக்கிக் கொண்டு தன் அருகில் வந்தபோது, இரண்டு சர்ப்பங்கள் தன்னைத் தழுவிக் கொள்ள வருவதுபோல் ராஜுவுக்குத் தோன்றியது. அவன் உடனே கலக்கமடைந்து அவளது கைகளை அப்பால் பிடித்துத் தள்ளினான்.

"சகுந்தலா! மனத்தைச் சிதற விடாதே. நிதானப்படுத்திக் கொள். பக்துலுவை உனக்குப் பிடிக்கவில்லையாயின், அது அவனது குற்றமல்ல. உன் கணவன் எவ்வளவோ சிறந்தவன். நீயோ செல்வந்தரின் மகள். உங்கள் குடும்பத்தில் பணமும் குணமும் இருந்தும்கூட உனக்கு வாழ்க்கையில் சந்தோஷம் இல்லை. நானோ சிறந்த குணமும் லட்சணமும் வாய்க்கப் பெற்றுத் தேவலோகப் பெண்ணைப் போல் இருக்கும் ஒருத்தியை மனைவியாக அடைந்திருக்கிறேன். என் வாழ்க்கையிலும் மகிழ்ச்சி இல்லை. இதற்குக் காரணம் என்ன என்பது தான் தெரியவில்லை."

"ராஜு, எனக்கு உங்களுடைய உபதேசம் ஒன்றும் தேவையில்லை. உங்களுக்கு என்மீது இரக்கம் இல்லையா!"



குமாஸ்தா:—ஸார்! எனக்கு நாளை மத்தியானம் லீவு வேண்டும்!

மானேஜர்:—கொடுக்க முடியாது.

குமாஸ்தா:—நல்லது ஸார்! என் மனைவி சாமான்கள் வாங்கக் கடைக்குப் போகணும் என்றாள்! போகாமலிருப்பதற்குக் காரணம் கிடைத்து விட்டது!

"சகுந்தலா! நாம் இங்கிருந்து உடனே திரும்பிச் சென்றுவிட வேண்டும். அதுதான் உனக்கும் நல்லது, எனக்கும் நல்லது. உன் மீதுள்ள இரக்கத்தினால்தான் இப்படிச் சொல்கிறேன்" என்றான் ராஜு.

மேற்படி சம்பவத்திலிருந்து ராஜுவுக்குக் கலா மன்றத்திலிருந்த பிரமை நீங்கி விட்டது. அதனுடன் மேலும் தொடர்பு வைத்துக் கொண்டால், அது எதில் வந்து முடியுமோ என்ற திகிலும் உண்டாயிற்று. எனவே, அதிலிருந்து கலா மன்றத்துக்குச் செல்லுவதை அவன் அறவே நிறுத்தி விட்டான்.

* * *

அந்த மணலில் படுத்துக் கொண்டே அரைத் தூக்கத்தில் ஆழ்ந்திருந்த ராஜுவின் மனத் திரையில் மேலே குறிப்பிட்ட சம்பவங்கள் எல்லாம் தோன்றி மறைந்தன. இரவு நேரமாகி விட்டபடியால் அவன் வாரிச் சுருட்டி எழுந்து வீட்டுக்கு விரைந்தான்.

இரவு வெகு நேரமாகியும் ராஜா ராவ் வீட்டுக்கு வராததைக் குறித்துப் பாரதி மிகவும் கலக்கம் அடைந்தாள். அமைதியின்றி வீட்டில் அங்குமிங்கும் போய்க் கொண்டிருந்தாள்.

கடைசியில் ராஜா ராவின் காலடிச் சத்தம் கேட்டபின்தான் பாரதியின் மனக் கலக்கம் குறைந்தது.

ராஜா ராவ் வீட்டுக்குள் நுழைந்தபோது அவன் தந்தை வராந்தாவில் அங்குமிங்கும் உலாவிக் கொண்டிருந்தார்.

"ஏன், அப்பா! இன்னும் நீங்கள் தூங்க வில்லையா?" என்று கேட்டுக் கொண்டே ராஜா ராவ் உள்ளே வந்தான்.

"தூக்கமாம், மண்ணாங்கட்டியாம்! இந்த ஜன்மத்தில் எனக்குத் தூக்கம் எங்கேயடா

வரப் போகிறது !" என்று அலுத்துக் கொண்டார் வெங்கய்யா பாபு.

தந்தை கூறியதைக் கேட்டதும் ராஜு திடுக்கிட்டான். தன் தந்தை அவ்வளவு கோபமாகவும் சலிப்புடனும் இருந்ததை ராஜு தன் வாழ்க்கையிலேயே இதற்கு முன் கண்டதில்லை.

அவன் உள்ளே சென்று தந்தைக்கு என்ன உடம்பு என்று பாரதியைக் கேட்டான். பாரதி மாலையில் நிகழ்ந்த சம்பவத்தை அவனிடம் கூறத் துணியவில்லை.

"அவருக்கு உடம்பு ஒன்றுமில்லை. வயதாகி விட்டது அல்லவா! அதனால்தான் சிற்சில சமயங்களில் அப்படி யிருக்கிறார். வயல்களுக்குப் போய் வந்த களைப்புப் போலிருக்கிறது" என்றாள் பாரதி.

பாரதியின் பதில் ராஜுவுக்குத் திருப்தியை அளிக்கவில்லை.

"சாப்பிட வாருங்கள். ஏன் இன்று இவ்வளவு நாழி ஆகிவிட்டது! முன்பே வந்திருக்கக் கூடாதோ!" என்றாள் அவள் கொஞ்சுங்குரலில்.

"பாரதி, எனக்காக உன்னை இவ்வளவு நேரம் கண் விழிக்கும்படி செய்து விட்டேன். ஆற்று மணலில் படுத்துக் கொண்டே இருந்து விட்டேன். குளிர்ந்த காற்றில் பொழுது போனதே தெரியவில்லை" என்றான் ராஜு.

அச்சமயம், "பாரதியைப் போன்ற அருமையான மனைவியை அடைந்துள்ள எனக்கு வாழ்க்கையில் சந்தோஷம் இல்லை எனில், அது வேறு யார் குற்றமும் இல்லை, என் குற்றமே யாகும்" என்று எண்ணினான் ராஜு.

"இவ்வளவு உத்தமமான பெண்ணின் மீது யாரோ பொய்ப் புகார் கூறித் தந்தையின் மனத்தைக் கலைத்து விட்டிருக்கிறார்களே!" என்று மனத்துள் வருந்தினாள் பாரதி.

அன்றிரவு வெகு நேரம் வரையில் ராஜுவும் பாரதியும் அளவளாவிக் கொண்டிருந்தனர். அன்றிரவே ராஜு தன் எதிர்காலத்தைப் பற்றி ஒரு முடிவுக்கு வந்தான்.

வயோதிகரான தந்தை வயல்களுக்குப் போய் வருகையில், தான் மாத்திரம் வீட்டில் உட்கார்ந்து கொண்டு சோம்பேறியாக வாழ்க்கை நடத்துவது மன்னிக்க முடியாத குற்றம் என்று அவனுக்குத் தோன்றியது.

* * *

மறுநாள் விடியற்காலம் பாரதி சமையல் அறையில் தயிர் கடைந்து கொண்டிருந்தாள். அவளது வாய் மெதுவாக ஒரு பாட்டை முணுமுணுத்துக் கொண்டிருந்தது.

அச் சமயம் "எஜமான்! பாபு!" என்று யாரோ உரக்கக் கத்துவது பாரதிக்குக் கேட்டது.

அவள் உடனே வாயிற்புறம் ஓடி வந்தாள். தன் வீட்டு வேலைக்காரன் வெங்கய்யாவை எழுப்பிக் கொண்டிருப்பதைப் பார்த்தாள். அவளுக்குக் கோபம் மூண்டது.

"வீரய்யா, ஏன் இப்படிக் கத்துகிறாய்! அவரை எழுப்பாதே. இரவெல்லாம் அவர் சரியாகத் தூங்கவில்லை. உனக்கு என்ன வேண்டும்!" என்று கேட்டாள்.

"அம்மா! தெருவில் இருந்த ஒரு வண்டியையும் கொட்டிலில் இருந்த பெரிய ஜோடி மாடுகளையும் காணவில்லை, அம்மா!" என்று பதறிக் கொண்டே கூறினான் வீரய்யா.

"சின்ன எஜமான் வண்டியை ஓட்டிக் கொண்டு மேற்கு வயலுக்குச் சென்றிருக்கிறார். சிறிய வண்டியைப் பூட்டிக் கொண்டு உன்னைக் கிழக்கு வயலுக்குப் போகும்படி சொன்னார். அங்கு மாலையில் வந்து எவ்வளவு வேலை நடந்திருக்கிறது என்பதைப் பார்ப்பதாகக் கூறினார்" என்றாள் பாரதி.

அதைக்கேட்ட வீரய்யா திகப்பிரமைகொண்டு இருந்த இடத்திலேயே வாயைப் பிளந்தவாறு அசையாமல் நின்றான்.

"என்ன, அம்மா! எம். ஏ. பட்டம் பெற்ற சின்ன எஜமான் வயல்களுக்குச் செல்லுவதா!" என்று கேட்டான்.

"பட்டம் பெற்றவர்கள் வயல்களில் வேலை செய்யக்கூடாது என்று எந்த சாஸ்திரத்தில் சொல்லி யிருக்கிறது! சரி, சரி, நீ சின்ன வண்டியை ஓட்டிக் கொண்டு செல்" என்று உத்தரவிட்டாள் பாரதி.

இந்தச் சம்பாஷணையைக் கேட்டுக் கொண்டே எழுந்திருந்த வெங்கய்யா பாபுவிடம் பாரதி சென்று, "அதற்குள் எழுந்து விட்டீர்களே. இன்னும் சிறிது நேரம் கழித்து எழுந்திருக்கக் கூடாதா!" என்றாள்.

"பாரதி! நீ எனக்கு மருமகளாகக் கிடைத்தது நான் செய்த தவப் பயன்தான். நேற்று இந்தக் கிழவன் யார் பேச்சையோ கேட்டுக் கொண்டு ஏதோ உளறியதை யெல்லாம் மறந்துவிடு. இருந்தாலும் அதற்காக நீ எனக்கு இப்படித் தண்டனை கொடுக்கக் கூடாது."

"ஏன் அப்படிச் சொல்லுகிறீர்கள், அப்பா! நான் ஏதாவது அவமரியாதையாகப் பேசி விட்டேனா! அல்லது ஏதாவது தவறு செய்து விட்டேனா!" என்று பதறினாள்.


"நீ நல்ல குலத்தில் பிறந்த பெண். எனவே, நீ எப்படி அவமரியாதையாக நடந்து கொள்ள முடியும்! இருந்தாலும் வீட்டு வேலைகளையெல்லாம் நீ பார்த்துக் கொண்டு விடுகிறாய். இது வரை வயல் வேலைகளையாவது நான் கவனித்து வந்தேன். இப்போது அந்த வேலைகளை அவன் கவனிக்கத் தொடங்கி விட்டான். இனி நான் வீட்டில் யாதொரு வேலையுமின்றிப் பேசாமல் முடங்கிக் கிடக்க வேண்டியதுதான்" என்றார் வெங்கய்யா பாபு செல்லமாக.

"நீங்கள் வயல்களுக்குச் சென்று ஓடியாடி உழைத்ததெல்லாம் போதும். இனி வயல் வேலைகள் உங்கள் உடல் நிலைக்கு ஏற்றதல்ல. ஆகையால் வீட்டிலேயே இருந்து கொண்டு எங்களுக்குப் புத்திமதி சொல்லி வாருங்கள், அதுவே போதும்."

"சரி, சரி. வீட்டில் யாதொரு வேலையுமின்றி உட்கார்ந்திருக்க முடியுமா! கூடிய சீக்கிரம் ஒரு குழந்தையையாவது பெற்றுக் கொடு. அதனுடனாவது விளையாடிக் கொண்டு வீட்டிலேயே இருக்கிறேன்."

இவ்விதம் வெங்கய்யா பாபு கூறியதைக் கேட்டதும் பாரதி நாணத்தினால் தலை குனிந்த வண்ணம் சிரித்துக் கொண்டே சமையல் அறைக்குச் சென்று விட்டாள்.

Printed & Published by T. Sadasivam at the "Kalki" Press, No. 20, Dr. Guruswamy Mudaliar Road, Kilpauk, Madras - 10. Editor : Mi. Pa. Somasundaram


"ஹா!
லைப்பாய் சோப்பை
உபயோகித்து குளிக்க
வேண்டிய நேரம் இதுதான்."
— அது சரீரத்தை சுத்தமாக்கு
வதுடன் புத்துணர்ச்சியைத்
தருகிறது!
LIFEBUOY
SOAP
L. 253-50 TM
இந்தியாவில் தயாரித்தது.

REGISTERED No. M 4392
Registered as newspaper in Ceylon

